www.onlineuthayan.com

பக்கங்கள் : 28

# உதயன்

சுடர் 27
கதிர் 230

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 29 வெள்ளிக்கிழமை (13/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## மன்னார் விபத்தில் மாணவன் சாவு

மன்னார், ஜூலை 13

மன்னார் நடுக்குடாப் பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்ட மாணவனை மோதித் தள்ளியது பிக்கப் வாகனம். படுகாயமடைந்த மாணவன் பேசாலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் மன்னார் நடுக்குடாப் பகுதியைச் சேர்ந்த பத்திமா மகாவித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் உதயகுமார் நிதன் (வயது 12) என்ற மாணவனே உயிரிழந்தவர் ஆவர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் பாடசாலை முடிந்து தனியார் பஸ்ஸில் நடுக்குடாப் பகுதியில் உள்ள வீடு நோக்கிச் சென்றுள்ளார்.

நடுக்குடாப் பகுதியில் பஸ்ஸில் இருந்து இறங்கிய குறித்த மாணவன் பஸ் நிறுத்தப்பட் 04

## வடக்கு, கிழக்கு காணிகளை விசேடமாக பதிவதற்கு கட்டாயப்படுத்தும் சுற்றறிக்கையை விலக்க இணக்கம்

### நீதிமன்றத்தில் எழுத்து மூலம் அரசு சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூலை 13

வடக்கு, கிழக்கில் உள்ள காணிகளின் விவரங்களை அதன் உரிமையாளர்கள் பதிவு செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் விதத்தில் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையை விலக்கிக் கொள்வதாக அரசு நேற்று மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்து மூலம் உறுதியளித்தது.

இதனையடுத்து, இந்த சுற்றறிக்கையை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்திருந்த மனுதாரரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்படி வழக்கை விலக்கிக் கொள்ள நீதிமன்றில் இணக்கம் தெரிவித்தார்.

மேற்படி வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா, திபாலி விஜேசுந்தர ஆகியோர் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையை விலக்கிக் கொள்வது பற்றிய அரசின் முடிவை, அரசு சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர்ஜெனரலும் ஜனாதி 04

# வடமாகாணத் தேர்தல் தொடர்பில் மஹிந்தவிடம் ஏதோ உள்நோக்கம்



### சந்தேகம் வெளியிடுகிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி

சென்னை, ஜூலை 13

இலங்கையின் வடக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ள கருத்தில் உள்நோக்கம் காணப்படுவதாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர்விடுத்துள்ள அறிக்கையில் 04

## இலங்கைக்கு சீனா மீண்டும் ஆதரவு தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 13

இலங்கையின் உள்விவகாரங்களில் வேறு நாடுகள் தலையீடு செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கைக்கான சீனத் தூதுவர் வூஜியான்கோ தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தி 50 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சுயாதீனத்தன்மை மற்றும் இறைமையைப் பாதுகாக்கும் முனைப்புக்களுக்குச் சீன அரசு தன்னாலான உதவிகளை இலங்கைக்குத் தொடர்ச்சியாக வழங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். 04

## முறிகண்டியில் சொந்தக் காணியில் 19 குடும்பங்கள் நேற்று மீள்குடியமர்வு

கிளிநொச்சி, ஜூலை 13

மனிக்பாம் முகாமில் தங்கவைக்கப்பட்ட 19 குடும்பங்கள் நேற்று முறிகண்டிப்பகுதியிலுள்ள தத்தமது சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றப்பட்டனர்.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் முகாமிலிருந்து பஸ்களில் ஏற்றவரப்பட்ட மக்கள் முறிகண்டி இந்து வித்தியாலயத்தில் இறக்கப்பட்டு கிராம அலுவலரினால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவர்களது காணிகளில் குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த மாதம் மீள்குடியேற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டுப் பின்னர் அதற்கு அனுமதிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்ட 33 குடும்பங்களில் மனிக்பாம் முகாமிலுள்ள 19 குடும்பங்களே நேற்றுக் குடியமர்த்தப்பட்டனர். ஏனைய 04

## இணையத்தளங்களின் பதிவுக்கு 1 லட்சம் ரூபா

### கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கியது அரசு

கொழும்பு,ஜூலை 13

இணையத்தளங்கள் மீதான கட்டுப்பாடுகளை அரசு மேலும் இறுக்குகிறது. இணையத்தளங்களைப் பதிவு செய்வதற்கான கட்டணமாக ஒரு லட்சம் ரூபா எனவும் அதனைப் புதுப்பிப்பதற்கு வருடாந்தம் 50 ஆயிரம் ரூபாவும் செலுத்த வேண்டும். இதற்கு அமைவாக இலங்கை பத்திரிகை சபைச் சட்டத்திலும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

வெகுசன ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனை உறுதிப்படுத்தினார். 04

## ஊடக அடக்குமுறைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்




கொழும்பு,ஜூலை 13

ஊடகங்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மற்றும் ஊடகவியலாளர்கள் கொழும்பு 04

## கடற்படையும் அதிரடிப்படையும் சட்டவிரோத காணி சுவீகரிப்பில்

### குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.க.

கொழும்பு,ஜூலை 13

அம்பாறை மாவட்டத்தில் கடற்படையினரும் விசேட அதிரடிப்படையினரும் சட்டவிரோதமாகப் பொதுமக்களின் காணிகளைச் சுவீகரிப்பதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ குற்றஞ்சாட்டியுள்ளார். கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். 04

## பிரபாகரனால் முடியாது போனதை பொன்சேகா மூலம் செய்ய முயற்சி

### அமெரிக்காவைச் சாடுகிறது தேசிய சுதந்திர முன்னணி

கொழும்பு,ஜூலை 13

லிபியாவில் கிளர்ச்சி ஏற்பட்டதால் அமெரிக்கப் படைகள் அங்கு விமான தாக்குதல் நடத்தின. இலங்கையை இந்த நிலைக்கு மாற்ற அமெரிக்கா விரும்புகிறது.பிரபாகரன் மூலம் அதனைச் செய்ய முடியாது போனது. இன்று சரத் பொன் 04

## நிமலரூபன் கொலையைக் கண்டித்து நெல்லியடியில் கவனயீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 13

வவுனியா சிறைக் கைதிகள் மீது விசேட அதிரடிப் படையினரும், சிறைக்காவலர்களும் இணைந்து நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் நிமலரூபன் என்ற கைதி கொல்லப்பட்டதைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற ஏற்பாடாகி 04

## பிரி. பிரதமர் இல்லம் முன்பாக கறுப்பு ஜூலை தின நிகழ்வுகள்

### தமிழர் பேரவை அழைப்பு

லண்டன்,ஜூலை 13

பிரிட்டன் பிரதமரின் வாசஸ்தலம் முன்பாக எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணி முதல் 8 மணி வரை நடைபெற உள்ள கறுப்பு ஜூலை நினைவு நிகழ்வில் சகல தமிழ் மக்களையும் கலந்து கொள்ளுமாறு பிரிட்டன் தமிழர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் பிரிட்டன் தமிழர் பேரவை 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை – இந்தியா இடையே புதிய வர்த்தக உடன்படிக்கை

## அமைச்சரவை அங்கீகாரம்

**இலங்கைக்கும்—இந்தியாவுக்கும் இடையிலான ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களுக்கான இரட்டை வரி விதிப்பை நீக்கவும் வருமானத்தை அதிகரிக்கவும் கூடிய வகையில் இந்தப் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.**

கொழும்பு,ஜூலை 13

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் புதிய உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட சிபார்சுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. இலங்கைக்கும்-இந்தியாவுக்கும் இடையிலான ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களுக்கான இரட்டை வரி விதிப்பை நீக்கவும் வருமானத்தை அதிகரிக்கவும் கூடிய வகையில் இந்தப் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது. இலங்கை - இந்தியா உயர்மட்ட அதிகாரிகள் மட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்ற பேச்சுக்களின் பலனாகவே இந்த உடன்படிக்கை தயாராகவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த உடன்படிக்கை செய்து கொள்வதற்கான காரணங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் அமைச்சரவைச் சகாக்களுக்குத் தெளிவுபடுத்தினார். ஜனாதிபதியின் சிபார்சுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. (த-2)

## அண்ணாமலைப் பல்கலையின் பட்டப்படிப்பு பதிவு பற்றிய விளக்கம்

### யாழ்ப்பாணத்தில் பேராசிரியர் சச்சி

யாழ்ப்பாணம், ஜூலை13

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இளமாணியிலிருந்து கலாநிதிப்பட்டம் வரைபட்டப்படிப்புக்கு யாழ்ப்பாணத்தவர்களும் பதிவு செய்து கல்வி பயில்வதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ், ஆங்கிலம், கணினியில், வங்கியியல், பொருளியல், சந்தையியல், வணிகவியல், கணக்கியல், நிதியியல், சமூகவியல், அரசியல், சட்டவியல், நூலகவியல், கணிதவியல், பொது நிர்வாகவியல் ஆகிய துறைகளில் பல்வேறு பட்டப்படிப்புகளை வீட்டில் இருந்தபடியே தொடர முடியும்.

பி.ஏ, பி.எஸ்.ஸி, பி.கொம், எம்.ஏ, எம்.எஸ்.ஸி, எம்.கொம், எம்.பி.ஏ, எம்.ஸி.ஏ. மற்றும் பி.எச்.டி. பட்டப்படிப்புகளுக்கு பதிவுசெய்து கல்வியைத் தொடர வகை செய்யப்பட்டுள்ளது.

பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, கர்நாடக சங்கீதம், வயலின், வீணை மற்றும் தேவாரப் பண்ணிசை போன்றவற்றிலும் பி.ஏ, எம்.ஏ. கலாநிதி மற்றும் டிப்ளோமா சான்றிதழ் கல்வியை பெற முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தெற்காசிய நாடுகள் மற்றும் ஐரோப்பா போன்ற மேற்கத்திய நாடுகளிலும் வெற்றிகரமாக தமது பங்களிப்பைச் செய்து வரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலிருந்தபடியே தொடரக்கூடிய வகையில் பதிவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் சம்பந்தமாக விளக்கமளிப்பதற்காக அப்பதிவுகளுக்குப் பொறுப்பான ஐரோப்பிய, இலங்கை இயக்குநர் பேராசிரியர் கலாநிதி ச.சச்சிதானந்தம் தற்போது யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

அவரை எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை இல.20(32), யாழ். இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் சந்திக்க முடியும். 0778271006 என்ற தொலைபேசி இலக்கம் மூலமும் அவருடன் தொடர்பு கொள்ள முடியும். (த)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை13

திக்கம் மத்திய சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவும், சரஸ்வதி சிலைக்கான அடிக்கல் நாட்டுதலும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சுறோம்படி வைரவர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலைய தலைவர் க.நிதர்ஷன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (16)



சமூக சேவைகள் அமைச்சின் செயலாளராக யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நியமிக்கப்பட்டார். அவருக்குரிய நியமனக் கடிதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கினார்.

## இசட் புள்ளி பற்றி ஆராய ஐந்து பேர் கொண்ட குழு

### ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில்

யாழ்ப்பாணம், ஜூலை 13

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையின் இசட் புள்ளிப் பட்டியலை பழைய மற்றும் புதிய பாடத்திட்டத்துக்கு அமைய வெளியிடுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதையடுத்து, மீண்டும் கணிப்பீடு செய்வது பற்றி ஆராயவென ஐந்து பேராசிரியர்களைக் கொண்ட குழுவொன்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இசட் புள்ளிகளைக் கணிப்பீடு செய்தவர்களுள் இரண்டு பேர் இந்த ஐவர் கொண்ட குழுவில் உள்ளடங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களை உள்ளடக்கியதாக முன்னர் வெளியிடப்பட்ட இசட் புள்ளிப்பட்டியலை கடந்த 25 ஆம் திகதி இரத்துச் செய்த உயர்நீதிமன்றம் அதனை மீண்டும் கணிப்பீடு செய்து தனித்தனியே வெளியிட உத்தரவிட்டிருந்தது.

அவ்வாறு உத்தரவிட்டு இரண்டு வாரங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் ஐவர் கொண்ட குழு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி இது தொடர்பான வழக்கு உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இது தவிர உயர் நீதிமன்றம் உத்தரவிட்டு இரண்டு வாரங்களின் பின்னரே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அரசு வேண்டுமென்றே இந்த விடயத்தில் காலம் தாழ்த்திச் செயற்படுவதாகவும், இதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. இனியாவது விரைந்து செயற்பட்டு இசட் புள்ளிப்பட்டியலை வெளியிடுமாறு கோரியுள்ளது. (த-4)

## வேட்பு மனுத் தாக்கல் நேற்று ஆரம்பமானது

கலைக்கப்பட்ட கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபை தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நேற்று முதல் எதிர்வரும் 19ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சைக் குழுக்கள் தங்களது கட்டுப்பணத்தை எதிர்வரும் 14ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை செலுத்தலாம்.

தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 19ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் 3 ஆயிரத்து 247 வாக்குச் சாவடிகள் தேர்தலுக்காக அமைக்கப்படவுள்ளதாவும் அத்துடன் வாக்கெண்ணும் பணிகளுக்காக 236 மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

வாக்குச் சாவடிக்கு 10 அரச ஊழியர்கள் என்ற ரீதியில் 32 ஆயிரத்து 470 பேரும் வாக்கெண்ணும் மத்திய நிலையங்களுக்கு தலா 40 அதிகாரிகள் வீதமும் மொத்தம் 9 ஆயிரத்து 442 பேர் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என அவர் மேலும் கூறினார்.

தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுவுடன் இம்முறை அதன் பிரதியொன்றும் சமர்ப்பிக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு வேலை தேடுவோருக்கு மாவட்ட மட்டத்தில் பயிற்சி நிலையம்

**வருடத்தில் 265,000 பேர் வெளிநாட்டு வேலைக்காகச் செல்வதோடு அதில் 113,000 பேர் வீட்டு வேலைக்குச் செல்கின்றனர்.**

கொழும்பு,ஜூலை 13

வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் இலங்கைப் பணியாளர்களுக்கு விசேட பயிற்சி வழங்கும் நோக்கில் மாவட்ட ரீதியில் பயிற்சி வள மத்திய நிலையங்களை அமைக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன் பேணல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

வருடத்தில் 265,000 பேர் வெளிநாட்டு வேலைக்காகச் செல்வதோடு அதில் 113,000 பேர் வீட்டு வேலைக்குச் செல்கின்றனர். இவர்களுக்கு வெளிநாட்டில் சென்று வீடுகளில் பணிபுரியும் விதம் மற்றும் மொழி குறித்துப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இவ்வாறான மத்திய நிலையமொன்று தங்காலையில் தற்போது அமைக்கப்பட்டு வரும் நிலையில் இரத்தினபுரியில் அடுத்த மத்திய நிலையம் அமைக்கப்படவுள்ளது.

200 பெண்கள் தங்கியிருந்து பயிற்சி பெறும் வசதிகளுடன் இந்தப் பயிற்சி வள மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்கள்.

✱ கொழும்பு ஆனந்தாக் கல்லூரி விளையாட்டு மைதானத்துக்கு மூன்றரை ஏக்கர் காணி

இந்தக்கல்லூரிக்கு சகல வசதிகளுடனும் கூடிய விளையாட்டு மைதானம் ஒன்றை அமைக்க ராஜகிரியவில் மூன்றரை ஏக்கர் காணி இலவசமாக வழங்கப்படும். அதேவேளை ராஜகிரியவில் சந்திரா டி சில்வா விளையாட்டரங்கை விஸ்தரிப்பதற்குத் தேவையான காணி ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே மாநகர சபைக்கும் வழங்கப்படும்.

✱ இலங்கை- இந்திய வர்த்தக உடன்படிக்கை

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களுக்கான இரட்டைவரியை நீக்கிக்கொள்ளும் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படும்.

✱ புத்திஜீவிகளினதும், படைப்பாளிகளினதும் சொத்துகளைப் பாதுகாக்கும் [illegible]டம்

புத்திஜீவிகள், எழுத்தாளர்கள், ஓவியர்கள் மற்றும் புதியவற்றைக் கண்டுபிடிப்பவர்களின் ஆக்கங்களையும், படைப்புகளையும் பாதுகாக்கும் வகையில் 2003/36 ஆம் இலக்க புத்திஜீவிகள் சொத்துகள் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும்.

✱ மாவட்டங்கள் தோறும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கான பயிற்சி மையங்கள்

வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளை அதிகரிக்கவும் வெளிநாடுகளுக்குத் தேவையான பயிற்சிகளை [illegible] தோறும் பயிற்சி மையங்கள் அமைக்கப்படவுள்ளன ஏற்கனவே இரத்தினபுரியில் 200 பேர் பயிற்சி பெறுவதற்கான பயிற்சி நிலையம் 274 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தங்காலையில் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. ஏனைய மாவட்டங்களில் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

✱ தெங்குப் பொருள்கள் உற்பத்தியை ஊக்குவிக்க கியூபாவுடன் ஒப்பந்தம்

தற்பொழுது வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் [illegible] மில்லியன் தேங்காய் [illegible] 3,650 மில்லியனாக அதிகரிக்கும் வகையில் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சிகளுக்காக உதவிகளைப் பெறும் வகையில் இலங்கைக்கும் கியூபாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படும்.

✱ வடபகுதியுடனான பாதை இணைப்பும் அபிவிருத்தியும் வடமாகாணத்துக்கும் பிற மாவட்டங்களுக்கும் இடையிலான இணைப்புகளை ஏற்படுத்தும் வகையில் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. வடக்கில் 170 கிலோமீற்றர் தேசிய பாதைகளும், வடமத்திய மாகாணத்தில் 140 கிலோமீற்றர் பாதைகளும் நவீனமயமாக்கப்படவுள்ளன. இதற்கான செலவு 173 மில்லியன் அமெரிக்க டொலர்.

✱ 2013 ஆம் ஆண்டு பாடப்புத்தகங்களை அச்சிட 1,597,637,818 ரூபா 2013 ஆம் கல்வி ஆண்டுக்கான 322 விதமான 29,173,950 பாடப்புத்தகங்கள் அச்சிடப்படவுள்ளன. இதற்காக 1,597,637,818 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பு 18 அங்கீகரிக்கப்பட்ட அச்சகங்களிடம் ஒப்படைக்கப்படும். அனைத்துப் பாடசாலைகளுக்கும் 2012 ஆம் ஆண்டு இறுதிக்குள் விநியோகிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேடிக்கை பார்க்கப் போய் மூக்கை இழந்தார் ஒருவர்

யாழ்ப்பாணம், ஜூலை 13

மதுபோதையில் இரு குழுக்களுக்கிடையில் நடைபெற்ற கைகலப்பை வேடிக்கை பார்க்கச் சென்ற நபர் மூக்கில் கடியுண்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு சுன்னாகம் கொத்தியாலடிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது;

சுன்னாகம் கொத்தியாலடிச் சந்தியில் நிறைந்த மது போதையில் இரு குழுக்கள் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தனர். சிறிது நேரத்தில் வாக்குவாதம் அதிகரித்து இறுதியில் கைகலப்பாக மாறியது.

தோட்ட வேலை முடிந்து வீடு திரும்பும் போது வழியில் இடம்பெற்ற கைகலப்பை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் ஒருவர். இந்த நிலையில் கைகலப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நபர் திடீரென ஓடிவந்து வேடிக்கை பார்த்தவரின் மூக்கைக் கடித்துள்ளார்.

மூக்கில்கடியுண்ட ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த இரத்தினம் உதயதாஸ் (வயது-34) என்ற நபர் தற்போது தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-14-36)

## நிகழ்வுகள் இன்று

**பரிசளிப்பு விழா**

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா காலை 9.30 மணிக்கு வித்தியாலய அரங்கில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் வே.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ம-9)

**நினைவு நிகழ்வு**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் அ.அமிர்தலிங்கம் நினைவு நிகழ்வு பிற்பகல் 4.30 மணிக்கு இல.30 மாட்டீன் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்டக் கிளை தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையை தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் அருட்கலாநிதி க.தஜபநேசன் நிகழ்த்துவார். இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏற்பாட்டில் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் நினைவுதின நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு இல.57/48 ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. கட்சியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பலர் நினைவுப் பேருரை நிகழ்த்துவர். (ம-14)

**பொதுக்கூட்டம்**

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

# நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட பட்டதாரிகள் நேற்று போராட்டம்





*யாழ்ப்பாணம், ஜூலை 13*

***இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டதைப் போன்று தமக்கும் நியமனங்கள் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து யாழ்.மாவட்ட உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் யாழ்.மாவட்டச் செயலகத்தின் முன்பாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.***

இலங்கை முழுவதும் அரச சேவைக்கு ஆள்களைச் சேர்க்கும் முகமாக பட்டதாரிகளுக்கு பயிலுநர் பட்டதாரி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நியமனங்களின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் முகாமைத்துவக் கற்கை நெறி பட்டத்துக்கு சமனானது என்று அங்கீகரிக்கப்பட்ட உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறிப் பட்டதாரிகளுக்கும், ஏனைய மாவட்டங்களில் நியமனம் வழங்கப்பட்டது.

இந்த நியமனங்களின் போது யாழ்.மாவட்ட உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் மட்டும் பட்டதாரிப் பயிலுநர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு பின்னர் எந்தவிதமான அறிவித்தலுமின்றி நியமனம் வழங்கப்படாது நிறுத்தப்பட்டது.

இது தொடர்பில் உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் யாழ்.மாவட்ட அரச அதிபருடனும் அமைச்சின் அதிகாரிகளுடனும் கலந்துரையாடிய போதும் நியமனங்கள் வழங்கப்படுவது தொடர்பில் உறுதி எதுவும் வழங்கப்படவில்லை.

இந்த நிலைமையை அடுத்து ஏனைய மாவட்டங்களில் உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டதைப் போன்று தமக்கும் வழங்குமாறுகோரி நேற்றுக் காலையிலிருந்து மதியம் வரையில் யாழ்.மாவட்ட செயலகத்தின் முன்பாக அமைதியான முறையில் கவனஈர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இதன்போது மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் இல்லாத காரணத்தால் பட்டதாரிகள் சுலோகங்களை தாங்கிப் பிடித்தவாறு அமைதியானமுறையில்தமதுஎதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்த நிலையில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகுகனேசனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அரச அதிபர் ஆர்ப்பாட்டக்காரரைக் கலைந்து செல்லுமாறும் நியமனம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பட்டதாரிகளை கலைந்து செல்லுமாறும் அரச அதிபர் நியமனம் வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் பட்டதாரிகளுக்கும் பொலிஸாருக்குமிடையே வாக்குவாதம் இடம்பெற்றது.

இதன்போது நேற்றுமுன்தினம் தாம் அரச அதிபருடன் கலந்துரையாடியபோது எமக்கு நியமனம் வழங்கப்படமாட்டாது என்று அவரால் கூறப்பட்டது என்று பட்டதாரிகள் கூறினர்.

வாக்குவாதம் இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் சம்பவ இடத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலி வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர்தன் ஆகியோர் வருகை தந்தனர்.

இதன் பின்னர் பட்டதாரிகளுடனும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருடனும் கலந்துரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நாளைய தினம் அரச அதிபரை நானும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பட்டதாரிகளின் பிரதிநிதிகள் சிலரும் சந்தித்துக் கலந்துரையாடுவோம். அதன் பின்னர் அடுத்த கட்டமாக நீதிமன்றத்தை நாடுவோம் என்று கூறினார். இதனையடுத்து நண்பகல் 12.15 மணியளவில் பட்டதாரிகள் கலைந்து சென்றனர். (ம-5)

## கொக்குவில் மயானப் பகுதியில் கொட்டும் கழிவுகளால் துர்நாற்றம்

வலி. வடக்கு, ஜூலை 13

கொக்குவில் இந்து மயானத்தில் கொட்டப்படும் கழிவுப் பொருள்களால் மயானத்தைப் பயன்படுத்த வருபவர்களும் வீதியால் செல்வோரும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

அது மட்டுமன்றி இந்தப் பகுதியில் வசிக்கும் மக்களும் இதனால் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

மயானத்தில் கொட்டப்படும் கழிவுகள் மற்றும் இறந்த மிருகங்களால் இந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்படுகிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நிலவிய இத்தகைய பிரச்சினைகள் குறித்து பிரதேச சபைக்கு முறையிடப்பட்டிருந்த நிலையில் இந்த விடயம் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

தற்போதும் இந்தச் செயற்பாடு தொடர்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## ஓட்டோவில் வந்திறங்கிய கும்பல் எரிபொருள் நிலையத்தில் அட்டகாசம்

### பணியாளர் காயம்; பெற்றோல் பம்பி சேதம்

*யாழ்ப்பாணம், ஜூலை 13*

இனந்தெரியாத கும்பல் ஒன்று திடீரென மேற்கொண்ட தாக்குதல் காரணமாக யாழ். பிரதான வீதியில் உள்ள மடத்தடி எரிபொருள் விற்பனை நிலையம் சிறிது நேரம் அல்லோலகல்லோலப்பட்டது. கடந்த செவ்வாய்க் கிழமை முற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலால் பணியாளர் ஒருவர் காயமடைந்ததுடன் பெற்றோல் பம்பியும் சேதமடைந்தது.

இந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு ஓட்டோவில் திடீரென வந்திறங்கிய குழு ஒன்று அங்கு நின்ற பணியாளர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுப் பின்னர் அவர்களைத் தாக்கத் தொடங்கியது.

எரிபொருள் நிலையத்தில் நின்றிருந்த பணியாளர்களைக் கொட்டன்களால் தாக்கத் தொடங்கியமையால் பணியாளர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். இதன்போது பணியாளர் ஒருவர் தடக்கி விழுந்து காயமடைந்தார்.

இதன் பின்னர் அந்தக் குழுவினர் அங்கிருந்த 'டிஜிற்றல்' எரிபொருள் பம்பியைச் சேதப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. காரணம் எதுவும் தெரிவிக்கப்படாமல் திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலால் அந்தப் பகுதி சிறிது நேரம் அல்லோலகல்லோலப்பட்டது.

இ[illegible]ரத்தை அடுத்து எரிபொருள் நிரப்பும் நிலையம் மூடப்பட்டது. பணியாளர்கள் உடனடியாக வீடுகளுக்குத் திரும்பினார்கள்.

இதுகுறித்து எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். எனினும் இந்தத் தாக்குதல் தொடர்பில் இதுவரை எவரும் கைதாகவில்லை.

இதேவேளை, எரிபொருள் நிலையத்தில் சேதமாக்கப்பட்ட 'டிஜிற்றல்' எரிபொருள் பம்பி கடந்த புதன்கிழமை பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ்.பிராந்திய அலுவலகத்தால் சீர்செய்யப்பட்டதுடன் எரிபொருள் நிலையமும் [illegible] வழமைபோல இயங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## போஷாக்கு விழிப்புணர்வு கண்காட்சி வேலணையில்

யாழ்ப்பாணம்,ஜூலை 13

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதாரம் மற்றும் போஷாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

போசாக்கு மட்டம் குறைவடைந்து செல்கின்ற நிலைமையால் அதனை அதிகரிக்கும நோக்குடன் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அருமை புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி சி.சிவராணி, யுனிசெவ் யாழ்.பிராந்திய அதிகாரி முஸ்ஸா யுவிசு, பிராந்திய தொற்று நோய் தடுப்பு அதிகாரி வைத்திய கலாநிதி சு.சிவகணேஸ், தாய்சேய் நல வைத்திய கலாநிதி திருமகள் சிவசங்கர், பிராந்திய மலேரியா தடுப்பு வைத்திய கலாநிதி இ.சிவசங்கர், தீவகம் வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன், புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர் கே.கணேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர். (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரி.பிரதமர் இல்லம் முன்பாக கறுப்பு ஜூலை தின நிகழ்வுகள்

01 விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களுக்கெதிரான சிங்கள அரசின் இன அழிப்பின் இரத்தக்கறை படிந்த மற்றொரு அத்தியாயம் ' ஜூலை 23'. காடையர்களால் 3000 க்கும் அதிகமான மக்கள் கொடூரமாக கொல்லப்பட்டும், பல கோடிகள் பெறுமதியான அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகவும் ஆக்கப்பட்டனர். குட்டிமணி,தங்கத்துரை உட்பட ஏராளமான தமிழ் சிறைக் கைதிகள் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர்.இந்த அவலம் முள்ளிவாய்க்கால் வரை தொடர்ந்து இன்றும் அரங்கேற்றப்பட்டு வருகிறது. குறிப்பாக சில தினங்களுக்கு முன்னர் வவுனியா சிறைச்சாலையில் தமிழ்க் கைதியான நிமலரூபன் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னர் பல்லாயிரக் கணக்கான இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டு, சித்திரவதைக் கூடங்களிலும் தடுப்பு முகாங்களிலும் சிறைக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு தினமும் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவிப் பொதுமக்கள் மற்றும் போராளிகள் பலரைப் படுகொலை செய்து காணாமற் போனோர் பட்டியலில் சேர்த்து வருகின்றது இலங்கை அரசு.

1983 ஜூலை நிகழ்வுகளை நினைவு கூரும் அதே வேளை தொடரும் இன அழிப்பின் அங்கமான தமிழினத்துக்கு எதிராக இலங்கை அரசால் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்ற படுகொலைகளையும், தமிழ் மக்களை அவர்களது பூர்வீக நிலங்களில் குடியேறவிடாது, அதை அபகரித்து, தமிழர் தாயக நிலங்களை துண்டாடி சிங்களமயமாக்கலை நடத்தி வருவதையும் உடனடியாக தடுத்து நிறுத்துமாறு சர்வதேசத்திடம் முறையிடுவோம்-என்றுள்ளது. (த)

## மன்னார் விபத்தில் மாணவன் சாவு

01 டிருந்த வேளை பஸ்ஸின் முன்பக்கத்தால் சென்று வீதியைக் கடக்க முற்பட்டுள்ளான்.

இந்த நேரத்தில் அதே திசையால் பஸ்ஸுக்கு பின்னால் வந்த பிக்கப் வாகனம் மாணவனை மோதியது.

தலைமன்னார் பொலிஸார் பிக்கப் சாரதியை கைது செய்து விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (த-16-12)

## இலங்கைக்கு சீனா மீண்டும் ஆதரவு தெரிவிப்பு

01 இரு நாடுகளுக்கும் இடையில்மிக நீண்ட காலமாக கலாசார ரீதியான பிணைப்புக்கள் நீடித்து வருகின்றது. சர்வதேச அரங்கில் எவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டாலும் இலங்கை அரசுடன்சீனா அரசு தொடர்ந்தும் நட்புறவைப் பேணி வரும் என அவர் உறு தியளித்துள்ளார்.

# இணையத்தளங்களின் பதிவுக்கு 1 லட்சம் ரூபா

01 அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சில் இடம்பெற்றது.

அதில் இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் விளக்கம் அளிக்கும் போது மேலும் தெரிவித்ததாவது,

சட்டவிரோதமான முறையில் இயங்கும் இணையத்தளங்களைப் பொறுப்புக் கூறும் வகையில் பதிவு செய்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இதனைச் சட்டரீதியாக நடைமுறைப்படுத்தும் வகையில் இலங்கை பத்திரிகைச் சபைச் சட்டத்தின் 5 ஆம் இலக்கப் பிரிவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்து கொள்ளத்தவறும் இணையத்தளங்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டுக் கடுமையானநடவடிக்கைஎடுக்கப்படும்.

இணையத்தளங்களைப் பதிவு செய்வதற்கான கட்டணமாக ஒரு லட்சமும், வருடாந்தம் புதுப்பிப்பதற்கான கட்டணமாக வருடாந்தம் 50 ஆயிரம் ரூபாவும் வசூலிக்கப்படும் இந்தப் புதிய சட்டத் திருத்தம் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளதால் ஏற்கனவே பதிவு செய்துள்ள இணையத்தளங்களும் இந்தக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்றார் அமைச்சர்.

இணையத்தளங்களைப் பழிவாங்கும் வகையில் ஒரு தண்டனையாகவே இவ்வளவு பெரும் தொகை கட்டணமாக அறவிடப்படுகின்றது? என ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேட்டனர் அதற்கு அமைச்சர்,

“அரசுக்கு அப்படியொரு பழிவாங்கும் நோக்கம் இல்லை. அச்சு ஊடகங்களும் இன்று பணம் செலுத்தியே தம்மை பதிவுசெய்துகொண்டுள்ளன. பத்திரிகைகளுக்கான பதிவுக் கட்டணத்தையும் அதிகரிக்க உத்தேசித்துள்ளோம்.

சகல ஊடகங்களும் இவ்வாறு பதிவுசெய்யப்படும். தனிப்பட்ட முறையிலும் பொதுவாகவும் தவறானதும் திரித்தும் செய்திகளை வெளியிட்டு அவதூறு விளைவிக்கும் இணையத்தளங்களை இனங்கண்டு விளக்கம் கோரவும் சட்டநடவடிக்கை எடுக்கவும் வசதியாக இருக்கும்.

சட்டம் ஒழுங்களுக்கு அமைவாக நேர்மையான வகையில் செயற்படும் ஊடகங்கள் தம்மைப் பதிவுசெய்து கொள்ள பயப்படவேண்டிய நிலை இல்லை என்றார். (த-2)

# வடக்கு, கிழக்கு காணிகளை விசேடமாக பதிவதற்கு கட்டாயப்படுத்தும் சுற்றறிக்கையை விலக்க இணக்கம்

01 பதி சட்டத்தரணியுமான யுவன்ஜன் விஜேதிலக எழுத்தில் சமர்ப்பித்தார். வடக்கு, கிழக்கில் உள்ள காணிகளை அதன் உரிமையாளர்கள் பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தும் மேற்படி சுற்றறிக்கை 2010 இல் காணி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டமையை அடுத்து அது பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருந்தது. இந்தப் பதிவுகள் தொடர்பில் பிணக்குகள் எழும்போது அது குறித்து விசாரித்து, காணி உரிமையாளர் யார் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தைச் சம்பந்தப்பட்ட பிரதேச அரச அதிகாரிகள், இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் போன்றோரைக் கொண்ட பிரதிநிதிகள் குழுவிடம் ஒப்படைக்கவும் இந்த சுற்றறிக்கையில் வகை செய்யப்பட்டிருந்தது.

அந்த நடவடிக்கையை ஆட்சேபித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தாக்கல் செய்திருந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வருடமே பூர்வாங்க விசாரணை செய்த பின்னர் சுற்றறிக்கையினால் விதிக்கப்பட்ட காலக்கெடு பற்றிய ஏற்பாட்டுக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருந்தது.

நேற்று இந்த மனு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிர் மனுதாரர்களான காணி அமைச்சர், காணி ஆணையாளர் நாயகம், வடக்கு, கிழக்கு மாவட்டங்களின் காணி ஆணையாளர்கள் போன்றவர்களின் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் யுவன்ஜன் விஜேதிலக மேற்படி சுற்றறிக்கையை முற்றாக விலக்கிக் கொள்ள அரசு தயார் என எழுத்தில் உறுதிதெரிவித்தார்.

இதனையடுத்து, தேவை எழுந்தால் இது போன்ற ஒரு வழக்கை மீண்டும் தாக்கல் செய்வதற்கான தமது உரிமையை பதிவுசெய்து கொண்டுவழக்கை விலக்கிக் கொள்ள மனுதாரர் தயார் என மனுதாரர்கள் தரப்புச் சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர். அதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது. மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் விரான் கொரயா, பவானி பொன்சேகா, றொகான் குணதிலக ஆகியோரின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி கனகஈஸ்வரன் ஆஜரானார். (த)

# வடமாகாணத் தேர்தல் தொடர்பில் மஹிந்தவிடம் ஏதோ உள்நோக்கம்

01 மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறுமென இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆனால் தேர்தல் நடைமுறைகளில் வாக்காளர்கள் பட்டியல்கள் புதுப்பிக்கப்பட வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார். இதில் ஏதோவொரு உள்நோக்கம் கொண்ட கருத்து இருப்பதாகத் தெரிகின்றது. இது பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

இதேவேளை, இலங்கையின் வவுனியாச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிலர், கடந்த மாதம் பூசாவுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஏனைய முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள், பூசாவுக்கு மாற்றப்பட்டவர்களை மீண்டும் வவுனியா சிறைச்சாலைக்கு கொண்டு வர வேண்டுமெனக் கோரியுள்ளனர். இதற்கு மறுப்புத் தெரிவித்த சிறைச்சாலை அதிகாரிகள் மூவரை இவர்கள் ஒரே அறையில் வைத்துப் பூட்டினர். இதனால் வவுனியா சிறைச்சாலையில் கலவரம் ஏற்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து வவுனியா சிறைச்சாலையிலிருந்த 201 கைதிகளும் அநுராதபுரத்திலுள்ள சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தக் கலவரத்தின்போது தமிழ அரசியல் கைதிகள் பலர் காயமடைந்ததுடன், கணேசன் நிமலரூபன் என்பவர் மரணமடைந்துள்ளார். ஆனால் அவர் மாரடைப்பால் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிமலரூபனின் சடலத்தை வவுனியாவில் தகனம் செய்ய வேண்டுமென பெற்றோர் கோரியபோதிலும், இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், மற்றுமொரு தமிழ் அரசியல் கைதி மயக்கமானநிலையில் வைத்தியசாலையிலுள்ளார்- என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறிகண்டியில் சொந்தக் காணியில் 19 குடும்பங்கள் நேற்று மீள்குடியமர்வு

01 குடும்பங்கள் விரைவில் குடியமர்த்தப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்தவர்களில் 8 குடும்பங்களுக்குத் தற்காலிகமாக கால் ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டு அதில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களது சொந்தக் காணிகள் மூன்று மாதகாலத்துக்குள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ரி.திரேஸ் குமார் மற்றும் அப்பகுதி கிராமசேவகர்களும் கலந்து கொண்டனர். (ங-16-6)

## நிமலரூபன் கொலையைக் கண்டித்து நெல்லியடியில் கவனயீர்ப்பு போராட்டம்

01 யுள்ளது. நெல்லியடி பஸ் நிலையத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ளது.

இது குறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் அரசியல் கைதிகள் மீது இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் நடைபெறுவது இது முதல் தடவையல்ல வெலிக்கடை, பிந்துனுவெவ, வவுனியா என்று இது நீள்கிறது. தமிழ் அரசியலில் இவர்கள் இயங்கு சக்தியாக திகழ்ந்ததாலேயே இவ்வாறு படுகொலை செய்யப்படுகின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகள் கொலை செய்யப்படுவதைக் கண்டித்தும், தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரியும், தமிழர் தாயகத்தில் அரசு மேற்கொள்ளும் நிலப்பறிப்பைக் கண்டித்தும் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை அமைதியாகவும் ஜனநாயக முறையிலும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு பொது மக்கள், பொது அமைப்புகள், அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத் தலைவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம். - என்றுள்ளது. (ங)

## கடற்படையும் அதிரடிப்படையும் சட்டவிரோத காணி சுவீகரிப்பில்

01 விவசாயிகளுக்கும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கும் உரிய இந்தக் காணிகளை இராணுவக் கிராமமொன்றையும் கடற்படைத்தளத்தையும் ஹோட்டலொன்றையும் அமைப்பதற்காக அவர்கள் துப்புரவு செய்வதாக அவர் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை துரோகியாகச் சித்தரிப்பதன் மூலம் அவரின் ஆதரவாளர்களை அதைரியப்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கிறது எனவும் அவர் கூறினார் பொன்சேகாவைத் துரோகியாகப் போலித் தேசப்பற்றாளர்கள் சித்தரிக்கின்றபோதிலும் இந்த நாட்டின் உண்மையான தேசப்பற்றாளராகப் பொன்சேகாவை நாம் காண்கிறோம். தேசப்பற்றாளருக்குப் பொன்சேகா ஒரு சிறந்த உதாரணமாவார் எனவும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.(த)

## ஊடக அடக்குமுறைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

01 லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்று ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர். இணையத்தளங்கள் மீதான புதிய ஒழுங்குவிதிகளை நீக்குமாறு அவர்கள் வலியுறுத்தியதுடன் ஊடகவியலாளர்களுக்கு எதிரான பயமுறுத்தல்கள், அச்சுறுத்தல்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர்கள் வலியுறுத்தினர். ஐ.தே.க. பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஜே.வி.பி. பிரசார செயலாளர் விஜித ஹேரத், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, விக்கிரமபாகு கருணாரட்ன, சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியை பிரெட்ரிகா ஜேன்ஸ், சந்தியா எக்னெலிகொட உட்பட பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். (த)

## பிரபாகரனால் முடியாது போனதை பொன்சேகா மூலம் செய்ய முயற்சி

01 சேகாவை அனுப்பி அதனைச் செய்ய முனைகின்றனர் என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது. தேசிய சுதந்திர முன்னணி நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அரசியல் சபை உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிலர் அரசை வீட்டுக்கு அனுப்பும் நோக்கில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். ஐ.தே.க, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரச சார்பற்ற நிறுவனங்கள் அவ்வாறு கூறும் பிரிவில் உள்ளனர். அரசுக்குள் உள்ள பொருளாதாரக் கொலை அதிகாரிகளும் இதில் ஒரு பிரிவினராவர். அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் எனக் கூறும் அனைத்துப் பிரிவினரும் அதிகாரத்தைக் கைப்பற்றச் சூழ்ச்சி செய்பவர்கள். அந்தச் சூழ்ச்சியை அமெரிக்கா முன்னின்று நடத்துகிறது.இந்தச் சூழ்ச்சியின் பின்னணியில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் ஊடகப் பேச்சாளராக சரத் பொன்சேகா செயற்படுகிறார்.பிரிட்டன் ஊடகவியலாளருக்கு அவர் வழங்கிய செவ்வியில் இது உறுதியாகிறது.

புலி ஆதரவாளர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது சரத் பொன்சேகா 20,10 18 வாக்குகளையே பெற்றார். ஜனாதிபதியுடன் தனிப்பட்ட குரோதங்கள் இருக்கலாம். ஆனால் அதற்காக நாட்டு மக்களைப் பழிவாங்க வேண்டாம் என நாம் கேட்டுக் கொள்கிறோம்-என்றார். (த)

# சிங்கள வியாபாரிகள் மோசடி ஏமாறும் முல்லைத்தீவு மக்கள்

## வர்ணக் கோழிக்குஞ்சுகள் வெண்ணிறமாகும் அதிசயம்

*முல்லைத்தீவு, ஜூலை 13*

*தென்பகுதியிலிருந்து வரும் சிங்கள வியாபாரிகள் முல்லைத்தீவுப் பகுதியில் மக்களைப் பல்வேறு வழிகளிலும் ஏமாற்றி வருகின்றனர். இவர்களுக்கு இராணுவத்தினரின் ஆதரவு இருப்பதால் சிங்கள வியாபாரிகளின் தில்லுமுல்லுகள் பற்றி வாய்திறக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மக்கள் தெரிவிக்கின்றனர்.*

முல்லைத்தீவு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது அங்கு எட்டியும் பார்த்திராத தென்பகுதி சிங்கள வியாபாரிகள் போருக்கு பின்னர் இங்கு தாராளமாக நடமாடுகின்றனர். இராணுவத்தினரின் பூரண பாதுகாப்பு இவர்களுக்கு இருப்பதால் அச்சமின்றிப் பல இடங்களுக்கும் சென்று வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

விதவிதமான பொருள்களுடன் வரும் சிங்கள வியாபாரிகள் அவற்றை எப்படியாவது இங்குள்ள மக்களின் தலையில் கட்டிவிடுவதில் குறியாக உள்ளனர்.

இவ்வாறான சிங்கள வியாபாரிகள் சிலர் அண்மையில் முல்லைத்தீவுக்கு கோழிக்குஞ்சுகளோடு வந்தனர். மிகவும் தந்திரமான வகையில் கோழிக்குஞ்சுகளுக்கு விதவிதமான சாயங்களைப் பூசி, அவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நல்லினக் கோழிக்குஞ்சுகள் என்று கூவிக்கூவி விற்பனை செய்கின்றனர். இதனை நம்பி முல்லைத்தீவு மக்களும் அதிக விலை கொடுத்து அவற்றை வாங்கி உள்ளனர்.

எனினும் பல வர்ணங்களில் காட்சியளித்த அந்த 'நல்லினக் கோழிக்குஞ்சுகள்' சில நாள்களில் சாயம் வெளுத்து, வெண்மை நிறத்துக்கு மாறிய பின்னர்தான் தாம் ஏமாற்றப்பட்ட விடயம் மக்களுக்கு புரிந்துள்ளது. இவ்வாறு ஒவ்வொரு நாளும் மோசடிப் பொருள்களுடன் வரும் இத்தகைய சிங்கள வியாபாரிகளால் மக்கள் ஏமாற்றப்படும் சம்பவங்கள் தொடர்கின்றன. ஆனால் இத்தகைய மோசடி வியாபாரிகள் மீது பொலிஸாரோ, படையினரோ நடவடிக்கை எதுவும் எடுப்பதில்லை எனவும் மாறாக இந்த வியாபாரிகளுக்கு படையினர் சிலர் துணை புரிந்து வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(ங-க-500)

## குடிதண்ணீர் பாத்திரங்களுக்குள் விஷமிகளின் சிறுநீர்

### வவுனியா விபுலானந்தக் கல்லூரியில் ஈனத்தனம்

*வவுனியா, ஜூலை 13*

*வவுனியா, பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரியில் விஷமிகள் சிலர் மாணவர்கள் பயன்படுத்தும் குடிதண்ணீர் பாத்திரங்களுக்குள் சிறுநீர் பெய்து ஈனத்தனமான முறையில் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர் என்று கல்லூரிச் சமூகத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.*

*இத்தகைய இழி செயல்கள் கடந்த செவ்வாயன்று இரவு இடம்பெற்றுள்ளன.*

*குறித்த கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெறவிருந்த நிலையிலேயே இவ்வாறான விஷமிகளின் ஈனச்செயல் அரங்கேறி உள்ளது.*

*இரவு வேளையில் கல்லூரிக்குள் புகுந்த சிலர் வகுப்பறைகளில் வைக்கப்பட்டிருந்த பூச்சாடிகளை சுக்குநூறாக்கினர். அத்துடன் கணினி அறையின் கண்ணாடிகளையும் உடைத்தனர். கூடவே மாணவர் தண்ணீர் அருந்துவதற்குப் பயன்டுத்தும் வாளிகளுக்குள் சிறுநீர் கழித்துவிட்டு சென்றிருந்தனர்.*

*இது தொடர்பாகப் பொலிஸாருக்கும் வவுனியா தெற்கு கல்விப்பணிப்பாளருக்கும் பாடசாலை நிர்வாகத்தால் முறைப்பாடு செய்யப்பட்டது. உடனடியாகச் சம்பவ இடத்திற்கு விரைந்த கல்விப்பணிப்பாளர் சேதங்களைப் பார்வையிட்டதுடன் அதிபர் ஆசிரியர்கள், பெற்றோர், ஆசிரியர் சங்கத்தினர், பழைய மாணவர்கள் ஆகியோருடன் அவசர கலந்துரையாடலையும் மேற்கொண்டிருந்தார்.*

*இதன்போது கருத்துத் தெரிவித்த கல்விப்பணிப்பாளர் ''மாணவர்களின் வன்முறைக் கலாசாரம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. இதற்கு முக்கிய காரணம் பாடசாலை நிர்வாகத்தின் பலவீனமும், ஆசிரியர்களுக்கிடையிலான முரண்பாடுகளுமே ஆகும். எனவே உடனடியாக இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு உரியவர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்'' என்று தெரிவித்தார். இது குறித்து பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*இதேவேளை ''பாடசாலைகளில் இடம்பெறுகின்ற இத்தகைய செயல்களுக்கு மாணவர்களை மட்டுமே குறைகூற முடியாது; இதில் ஆசிரியர்களுக்கும் பங்குண்டு'' எனச் சில பெற்றோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ங-க-400)*

## அம்மனுக்கு அரோகரா



மன்னாரில் மிகவும் பழமை வாய்ந்த இலுப்பைக்கடவை சுட்டபிட்டி சிறிமுத்துமாரி அம்பாள் ஆலய திருவிழாவின்போது பக்தர்கள் கள்ளியடி கற்பக விநாயகர் ஆலயத்தில் இருந்து பாற்காவடி, தூக்குக் காவடி, பாற்செம்பு போன்றவற்றை ஏந்தி நேர்த்திக்கடன்களைச் செலுத்தினர். (ங-12)

## உரிமைமாற்றத்துக்கு வாடகையின் நான்கு வருட முற்பணம்

### வரியிறுப்பாளர் வவுனியா நகரசபையிடம் கோரிக்கை

நான்கு வருட வாடகைப் பணத்தை முற்பணமாகப் பெற்று கடை உரிமத்தைக் கடையின் உரிமையாளருக்கு மாற்றிக் கொடுக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வவுனியா வரியிறுப்பாளர் சங்கம் வவுனியா நகர சபையைக் கோரியுள்ளது.

வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத்தினர் நகர சபைத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நகரசபைக்குச் சொந்தமான கடை உரிமை மாற்றம் தொடர்பாக கடந்த ஆண்டு இடம்பெற்ற வர்த்தகர்களுடனான கலந்துரையாடலின் போது, நான்கு வருட வாடகைப் பணத்தை முற்பணமாகப் பெற்றுக் கடை உரிமத்தை உரிமையாளர்களுக்கே மாற்றிக் கொடுப்பதற்கு சபையில் தீர்மானம் நிறைவேற்றப்படுமென உபதலைவர் எம்.எம்.ரதன் உறுதியளித்திருந்தார்.

ஆனால், தற்போது 12 வருட வாடகையை முற்பணமாகப் பெற்றே உரிமத்தினை உரிமையாளர்கள் பெயர்களுக்கு மாற்றுவதாக பத்திரிகை வாயிலாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இவ்விரு கருத்துகளுக்கும் இடையிலான வேறுபாட்டுக்கு என்ன காரணம் என்று எமக்குப் புரியவில்லை. ஆகவே இந்த விடயம் தொடர்பாகச் சகல வர்த்தகர்களையும் அழைத்து விளக்கத்தை வழங்குவதுடன் இது தொடர்பாக எமக்கு பூரண விளக்கத்தை வழங்க வேண்டும் என்றும் உள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வவுனியா வர்த்தகசங்கத்தினர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(க-400)

## திடீரெனத் தீப்பற்றியது வீடு மூதாட்டியும் பேரனும் வீதியில்

கிளிநொச்சி, ஜூலை 13

கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் மூதாட்டியொருவரின் வீடு திடீரெனத் தீப்பற்றி எரிந்ததால் வீட்டினுள் இருந்த பொருள்கள் யாவும் எரிந்து சாம்பலானது.

கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 10 மணியளவில் மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

குறித்த வீட்டில் வசித்து வந்த மூதாட்டியொருவரும் பெற்றோரை இழந்திருந்த பேரனும் அயலில் உள்ள ஒரு வீட்டில் வழமை போன்று துயிலச் சென்றுள்ளனர். அப்போது இரவு 10 மணியளவில் அவர்களது வீடு திடீரென தீப்பற்றி எரிந்தது. இதனைக் கண்ணுற்ற அயலவர்களும் அந்தப் பகுதியில் நின்ற இராணுவத்தினர் சிலரும் ஓடிச்சென்று தீயை அணைக்க முயற்சித்தனர். எனினும் தீ கொளுந்து விட்டு எரிந்தமையால் அந்த முயற்சி பயனளிக்கவில்லை. வீடும், ஆவணங்களும்ஏனையபொருள்களும் எரிந்து நாசமாகின.

வீடு முற்றாக எரிந்து போனதால் குறித்த மூதாட்டியும் அவரது பேரனும் வசிப்பதற்கு புகலிடம் இன்றி சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (ங-க-426)

## கஞ்சா மீட்பு

நெளுக்குளம், ஜூலை 13

வவுனியா பொது வைத்தியசாலையின் பின்புறத்தில் 2 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

வவுனியாப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து கடந்த செவ்வாய்க் கிழமை வவுனியா பொது வைத்தியசாலையில் கட்டட வேலையில் ஈடுபட்டிருந்த சிங்களத் தொழிலாளி ஒருவர் மறைத்து வைத்திருந்த இந்தக் கஞ்சாவை மீட்ட பொலிஸார் சந்தேக நபரையும் கைது செய்தனர்.

(ங-க-402)

## தாக்குதலில் தப்பிய நீதிமன்றப் பணியாளர்

முல்லைத்தீவு, ஜூலை13

வவுனியா நீதவான் நீதிமன்ற பணியாளர் மீது நேற்று முன்தினமிரவு இனம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் அவர் நூலிழையில் தப்பியுள்ளார்.

நேற்றுமுன்தினமிரவு10 மணியளவில் குறித்த பணியாளர் நீதிமன்ற விடுதிக்கு முன்பாக நின்று தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது திடீரென அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் அவர் மீது வெற்றுச் சோடாப் போத்தல்களை சரமாரியாக வீசினர். எனினும் அந்தப் பணியாளர் காயங்கள் எதுவுமின்றி இந்தத் தாக்குதலில் இருந்து தப்பியுள்ளார். பின்னர் மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் இது குறித்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ங-க-6)

## கல்லூரியாகத் தரமுயர்ந்த போதிலும் வளப் பற்றாக்குறையுடன் முருகானந்தா

கிளிநொச்சி, ஜூலை 13

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி, அண்மையில் கல்லூரி என்ற நிலைக்கு தரமுயர்த்தப்பட்ட போதிலும் ஆளணி மற்றும் பௌதீக வளங்கள் இதுவரை நிவர்த்தி செய்யப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் கண்டாவளைக் கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான முருகானந்தாக் கல்லூரி 'கல்லூரி' என்ற நிலைக்குத் தரமுயர்த்தப்பட்டாலும், அதன் ஆளணி மற்றும் பௌதீகவளப் பற்றாக்குறைகள் இதுவரை நிவர்த்தி செய்யப்படாது தொடர்ந்தும் அதே நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக க.பொ.த.உயர்தர வகுப்புகளில் முக்கிய பாடங்களுக்கு இதுவரை ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. அத்துடன் ஆரம்ப மற்றும் இடைநிலைப் பிரிவுகளிலும் கணிசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இதைவிடப் போதிய வகுப்பறை வசதிகள் இன்றிச் சுமார் பத்துக்கும் மேற்பட்ட வகுப்புக்கள் தற்காலிகமாக ஆபத்தான நிலையில் உள்ள வகுப்பறைக் கட்டடங்களிலேயே இயங்கிவருகின்றன.

இக்கல்லூரியில் கல்வி கற்கும் 80 வீதமான மாணவர்கள் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் முழுமையாகப் பாடசாலைக் கல்வியை மாத்திரமே நம்பியிருக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இந்த நிலையில் போதிய ஆசிரியர்கள் இல்லாமை மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறையால் மாணவர்களின் கல்வி [illegible] பாதிக்கப்பட்டுள்ளது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் காயமடைந்த பெண் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 13

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் மரணமானார்.

சம்பவத்தில் புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த கிட்டிணன் சாந்தினி (வயது - 30) என்பவரே மரணமானார். வீதியில் சென்றுகொண்டிருந்த டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியுள்ளது. அதில் சாந்தினியின் இரண்டு கால்களும் முறிவடைந்து, தலையில் படுகாயமடைந்த நிலையிலும், இதே இடத்தைச் சேர்ந்த ராமதாஸ் மைதிலி (வயது -34) என்பவர் சாதாரண காயத்துடனும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பின்னர் சாந்தினி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என அவரது தந்தையார் தெரிவித்தார்.

சுன்னாகம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

(த-4)

ஞாயிறு தோறும் யாழிலும் வலம் வருகிறது

'சுடர் ஒளி'

வாசகர்களே.....

இவ்வாரம் விருந்தாக.....

★ கைதி நிமலரூபன் மரணத்தின் மறுபக்கம்...
- திடுக்கிடும் பல தகவல்கள்

★ கருணாநிதியின் 'டெசோ' ஒத்திவைப்பு பம்மாத்து.

★ "அமைச்சர் பஸில் என்னை ஏமாற்றி விட்டார்" - பிரபா கணேசன் எம்.பி. பரபரப்புப் பேட்டி

★ அரசியல்வாதியின் மறுபக்கம்:
காதலுக்கு தூது சென்றவர் யார்? - மனம் திறக்கிறார் கலாநிதி விக்கிரமபாகு.


★ சந்திரிகாவுக்கு ஒரு பகிரங்க மடல்.

பிரதிக்கு முந்துங்கள்

(சி/1316)

அமரர் அதிபர் மணியம் கணபதிப்பிள்ளை
அவர்களின் 5 ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக அவர்களிடம்
கல்விபயின்ற மாணவர்களால் நடத்தப்படும்

மாபெரும் துடுப்பாட்டப் பெருவிழா




வடமராட்சி புகழ் துடுப்பாட்ட ஜாம்பவான்கள்
பருத்தி நகர் ஐக்கிய விளையாட்டுக்கழகம்
மற்றும்
தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகம்
நேருக்குநேர் சங்காரமிடும் வடமராட்சி ஜாம்பவான்களின் மகாயுத்தம்
பருத்தி நகரின் பெரும்சமர் 2012.
14-7-2012 சனிக்கிழமை மாலை 2.30 மணிமுதல் தும்பளை
கணக்கிலாவத்தை விளையாட்டரங்கில்
அமரரின் வகுப்பு நண்பனும் ஓய்வுபெற்ற யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபருமாகிய உயர்திரு. வேலுப்பிள்ளை சிவசிதம்பரம்
அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கும் பிரமாண்டத் திருவிழா.
அனைத்துத் துடுப்பாட்ட ரசிகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
விழா அமைப்புக்குழு.
ஊடக அனுசரணை: உதயன்

## விழிப்புணர்வுக் கண்காட்சி

எருவில்,ஜூலை13

மட்டக்களப்பு, சின்னவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சுகாதாரமும் ஆரோக்கியமும் தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி நாளை சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறவுள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையினால் நடத்தப்படவுள்ள இந்தக் கண்காட்சிக்கு ஐரோப்பிய ஒன்றியமும், ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கமும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளன.

மாதிரிப்பண்ணை அமைத்தல், வீட்டுத்தோட்டம் அமைத்தல், நடமாடும் வைத்திய முகாம், இரத்ததானம் ஆகியன தொடர்பான விழிப்புணர்வை வெளிப்படுத்தும் வகையில் கண்காட்சி நடைபெறவுள்ளதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டக்கிளை தெரிவித்துள்ளது.

(ச-31)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advert@uthayan.com
0215671111

# 39 வர்த்தகர்களுக்கு வழக்கு

மட்டக்களப்பு, ஜூலை 13

மட்டக்களப்பு மாவட்டத்தில், கடந்த 6 மாத காலத்துக்குள் சட்டவிரோதமான முறையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 39 வர்த்தகர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் 1 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான அபராதம் நீதிமன்றங்களினால் அறவிடப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அளத்தல், நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரை இடாமை, சரியான அளவைப் பயன்படுத்தாமை, நிறை குறைந்த பாண் விற்பனை ஆகிய குற்றங்களுக்காகவே இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

களுவாஞ்சிக்குடி, ஏறாவூர், வாழைச்சேனை ஆகிய நீதிமன்ற பிரிவுகளில் சுமார் 100 வர்த்தக நிலையங்கள் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டதாவும் இவர்களில் 39 பேர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் ஞானவைரவர் சுவாமி கோயில் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதிய உறுப்பினர் **திரு. அ.த.க.கிருஸ்ணராசா** அவர்கள் நேற்று (12.07.2012) வியாழக்கிழமை காலமானார்.

அவரது இழப்பிற்கு அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(20356) (14.6.3) நம்பிக்கை நிதியம்.

## கண்ணீர் அஞ்சலி




உரும்பிராய் ஞானவைரவர் சுவாமி கோயில்
தர்மகத்தா சபையின் தலைவர்
**திரு. அ.த.க.கிருஸ்ணராசா** அவர்கள்
இறைபதம் அடைந்ததையிட்டு அதிர்ச்சியுற்றோம்.

அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

உரும்பிராய் ஞான வைரவ சுவாமி கோயில்
(20357) (14.6.3) தர்மகத்தா சபையினர்.

## 43 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1957*03*17 | 2012*06*01 |



அமரர் நடராசா புஸ்பரசா
(உப தபாலதிபர், அளவெட்டி)

கடந்த 01.06.2012 வெள்ளிகிழமை இறைபதம் அடைந்த நடராசா புஸ்பராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும் வீட்டுகிருத்திய நிகழ்வுகளும் இன்று (13.07.2012) வெள்ளிக்கிழமை சுன்னாகம் கதிரமலை சிவன்கோயில் மணிமண்டபத்தில் நடைபெற இருப்பதால் இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

இத்தருணத்தில் நேரிலும், தொலைபேசியிலும் ஆறுதல் கூறியவர்களுக்கும் அவரின் இறுதி வழியனுப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

81, திருக்கடலூர்
திருகோணமலை.
0770237769
(சி/1463) (15-14-6)

அன்புத்தாய், தம்பிமார்,
தங்கைமார், மச்சான்மார்,
மச்சாள்மார் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# அமைச்சர் மீதான குற்றச்சாட்டு: நடவடிக்கை எடுக்கப்படுமா!

மூன்று மாகாணசபைகளின் பதவிக்காலம் முடியும் முன்னரே கலைக்கப்பட்டு இப்பொழுது மிக விரைவில் தேர்தல்கள் நடைபெறவிருக்கும் தருணத்தில் அரசின் சார்பில் பெரும் பிரசார பீரங்கியாக களமிறங்கக் கூடிய நிலையில் இருப்பவரான அமைச்சர் விமல்வீரவன்ச மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கொழும்பில் நேற்றுமுன்தினம் பெரும் எடுப்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

அரசுசார்பு தொழிற் சங்கங்களால் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக நடத்தப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசுசார்பு தொழிற் சங்கங்கள் யாவும் கலந்துகொண்டதாகவும் அமைச்சர் ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றாமல் தமது அமைச்சில் நிகழும் பல ஊழல்களுக்கு பொறுப்பாக இருந்து வருவதாகவும் அரச தொழிற் சங்கங்களின் கூட்டுக் குழுவின் அமைப்பாளர் துஷார குணசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விமல்வீரவன்ச 35 வாகனங்களுக்கும் அதிக வாகனங்களை தமது சொந்தப் பாவனைக்கு பயன்படுத்து கின்றார். தனது ஆதரவாளர்களுக்கு தமது அமைச்சில் இல்லாத பதவிகளுக்கு ஆள்களை நியமித்துள்ளார். அவர்கள் வேலைக்கு வராவிட்டாலும் பெருந்தொகை சம்பளமாக வழங்கப்படுகிறது. ஆனால் எமக்குக் கடந்த மூன்று வருடங்களாக சம்பள உயர்வு வழங்கப்பட வில்லை. எனவே எமது உரிமைகளை வென்றெடுப்பதற் காகத் தொடர்ந்து போராடப்போகிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார். அரசுக்கு ஆதரவான எல்லாத் தொழிற் சங்கங்களும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்ததாக தெரிவித்த குணசேகர ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடனடியாகத் தலையிட்டு இந்தக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்றுவரும் ஊழல்களுக்கு முடிவு கட்டுவதுடன் தங்கள் சம்பளங்களை உயர்த்தி வழங்கும் படியும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஜனதா விமுக்தி பெரமுனையில் இருந்து விலகி தேசிய சுதந்திர முன்னணி என்ற கட்சியை அமைத்துக்கொண்டு அரசில் இணைந்து செயற்பட்டுவரும் அமைச்சர் வீரவன்ச அவ்வப்போது அரசின் சார்பில் சர்வதேசங்களை கண்டித்து வருபவர். நாட்டில் ஏற்படும் பிரச்சினைகளுக்கெல்லாம். அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளின் சதித்திட்டமே காரணம் என்ற வகையில் குற்றஞ்சாட்டுபவர்களில் இவரும் ஒருவர்.

இலங்கையில் நடந்து முடிந்த போர் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஐ.நா.செயலாளர் நாயகம் நிபுணர்குழு வொன்றை நியமித்த போது அந்தக் குழுவை கலைக்கும்படிகோரி கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலக வளாகத்தில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தவர். அந்த உண்ணாவிரதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நேரில் சென்று இளநீர் வழங்கி முடித்து வைத்தார். ஐ.நா.மனித உரிமை சபையின் பிரதிநிதிகள் இலங்கை வருவதை எதிர்ப்பவர்களில் இவரும் ஒருவர். அப்படிப்பட்ட ஒரு அமைச்சர் தமது சொந்தப் பாவனைக்காக 35 வாகனங்களை வைத்திருக்கிறார் என்றால் ஆச்சரியமாக இருக்கிறது. நாட்டு மக்களின் வரிப் பணம் எந்த அளவுக்கு துஷ்பிரயோகம் செய்யப்படு கின்றது என்பதை இதிலிருந்து கண்டுகொள்ளலாம்.

அண்மையில் றியோ டி ஜெனீரோவில் இடம்பெற்ற உலகத் தலைவர்கள் மாநாட்டுக்கும் கூட இந்த அமைச்சரை ஜனாதிபதி தம்முடன் அழைத்துச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு காலத்தில் நாட்டின் முதலாளித்துவ ஆட்சிக்கு எதிராகப் போராடிய இடதுசாரி அமைப்பான ஜனதா விமுக்தி பெரமுனையின் முக்கிய உறுப்பினராக இருந்துள்ள இவரும் இவர் போன்றவர்களும் தேசிய சொத்துகளை கபளீகரம் செய்கிறார்கள் என்பதை நம்ப முடியாமல் இருக்கின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை குறிப்பதான சிலை யொன்றை தீவட்டியால் எரிக்க முயலும் வீரவன்சவை யும், வீரவன்சவை தீவட்டிகொண்டு எரிக்க முயலும் தொழிற்சங்கவாதிகளையும் காட்டுகின்ற கேலிச்சித்திர மொன்றை வெளியிட்டு வீரவன்சவின் செயல்களை விமர்சித்துள்ளது டெய்லிமிரர் பத்திரிகை.

அமைச்சர் ஒருவர் சம்பந்தமான தொழிற்சங்கங்களின் குற்றச்சாட்டாக ஜனாதிபதி அசட்டை செய்துவிடலா காது. இது போன்று வேறு பலரும் இருக்கலாம். ஒரு அமைச்சர் தமது அடியாள்களை வைத்து கப்பம் வசூலிப்பதில் ஈடுபட்டு வந்தார் என்றும் கூட குற்றஞ்சாட்டுகள் முன்னர் எழுந்ததுண்டு.

எனவே தான் தொழிற் சங்கங்களால் முன்வைக்கப் படும் நாட்டுக்கும் அரசுக்கும் அவப்பெயர் கொண்டுவரும் இந்தமாதிரியான குற்றச்சாட்டுக்கள் பற்றி அரசு அசமந்தமாக இருந்து விடலாகாது என்கிறோம். முறையாக விசாரித்து நடவடிக்கை எடுப் பது அவசியம். குற்றச்சாட்டுகள் பொய்யாக இருக்கு மானால் அவ்வாறு பகிரங்கமாக பொய் கூறியவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பது குறித்தும் ஆலோசிக்கலாம்.

# நிரந்தர வருமானம் பெறுவோருக்கு வீடமைக்க 12.3 மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம், ஜூலை 13

தேசிய வீடமைப்பு அதிகார சபையுடன் இலங்கை வங்கியும் இணைந்து முதற்கட்டமாக நிரந்தர வருமானம் பெறுவோருக்கான ஒரு கிராமத்துக்கு ஒரு வீடும் எனும் வீட்டுத் திட்டத்துக்காக 12.3 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள் ளன என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச் சந்திரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

நிரந்தர வருமானம் பெறுவோ ருக்கான ஒரு கிராமத்துக்கு ஒரு வீடு எனும் வீட்டுத்திட்டத்தில் முதற் கட்டமாக 25 பேர் தெரிவாகியி ருந்தனர்.

இவர்களுக்கான கடன் தொகை 5 லட்சம் ரூபா வரையில் வழங்கப்பட்டுள்ளது. 24 பேருக்கு 5 லட்சம் ரூபாவும் ஒருவருக்கு 3 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டது.

ஒரு கிராமத்துக்கு ஒரு வீடு எனும் வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பிப்பவர்கள் தொடர்ந்து விண்ணப்பிக்க முடியும்.

நிரந்தர வருமானம் பெறுவோ ருக்கான சாதாரண வீட்டுக்கடன் திட்டத்தில் 62 பேருக்கு 23.6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளது.

இலங்கை வங்கியினூடாக முதற்கட்டமாக வழங்கப்படும் இந்தக் கடனில் 44 தரம் உயர்த் தலும் 18 புதிய வீடும் உள்ளடங் குகின்றன. கடன் தொகை 5 லட்சம் ரூபா வரையில் வழங்கப் படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13-16)

# விசேட தேவை உடைய மாணவருக்கு போட்டிகள்

வலி வடக்கு, ஜூலை 13

வட மாகாண கல்வித் திணைக்களத்தால் விசேட தேவை உடைய மாணவர்களின் கல்விப் பிரிவால் முதல் தடவையாக வட மாகாண மட்டத்திலான விசேட தேவை உடைய மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் இந்த மாத இறுதியில் நடத்தப்படவுள் ளன.

வட மாகாணத்துக்கு உட்பட்ட ஐநூறுக்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் கலந்துகொள்ளும் இந்தப் போட்டியில் விசேட தேவை உடைய மாணவர்களுக்கான பல் வேறு விளையாட்டுக்களும் இடம் பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன என்று விசேட கல்வி இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இந்தப் போட்டிகளை நடத்த நடவடிக்கை எடுத்து போதிலும் இயற்கை இடம் தராமையால் இந்தப் போட்டிகளை உரிய முறையில் நடத்தவில்லை எனவும் இந்த முறை இந்தப் போட்டிகள் மிகவும் எழுச்சியுடன் நடைபெறவுள்ளதாகவும் குறிப் பிடப்பட்டது. (ம-86)

## வடதாரகை நாளை கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

நெடுந்தீவுச் சேவையில் உள்ள அரச படகு வடதாரகை நாளை சனிக்கிழமை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப் படவுள்ளது என்று யாழ்.வீதி அபிவிருத்தி அதிகாரசபை எந்திரி எஸ்.சுதாகர் தெரிவித்தார். தற்சமயம் கடற்படையினரின் பொறுப்பில் உள்ள இந்தப் படகு, கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்படும் எனக் கூறப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கணித மதிப்பீடு

தென்மராட்சி, ஜூலை 13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் களுக்கான இரண்டாம் தவணைக் குரிய கணித மதிப்பீட்டுப் பரீட்சை யும் மீள வலியுறுத்தல் வழிகாட்டல் செயற்பாடும் இன்று நடைபெறும்.

தென்மராட்சி கல்வி வலயமும் சாவகச்சேரி சீ.எஸ்.சீ கணினி கல்வி நிறுவனமும் இணைந்து இந்தப் பரீட்சைகளை நடத்தி வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேலைத் திட்டங்களுக்குப் பட்டதாரிகள்

தென்மராட்சி, ஜூலை 13

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இணைந்து கட மையாற்றும் பட்டதாரி பயிலுநர் களில் சிலர் பொருளாதார அபி விருத்தி அமைச்சின் வேலைத் திட்டங்களுக்கு இணைக்கப்பட வுள்ளனர்.

தகைமையுள்ளவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று காலை 9 மணி தொடக்கம் பிரதேச செயலக மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குப் பட்டச் சான்றிதழ், இரண்டாம் பட்டம் பெற்ற சான்றிதழ், கணினிப் பயிற்சி பெற்றிருந்தால் அதற்குரிய சான்றிதழ், தொழில் அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றுடன் வருகை தருமாறு பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித் துள்ளார். (ம-9)

# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் திருக்கார்த்திகை

யாழ்ப்பாணம், ஜூலை 13

மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தின் திருக்கார்த்திகைத் திருவிழா நாளை சனிக்கிழமை விசேட பூசை வழிபாடுகளுடன் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் அதிகாலை 5.30 மணிக்கு உதயகால பூசை யுடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஸ்நபனாபிசேகம், காலை சந்தி பூசை, பிரசங்கம், இன்னிசைக் கச்சேரி, ஷண்முகார்ச்சனை, வீணைக் கச்சேரி, மெண்டலின் வாத்தியக் கச்சேரி, மேளவாத் தியக்கச்சேரி போன்ற விசேட நிகழ்வுகளும் இடம்பெறும்.

இதில் பக்தர்கள் நெய்தீபம் மாவிளக்கு ஏற்றி காவடிகள் ஏற்றி நேர்த்திக் கடன்களைநிறைவேற்ற லாம். (ம-14)

# மரியசேவியார் அடிகளாரின் குருத்துவப் பொன்விழா நிகழ்வு

கொழும்புத்துறை, ஜூலை 13

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகரும் இயக்குநருமான அருட்கலாநிதி நீ.மரியசேவியார் அடிகளாரின் குருத்துவ திருப்பொழி வின் 50 ஆண்டுகள் நிறைவின் பொன்விழா நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

ஆரம்ப நிகழ்வாக முற்பகல் 10 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம், லத்தீன் மொழிகளில் கூட்டுப்பிரார்த்தனையும், நன்றித் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் மேதகு ஜோசப் ஸ்பிற்றறி இதில் கலந்து கொள்வார்.

நண்பகல் 12 மணிக்கு யாழ். றக்கா வீதியில் அமையவுள்ள ஓவியக் காட்சியகத்துக்கான அடிக் கல்லை கொழும்பு பல்கலைக்கழக வேந்தரும் முன்னாள் கொழும்பு மறை மாவட்ட ஆயருமான பேரருள் திரு.ஒஸ்வேல்ட் கோமிஸ் ஆண்டகை நட்டு வைப்பார்.

மாலை நிகழ்வுகள் 3 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

இதன்போது பொன்விழா நாயகன் மரியசேவியர் அடிகளார் அவருடன் இணைந்து நிறைவைக் காணும் திருமலை-மட்டுநகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மன்னார் மடுமாதா சிறியகுருமட அதிபர் அருள்திரு சேவியர் குருஸ் அடிகள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கௌரவிப்பு உரைகளை பேராசிரியர் ஒஸ்வேட் கோமிஸ் ஆண்டகை, மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள், வண.தம்மகீர்த்தி தேரோ, மருத்துவர் ஜின்னா ஷெரிபுதீன் ஆகியோர் வழங்குவர்.

குருத்துவப் பொன்விழா நினைவு மலரை யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் திருமதி வசந்தி அரசரட்ணம் வெளியிட்டு வைப்பார். திருமறைக் கலாமன்ற அரங்கில் மாலை 6 மணிக்கு நடை பெறும் கலை நிகழ்வுகளில் தென்னிலங்கை திருமறைக் கலாமன்றங்கள் வழங்கும் நடனம், நாடகம் உட்பட பல நிகழ்வுகள் இடம்பெறும். (ம-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியின் மனைவியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட

# வவுனியா விடுதியில் உள்ள சிறுமிகளை வேறு இல்லங்களுக்கு மாற்றவும்

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் விநோ, ஆனந்தன் வலியுறுத்து

வவுனியா,ஜூலை 13

வவுனியா வைரவர் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள விடுதியில் தங்கியுள்ள சிறுமிகளை வேறு பொருத்தமான சிறுவர் இல்லங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

நேற்றுமுன்தினம் மேற்படி விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ள சிறுமிகள் விடுதிக்கு வெளியே வந்து தமது கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அங்கே வருகை தந்து நிலைமையை அவதானித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினர்.

இறுதிப்போரின் போது தமது பெற்றோரை இழந்த சிறுவர்களைப் பாதுகாப்பதற்கென ஜனாதிபதியின் பாரியாரால் இந்த விடுதி திறந்து வைக்கப்பட்டது.

தமக்கு தரமான உணவு வழங்கப்படுவதில்லை, தம்மைச் சுதந்திரமாக நடமாட அனுமதிப்பதில்லை, இரவு நேர விடுதிக்காப்பாளர் மற்றும் காவலாளிகளை உடன் மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்துச் சாப்பாட்டை மறுத்துப் பாதுகாப்பு இல்லத்தை விட்டு வெளியே வந்த சிறுமிகள் கத்திக் கூச்சலிட்டனர்.

இதனை அடுத்து அந்த இடத்துக்கு விரைந்த வவுனியாப் பொலிஸாரும், அந்தப் பகுதிக் கிராம சேவையாளரும் அவர்களைச் சாந்தப்படுத்தி பாதுகாப்பு இல்லத்துக்குள் செல்லுமாறு கேட்டுக் கொண்ட போதும் அதற்கு மறுப்புத் தெரிவித்த சுமார் 20இற்கும் மேற்பட்ட சிறுமிகள் தற்போது கடமையில் இருக்கும் காவலாளியையும், மேற்பார்வையாளரையும் உடனே வெளியேற்ற வேண்டும் என்றும் பகலில் கடமையாற்றும் மேற்பார்வையாளரான ரமணி அன்ரியை உடன் கூட்டி வரவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இதனை ஏற்றுக்கொண்டு கிராம சேவையாளரால் குறிப்பிட்ட மேற்பார்வையாளர் அழைத்துவரப்பட்டதும் மிகுந்த மகிழ்ச்சியுடன் பாதுகாப்பு இல்லத்துக்குள் சிறுமிகள் சென்றதுடன் மற்றைய இருவரையும் வெளியேற்றுமாறு விடாப்பிடியாக நின்றனர்.

இதனையடுத்து அந்த இடத்துக்கு விரைந்த விஷேட பொலிஸ் குழுவினரும், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறுமிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டதுடன் அதற்கு தலைமை தாங்கி வந்த சிறுமிகள் சிலரை அங்கிருந்து அகற்றிக் கோயில்குளம் அகிலாண்டேஸ்வரர் பெண்கள் இல்லத்தில் சேர்த்தனர்.

இதன்போது இந்த இடத்துக்கு வருகை தந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் சிறுமிகளுடன் கலந்துரையாடினர்.

பின்னர் இது தொடர்பாக கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், "சிறுமிகளைத் தங்க வைப்பதற்கு இந்தக் கட்டடம் பொருத்தமானதாக இல்லை. தினமும் இங்கு அவர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்குச் சுதந்திரம் இல்லாத அதேவேளை தரமான உணவுகளும் வழங்கப்படுவதில்லை. இதன் வெளிப்பாடாகவே தாங்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக சிறுமிகள் எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

"பெற்றோரைப் பிரிந்து பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் இந்தச் சிறுமிகளுக்குத் தரமான உணவு வழங்க நடவடிக்கை எடுப்பதோடு, அவர்கள் சுதந்திரமாக நடமாடவும் அனுமதிக்க வேண்டும். அத்துடன் அவர்களைப் பொருத்தமான வேறு சிறுவர் இல்லங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அவர்கள் மேலும் உளரீதியாகப் பாதிக்கப்படுவதுடன் சில விரும்பத்தகாத செயல்களிலும் ஈடுபடத் தூண்டப்படுவர்" என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் கருத்துத் தெரிவித்தனர். (க-400)

### விநாயகபுரம் முன்பள்ளிக்கு செஞ்சிலுவையால் உதவிகள்

கிளிநொச்சி விநாயகபுரம் முன்பள்ளிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் தளபாடங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விநாயகபுரம் முன்பள்ளியின் வசதியீனங்கள் குறித்து அந்தப் பகுதி கிராம அலுவலர் மற்றும் பொது அமைப்புகள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சங்கம் முன்பள்ளிக்கான தளபாடங்களையும் கற்றல் உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

மேற்படி பொருள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டத் தலைவர் த.குருகுலராஜா, கிளிநொச்சி மாவட்டத் திட்ட அலுவலர் இராஜசிறிகாந்தன், கரைச்சிப் பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் அமல்ராஜ் ஆகியோர் இவற்றை வழங்கி வைக்க கிராம அலுவலர் மற்றும் முன்பள்ளி ஆசிரியை, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெற்றுக்கொண்டனர். (க-6)

## மன்னார் மத்தியஸ்தர் சபையில் மக்களுக்கு சீரான சேவைகள்

### சபையின் தலைவர் பெருமிதம்

மன்னார்,ஜூலை13

மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மத்தியஸ்தர் சபை தனது சேவையைச் சீராக ஆற்றுவதாக அதன் தலைவரான பிரின்ஸ் டயஸ் தெரிவித்துள்ளார்.

சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பாக இயங்க ஆரம்பித்துள்ள இந்தச்சபையானது பல்வேறு பிணக்குகளையும், பிரச்சினைகளையும் தீர்த்து வைத்துள்ளது.

வங்கிகளால் அறவிட முடியாத கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் தொடர்பான பிணக்குகள், காணித் தகராறுகள், அடிதடிகள், சிறு பிணக்குகள் என்பன விரைவாக இங்கு தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

எந்தவிதமான பணச் செலவுமின்றி ஐந்து ரூபா முத்திரைக் கட்டணத்துடன் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒரு மாதத்தினுள் தீர்வு காணப்படுகின்றது.

எனவே முறைப்பாட்டாளர்கள் தங்களது பிணக்குகளுக்குத் தீர்வு காண விரும்பினால் மாதத்தின் முதல் மூன்று ஞாயிறு தினங்களில் முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் இரண்டு மணி வரையில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் வளாகத்துக்கு வந்து தங்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்யுமாறு மத்தியஸ்த சபையின் தலைவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-12)

### செயலமர்வு

கிளிநொச்சி வணிகத்துறை ஆசிரியர்களுக்கான செயலமர்வொன்று நாளை இடம்பெறவுள்ளது.

நாளை காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இந்தச் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகிய வகுப்புகளில் வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும், முயற்சியாண்மைக் கல்வி, மின் ஆவணப்படுத்துதலும் சுருக்கெழுத்தும் ஆகிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் கேட்டுக் கொண்டுள்ளார். (க-405)

## பால் உற்பத்தியில் தன்னிறைவு காண்பதே முக்கிய இலக்கு

### கிளிநொச்சி கால்நடை உதவிப் பணிப்பாளர் கூறுகிறார்

கிளிநொச்சி, ஜூலை13

கிளிநொச்சியைப் பால் உற்பத்தியில் தன்னிறைவு கொண்ட மாவட்டமாக மாற்றுவதே எமது இலக்காக உள்ளது. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கிளிநொச்சி மாவட்டக் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தின் உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ். கௌரி திலகன்.

ஒரு காலத்தில் பால் உற்பத்தியில் முன்னணி வகித்த இந்த மாவட்டத்தில் தற்போது பாலுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. போரின் போது கால்நடைகள் அழிந்தமையும், காணாமல் போனமையுமே இதற்கான முக்கிய காரணங்களாகும்.

இடப்பெயர்வுக்கு முன்னார் சுமார் 50 ஆயிரம் கால்நடைகள் இங்கு இருந்தன. ஆனால் தற்போது 30 ஆயிரம் கால்நடைகளே உள்ளன.

அத்துடன் நல்லினக் கால்நடைகளும் அழிவடைந்துள்ளன. தற்போது இவற்றைப் பெறுவதில் பல்வேறு சிரமங்கள் தோன்றியுள்ளன.

மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான கால்நடைகள் வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தின் கால்நடை அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு ஏற்ப நல்லின கால்நடைகளைப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளமை பெரும் தடையாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

## குடிப்பதற்கு நீரின்றி அலையும் கிளிநொச்சி கால்நடைகள்

அக்கராயன், ஜூலை 13

கடும் வரட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கால் நடைகள் குடிப்பதற்கு நீரின்றி அலைந்து திரிவதைக் காணமுடிகின்றது.

கடும் வெப்பம், வரட்சி, மழைபொய்த்தமை ஆகிய காரணங்களால் கிளிநொச்சியிலுள்ள நீர் நிலைகள் நீரின்றி காணப்படுகின்றன. இதனால் இவற்றை நாடி வரும் கால்நடைகள் குடிப்பதற்கு நீரின்றித் தவித்த நிலையில் அலைந்து திரிவதைக் காணமுடிகின்றது.

தற்போது சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளதால் கால்நடைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் மேய்ச்சல் தரவைகள் இல்லாததால் கால்நடை வளர்ப்பாளர்கள் இவற்றுக்கு உணவளிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் குடிப்பதற்கு நீர்இன்றி கால்நடைகள் பெரும் அவலநிலையிலுள்ளன.

இதேவேளை பூநகரியில் பெருமளவு கால்நடைகள் குடிப்பதற்கு நீரின்றி இறக்கும் நிலை தோன்றியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கடந்த ஆண்டும் இதே நிலை ஏற்பட்டுக் கால்நடைகள் பல இறந்துள்ளன.

மேலும் கால்நடைகளுக்கு நோய்த் தாக்கங்கள் ஏற்படும் வாய்ப்பும் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## நூலிழையில் உயிர் தப்பிய ஹயஸ் வாகனப் பயணிகள்

### தேக்கவத்தை ரயில்வேக் கடவையில் சம்பவம்

நெளுங்குளம், ஜூலை 13

வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவைத் தண்டவாளத்தில் சிக்கிய ஹயஸ் வாகனத்திலிருந்த, பயணிகள் நூலிழையில் உயிர்தப்பினர்.

நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த தேக்கவத்தை ஓட்டோ தரிப்பிடத்தில் நின்ற ஓட்டோ சாரதிகளும், அயலில் இருந்த பொதுமக்களும் துரிதமாகச் செயல்பட்டு ஹயஸ் வாகனத்தையும் அதில் பயணித்த பயணிகளையும் காப்பாற்றினர்.

நேற்றுமுன்தினம் இரவு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் சிலர் தேக்கவத்தை கற்குழி வீதியூடாக நெல்லி ஸ்ரார் ஹோட்டலுக்குச் சென்று கொண்டிருந்தனர். இவர்கள் தேக்கவத்தை ஆலடிச் சந்தியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட போது வாகனத்தின் சில்லொன்று தண்டவாளத்தினுள் சிக்கிக் கொண்டது.

அந்த வேளையில் சிறிய தூரத்தில் வவுனியா ரயில் நிலையத்தை நோக்கி ரயில் வந்து கொண்டிருந்தது.

நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த தேக்கவத்தை ஓட்டோ தரிப்பிடத்தில் நின்ற ஓட்டோ சாரதிகளும், அயலில் இருந்த பொதுமக்களும் துரிதமாகச் செயற்பட்டு ஹயஸ் வாகனத்தையும் அதில் பயணித்த பயணிகளையும் காப்பாற்றினர்.

சில விநாடிகளில் புகையிரதம் அந்த ரயில் கடவையைக் கடந்து சென்றது.

இந்த பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ஏற்கனவே இருவர் புகையிரதத்தில் மோதுண்டு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

### புனரமைக்கப்படாத மின்வாரிய வீதி

துணுக்காய், ஜூலை13

மல்லாவி மின்வாரிய வீதியில் புனரமைப்புப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாததால் இங்கு வசிக்கும் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றன.

இந்த வீதியானது மல்லாவி வைத்தியசாலைச் சந்தியிலிருந்து வடக்குப் பக்கமாகச் செல்கின்றது. அவசர தேவைகளுக்கென வைத்தியசாலைக்கு நோயாளர்களை அழைத்து வருவோர் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சந்திப் பகுதியிலிருந்து சுமார் 400 மீற்றர் நீளமான இந்த வீதி குன்றும் குழியுமாக மோசமான நிலையில் காணப்படுகின்றது.

இந்த வீதியை உடனடியாக புனரமைத்துத் தருமாறு இங்கு வசிக்கும் மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலி இடிகுண்டை புனரமைக்க நன்கு ஆராய்ந்து முடிவு எடுங்கள்

## பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஜூலை 13

கட்டுடைடயில் அமைந்துள்ள இடிகுண்டு நீர்த்தேக்கத்துக்கும் நிலாவரையில் உள்ள நீர்த்தேக்கத்துக்கும் அதிக வேறுபாடு உண்டு. நிலாவரை நீர்த்தேக்கத்திலுள்ள நீரூற்று போல் இடிகுண்டு நீர்த்தேக்கத்தில் இல்லை. இதுபற்றி அறிந்த கிராம சபைத் தலைவர் வி.மயில்வாகனம் 1937 ஆம் ஆண்டு கிராம சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இடிகுண்டு நீர்த்தேக்கத்தை மண்போட்டு மூடுவதற்கான முயற்சியை மேற்கொண்டார்.

எனவே இடிகுண்டு நீர்த்தேக்கத்தை அபிவிருத்தி செய்ய முன்பு இதுபற்றி நன்கு ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். இல்லையேல் இதற்குச் செலவு செய்யும் பல லட்சம் ரூபா வீண் விரயமாகிவிடும்.

இவ்வாறு வலி.தென் மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் கே.கெளரிகாந்தன் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இடிகுண்டு நீர்த்தேக்கத்தைப் பொது நிறுவனத்தின் நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்வது பற்றி ஆராயப்பட்டது.

அங்கிருந்த ஏனைய உறுப்பினர்களும் இது சம்பந்தமாக தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். நீர்த்தேக்கம் சம்பந்தமாக கே.கெளரிகாந்தன் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

இடிகுண்டு நீர்த்தேக்கம் 1902 ஆம் ஆண்டு உற்பத்தியானது. சிறிய அளவில் காணப்பட்ட இந்த நீர்த்தேக்கம் நாளுக்கு நாள் இடிந்து பெரிதாக வந்துள்ளது.

கிராம சபைத் தலைவராக இருந்த வி.மயில்வாகனம் என்பவர் இந்த நீர்த்தேக்கத்தால் எந்தவிதப் பயனும் ஏற்படாதென்று கருதி சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய 1937 ஆம் ஆண்டு கிராய்க்குளத்தில் மண் எடுத்து நீர்த்தேக்கத்தை மூடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டார். அதைத் தொடர்ந்து 1957 ஆம் ஆண்டு நீர்ப்பாசனத் திணைக்களமும் இந்த நீர்த்தேக்கத்தின் தன்மை பற்றி ஆராய்ந்து பார்த்தபோது இந்த நீர்த்தேக்கத்தில் சேறு இருந்ததால் கைவிட்டுச் சென்றது.

தற்போது இந்த நீர்த்தேக்கத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பொது நிறுவனம் முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

நிலாவரை நீர்த்தேக்கத்திலுள்ள நீரூற்றுப் போல் இடிகுண்டு நீர்த்தேக்கத்தில் நீரூற்று இல்லை என்பது கடந்த காலத்தில் இடம்பெற்ற ஆய்வுகளிலிருந்து அறியமுடிகின்றது.

எனவே இதுபற்றி நன்கு ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். இதற்குச் செலவாகும் பணம் வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுமானால் மக்கள் நன்மை அடைவதுடன் பிரதேசமும் நன்மையடையும்.- என்றார். (த-115)

## ஏழாலை சன்மார்க்க வித்திக்கு சுன்னாகம் மக்கள் வங்கி உதவி

வலி.வடக்கு,ஜூலை 13

சுன்னாகம் மக்கள் வங்கியால் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்துக்கு எழுபத்து ஐயாயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

பாடசாலையின் கணினி அறைக்கு மாபிள் பதிப்பதற்காக சமூக சேவைத் திட்டத்தின் கீழ் ஐம்பதாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பாடசாலையில் கற்கும் பிள்ளைகள் அனைவரும் இந்த வங்கியில் தமது சேமிப்புக் கணக்குகளைப் பேணி வருகின்றமையை கௌரவிக்கும் வகையில் இருபத்தையாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் மற்றும் சுன்னாகம் வங்கி கிளையின் முகாமையாளர் ப.பார்த்தீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-86)

## பல் வைத்தியர் கடமை ஏற்பு

தென்மராட்சி, ஜூலை 13

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு பல் வைத்திய நிபுணர் ஒருவர் சுகாதார அமைச்சால் இடமாற்றம் செய்யப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

சாவகச்சேரி வைத்தியசாலை பல்சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றிய இருவரில் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து நோயாளர்கள் சிரமங்களை எதிர்நேக்கி வந்தனர். இதனையடுத்து மஸ்கெலியா வைத்தியசாலையில் கடமையாற்றிய பல்வைத்திய நிபுணர் சுகாதார் அமைச்சால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை இந்த வருட இறுதிக்குள் மேலும் இரு பல் வைத்திய நிபுணர்கள் நியமிக்க சுகாதார அமைச்சு இணங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-9)

## குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகம் மண்டைதீவில் பாதிப்பு


யாழ்ப்பாணம்,ஜூலை 13

மண்டைதீவு பிரதேசத்திற்கு நிலத்தடி குழாய் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்த குடி தண்ணீர் விநியோக சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டியில் இருந்து இதற்கென அமைக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கல் மார்க்க குழாயை சில விஷமிகள் சேதப்படுத்தியதால்தான் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தேசிய குடிதண்ணீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில்தான் இந்த நிலத்தடி மார்க்கம் ஊடாக மண்டைதீவு பிரதேசத்துக்கு இந்த குடி தண்ணீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தற்போது இந்த நிலத்தடி குழாய் மூலமான குடி தண்ணீர் வழங்கல் பாதிக்கப்பட்டதால் பிரதேச மக்கள் குடி தண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது பவுசர் வாகனம் மூலம் இந்தப் பகுதிக்கு குடி தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தாலும் மக்களின் தேவைக்கு அது போதுமானதாக இல்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. (ம-17)



தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய வளாத்தில் உள்ள பலாமரத்தின் அடிப்பகுதியில் மிகவும் நெருக்கமாக ஐம்பதுக்கும் மேற்பட்ட பலாக்காய்கள் காய்த்துள்ளன. (ம-86)

## வீதியைக் கடக்க முயன்ற மாணவி விபத்தில் காயம்

தென்மராட்சி,ஜூலை 13

பாடசாலைக்கு வீதியைக் கடக்க முயன்ற ஆறு வயது மாணவியை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதிக் காயப்படுத்தியது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி கச்சாய் வீதி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை முன்பாக இடம்பெற்றது.

பாடசாலை மாணவியான அன்ரன் ரஜிகரன் தேவதர்சினி (வயது 6) என்னும் மாணவி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதே வேளை நேற்று முன்தினம் இரவு வீதி விபத்துக்களில் சிக்கி மோட்டார் சைக்கிளோட்டிகள் மூவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த முருகேசு சுரேஷ் (வயது 46), தாவளை இயற்றாலையைச் சேர்ந்த சந்திரசேகரம் நிருபானந்தன் (வயது 32), மட்டுவில் தெற்கைச் சேர்ந்த வல்லிபுரம் மகாலிங்கம் (வயது 56) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (ம-9)

## ஊர்காவற்றுறைக்கு குடிதண்ணீர் பவுசர்கள் மூலம் விநியோகம்

ஊர்காவற்றுறை பிரதேச மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையூடாக மக்களுக்கு பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக, ஊர்காவற்றுறைப் பகுதி மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களையடுத்து உதவி அரச அதிபர் திருமதி எழிலரசி அன்ரன் யோகராசா இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பவுசர்கள் இதற்கென பயன்படுத்தப்படுகின்றன. (ம-7)

## முற்றவெளிக்கு ஒளியூட்டக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். முற்றவெளிப் பகுதி இருளில் மூழ்கியுள்ளதால் இரவு வேளை வீதியால் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

யாழ். பிரதம தபாலக சுற்று வட்ட வீதியில் இருந்து துரையப்பா விளையாட்டு அரங்கு வரையுமான பிரதான வீதியே இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது.

இந்த வீதியின் புனரமைப்புப் பணிகளுக்காக மின் கம்பங்கள் யாவும் பின் நகர்த்தப்பட்டுள்ள நிலையில் இந்தப் பகுதிக்கான மின்சாரம் முற்றிலும் தடைப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து நெருக்கடி மிக்க இந்த வீதியில் வீதி விளக்குகள் ஒளிராது காணப்படுவதால் இரவில் பயணம் செய்யும் மக்கள் விதியோரம் வெட்டப்பட்ட குழிகளில் விழுந்து எழும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-17)

## 14 பேருக்கு கோழிகள் தென்மராட்சியில் வழங்கல்

தென்மராட்சி,ஜூலை 13

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும கால்நடை வளர்ப்புத் திட்டத்தில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் 14 பேருக்கு கோழிக்கூடுகளும் கோழிக்குஞ்சுகளும் வழங்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட 14 பயனாளிகளையும் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலகத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறுமுகம் யோகேஸ்வரன்-சரசாலை வடக்கு, இரவீந்திரன்- தனலட்சுமி-மறவன்புலோ, மகிழ்ராசா-மயூரன்-தனங்கிளப்பு, ஆறுமுகம் சிவபாக்கியம்-கைதடி வடக்கு, பாஸ்கரன் மங்கையற்கரசி-இராமாவில், பாஸ்கரன்வில்லி-நுணாவில் மத்தி, கந்தையா வடிவேலு-கைதடி தென்கிழக்கு, குகனேசன் சாந்த பவானி-கைதடி கிழக்கு, செல்வராசா கோபா-சரசாலை தெற்கு, ஜெயச்சந்திரன் தயாநிதி-விடத்தற்பளை, வரதராசா பவளராணி-கல்வயல், குமாரவேலு நாகராசா-மந்துவில், பாலசுந்தரம் தனபாலசிங்கம்-கச்சாய், சின்னவன் குகதாஸன்-உசன்.

இந்தப் பயனாளிகளுக்கு தலா 6 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கோழிக்கூடுகளும் தலா 10 கோழிக் குஞ்சுகளும் வழங்கப்படவுள்ளன. (ம-9)

## குடாநாட்டு விவசாயிகளின் பிரச்சினைகள் யாழ்ப்பாண அரச அதிபருக்கு எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 13

யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துக்கும், யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க.முதலியார், செயலாளர் நா.சிவதிருச்செந்தூர்நாதர் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த 10 ஆம் திகதி யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் அரச அதிபரிடம் சில கோரிக்கைகளை முன்வைத்தனர்.

யாழ்.குடாநாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

சந்தையில் 10 கிலோவுக்கு ஒரு கிலோ கழிவு பெறப்படுவது தடுக்கப்பட வேண்டும்.

விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தல் வேண்டும்.

தரங்களைப் பேணுவதற்கான ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். குடாநாட்டில் மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் தக்காளி, பச்சை மிளகாய் ஆகியவற்றைப் பதனிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெளிமாவட்டத்துக்கு உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு வாகன வசதி வழங்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் அரச அதிபரிடம் முன்வைக்கப்பட்டன.

இது குறித்து தான் ஆராய்ந்து உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாகவும் அரச அதிபர் கூறியதாக விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (த-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலின் பின் அமைச்சரவையில் மாற்றம்

டில்லி, ஜூலை 13

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர் மத்திய அமைச்சரவையில் முழுமையாக மாற்றம் கொண்டு வர இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் திட்டமிட்டுள்ளார். குறிப்பாக பல்வேறு அமைச்சுகள் பதவி வெற்றிடமாக உள்ளதால் யாரை எந்தப் பொறுப்பில் அமர்த்துவது என பெரும் குழப்பம் நிலவி வருகிறது. தகுதி வாய்ந்த நபரை தேடி எடுக்க காங்., கட்சியின் மூத்த நிர்வாகிகளுக்கு இரகசிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மிகத்திறமை படைத்த பிரணாப் முகர்ஜியை ஜனாதிபதிக்கு காங்கிரஸ் தெரிவு செய்யவிருப்பதால் இவர் கவனித்து வந்த நிதி அமைச்சகம் தற்போது பிரதமர் பொறுப்பில் இருந்து வருகிறது. லஞ்சம் தொடர் பான

**காங்கிரஸ் பொதுசெயலர் ராகுலுக்கு மத்திய அமைச்சரவைரயில் ஒரு பொறுப்பை வழங்கலாமா என்ற கருத்தும் எழுந்திருக்கிறது.**

இறுவட்டில் அண்மையில் சிக்கிய இமாசல பிரதேசத்தைச் சேர்ந்த வீரபத்திரசிங் பதவியை இழந்தார். இதனால் சிறு மற்றும் குறுந் தொழில் நிறுவனங்கள் இலாகா வெற்றிடமாக உள்ளது. காங்., கட்சியின்நாடாளுமன்றக்குழுத் தலைவர் பதவியும் வெற்றிடமாகக் காணப்படுகிறது. இதற்கும் தகுதி வாய்ந்தவரை நியமிக்க வேண்டியுள்ளது. பிரணாப் வகித்து வந்த நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சரவைக் குழுவின் தலைமைப் பொறுப்பு வெற்றிடமாக உள்ளது. இவ்வாறு பல்வேறு பொறுப்புகள் வெற்றிடமாக இருப்பதால் சரியான நபரைத் தெரிவு செய்ய காங்., வட்டாரம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

காங்கிரஸ்பொதுசெயலர் ராகுலுக்கு மத்திய அமைச்சரவைரயில் ஒரு பொறுப்பை வழங்கலாமா என்ற கருத்தும் எழுந்திருக்கிறது. சல்மான் குர்ஷித், எஸ்.எம். கிருஷ்ணா உள்ளிட்ட அமைச்சர்கள் , ராகுலை அமைச்சராக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளனர். வருங்காலத்தில் பிரதமர் பொறுப்பை ஏற்கும்பட்சத்தில் இது மிகுந்த முன் அனுபவமாக இருக்கும் என்றும் யோசனை சொல்லியிருக்கின்றனர்.

ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க., மற்றும் மம்தாவின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கும் அமைச்சரவையில் இடம் கிடைக்கும் என்று டில்லி வட்டாரம் தெரிவிக்கிறது. தி.மு.க.,வை பொறுத்தவரை அண்மையில் பதவியை இழந்த தயாநிதிமாறன், ராசா ஆகியோருக்கு பதில் யாருக்கும் அமைச்சர் பொறுப்பை தி.மு.க., பெறவில்லை. இதனால் வரவிருக்கும் அமைச்சரவையில் தி.மு.க.,வுக்கும் பங்கு கிடைக்கும் என்று தெரிகிறது. ஜனாதிபதித் தேர்தலில் காங்கிரஸுக்கு ஆதரவு தெரிவித்த முலாயம் சிங்குக்கு மத்திய அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்றும் டில்லி வட்டாரம் தெரிவிக்கிறது. (வ)

## மீண்டும் சிதம்பரம் நிதியமைச்சர்



நிதியமைச்சர் பொறுப்பை மீண்டும் ப.சிதம்பரம் வசம் ஒப்படைக்க காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது.

பிரணாப் முகர்ஜி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் காரணத்தால் தனது நிதியமைச்சர் பதவியை கடந்த 26 ஆம் திகதி ராஜினாமா செய்தார். இதன்பின்பு, பிரதமர் மன்மோகன்சிங், நிதி அமைச்சாகப் பொறுப்பை கூடுதலாகக் கவனிப்பார் என்று அறிவிக்கப்பட்டது.

ஏனெனில் நரசிம்மராவ் பிரதமராக இருந்த காலத்தில் நிதியமைச்சராக இருந்த மன்மோகன்சிங், இந்திய பொருளாதாரத்தை தாராளமயமாக்கினார்.

அதன்பின்னரே இந்தியா 9 சதவீத பொருளாதார வளர்ச்சியைக் கண்டது. தற்போது சரிவை சந்தித்து வரும் பொருளாதாரத்தை வளர்ச்சிப்பாதையில் திருப்ப பல முக்கிய முடிவுகளை பிரதமர் மன்மோகன்சிங் எடுப்பார் என்று எதிர்பார்க் கப்பட்டது. இந்நிலையில் திடீர் திருப்பமாக நிதியமைச்சர் பொறுப்பை மீண்டும் ப.சிதம்பரம் வசம் ஒப்படைக்க காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி, நாடாளுமன்றத்தில் மழைக்கால கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது. அதற்கு முன்பே, ப.சிதம்பரம் மத்திய நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே 2004- 2008 வரை நாட்டின் நிதியமைச்சராக ப.சிதம் பரம் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிதம்பரம் வகித்து வரும் உள் துறை அமைச்சகம் தற்போது மின்துறை அமைச்சராக இருக்கும் சுஷில்குமார் ஷிண்டே வசம் ஒப்படைக்கப்படுகிறது. பிரணாப் முகர்ஜி வகித்து வந்த மக்களவை தலைவர் பதவியும் ஷிண்டே வசம் அளிக்கப்படுகிறது.

# சென்னையில் இன்று கம்யூ. ஆர்ப்பாட்டம்

## இலங்கை ராணுவத்துக்கு பயிற்சி வழங்குவதைக் கண்டித்து

சென்னை, ஜூலை13

இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்ப டுவதைக் கண்டித்து தமிழகம் முழுவ தும் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

அதன்படி வடசென்னை, தென் சென்னை மாவட்டக் குழுக்களின் சார்பில் இன்று முற்பகல் 11 மணிக்கு சென்னை மெமோரியல் ஹால் எதிரில் வடசென்னை மாவட்டச் செயலாளர் மு.சம்பத், தென்சென்னை மாவட்டச் செயலாளர் எஸ். ஏழுமலை ஆகியோர் முன்னிலையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செய்லாளர் தா.பாண்டியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.



கர்நாடக மாநிலத்தின் புதிய முதல்வராக ஜெகதீஷ் ஷட்டர் நேற்று பதவி ஏற்றுக் கொண்டார். ஷட்டருக்கு கர்நாடக மாநில ஆளுனர் பரத்வாஜ் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## கலாமுடன் நீங்களும் கருத்துக்களைப் பகிரலாம்

உலகளாவிய ரீதியில் பிரபலமான சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமும் இணைந்துள்ளார்.

ஏற்கனவே அப்துல் கலாம் யூரி.யூ.பில் காணொளிகளை பகிர்ந்து கொண்டு வருகிறார்.

தற்போது நாட்டின் வளர்ச்சி குறித்த தனது எண்ணங்களை பகிர்ந்துகொள்ள கலாம் பேஸ்புக்கில் இணைந்துள்ளார்.

பொதுமக்களும் கலாமின் http://www.facebook.com/kalamBillionbeats என்ற பேஸ்புக் பக்கத்தைப் பார்வையிட்டு கருத்துத் தெரிவிக்கலாம். (வ)

# தமிழகத்தில் பரபரப்பு போஸ்டர்!




**இந்திய அரசு தமிழின உணர்வாளர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் இன்னும் தொடர்ந்து இலங்கை இராணுவத்தினருக்கு பல்வேறு சிறப்புப் பயிற்சிகளை கொடுத்து வருகிறது.**

தமிழகத்தில் இலங்கை விமானப்படையினருக்கு பயிற்சி கொடுப்பதைக் கண்டித்து புதுக் கோட்டை மாவட்டம் கொத்தமங்கலத்தில் தமிழின உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் போஸ்டர் வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தொடர்ந்து தமிழர்களையும், தமிழக மீனவர்க ளையும் தாக்குதல் நடத்தி கொன்று குவிக்கும் இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படுவதாகத் தொடர்ந்து இந்திய அரசு மீது தமிழின உணர்வாளர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். ஆனாலும் இந்திய அரசு தமிழின உணர்வாளர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் இன்னும் தொடர்ந்து இலங்கை இராணுவத்தினருக்கு பல்வேறு சிறப்புப் பயிற்சிகளை கொடுத்து வருகிறது.

தமிழக அரசியல் தலைவர்கள் தொடர்ந்து கண்டன குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் நிலையில் புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் அருகில் உள்ள கொத்தமங்கலம் வாடிமாநகர் கடைவீதியில் தமிழின உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் போஸ்டர் வைக்கப் பட்டுள்ளது.

அந்தப் போஸ்டரில், ''மத்திய இந்திய அரசே வெந்த புண்ணில் குத்தாதே.. ஈழத் தமிழர்களை கொன்றும், தமிழக மீனவர்களையும் விரட்டி அடிக்கின்ற இலங்கை இராணுவத்தினருக்கு ஆயுத உதவியா? விமானப் பயிற்சியா..? போர் குற்றவாளி ராஜபக்ஷவுக்கு சிவப்புக் கம்பளமா..?'' என்று கண்டன குரல் எழுப்பியுள்ள அந்த போஸ்டரில் இனியும் தொடரு மானால் ஈழ மண்ணையும், எங்களையும் விட்டு விடு என்று கண்டனக் கோசங்கள் முடிவடைகின்றன. இந்த போஸ்டரால் கொத்தமங்கலம் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (வ)

## இந்திய தேசபிதா பட்டம் மத்திய அரசு காந்திக்கு வழங்கவில்லையாம்

மகாத்மா காந்திக்கு, தேசப்பிதா என்ற பட்டத்தை, மத்திய அரசு ஒருபோதும் வழங்கவில்லை என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்தது.

மகாத்மா காந்தி தேச பிதாவாக அறிவிக்கப்பட்டது தொடர்பான விவரங்களைத் தரும்படி, தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ், சமூக ஆர்வலர் அபிஷேத் கத்யான் என்பவர், உள்துறை அமைச்சகத்திடம், மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவுக்கு, மத்திய பொதுத் தகவல் அதிகாரி, கடந்த மாதம் அளித்த பதிலில், ''மகாத்மா காந்தியை தேசப்பிதாவாக பொது மக்கள் அழைத்தாலும், அதுபோன்ற ஒரு பட்டத்தை, மத்திய அரசு ஒரு போதும் வழங்கவில்லை'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன், லக்னோவைச் சேர்ந்த நான்காம் வகுப்பு மாணவி ஐஸ்வர்யா பராஷர், 'மகாத்மா காந்தி, தேச பிதாவாக அறிவிக்கப்பட்டது தொடர்பான உத்தரவின் நகலைத் தர வேண்டும்' என்று கோரியிருந்தார். இதற்குப் பதில் அளித்த அமைச்சகம், அதுபோன்ற குறிப்பிடத்தக்க ஆவணம் அமைச்சகத்திடம் இல்லை என்று பதில் அளித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாக். பெண் உளவாளியிடம் பேஸ்புக்கில் சிக்கிய இந்திய இராணுவ அதிகாரி

டில்லி, ஜூலை 13

பேஸ்புக் மூலம் வலை வீசிய பாகிஸ்தான் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐயின் பெண் உளவாளியிடம் இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் சிக்கியுள்ளார்.

ராஜஸ்தானைத் தலைமையிடமாகக் கொண்ட இந்திய இராணுவத்தின் கவசப் படைப் பிரிவின் லெப்டினட் கேர்னலான இவர் அந்தப் பெண்ணுடன் பேஸ்புக்கில் தொடர்பு கொண்டதை மத்திய உளவுப் பிரிவான புலனாய்வு பிரிவு கண்டுபிடித்து பாதுகாப்பு அமைச்சகத்தை எச்சரித்துள்ளது.

இதையடுத்து அந்த லெப்டினட் கேர்னலிடம் இராணுவம் விசாரணை நடத்தி வருகிறது.

கடந்த ஆண்டு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் பயிற்சிக்காகச் சென்ற இந்திய இராணுவத்தின் லெப்டினட் கேர்னலையும் ஒரு பெண் தன் வசமாக்கியமையை 'ரோ' உளவுப் பிரிவு கண்டு பிடித்தது. இதையடுத்து அவர் எச்சரிக்கப்பட்டார்.

இந்த நிலையில் பேஸ்புக் மூலம் இன்னொரு அதிகாரி தானாகவே போய் ஐ.எஸ்.ஐ. பெண் உளவாளியிடம் சிக்கியுள்ளார்.

உரிய அனுமதியில்லாமல் இராணுவ அதிகாரிகள் வெளிநாட்டினர் யாருடனும் தொடர்பு வைத்திருக்கக் கூடாது என்பது விதியாகும். இதை அந்த லெப்டினட் கேர்னல் மீறி என்னென்ன தகவலைகளைப் பகிர்ந்து கொண்டார் என்பது குறித்து இராணுவ உளவுப் பிரிவு விசாரணை நடத்தி வருகிறது.

**சமூக வலைத்தளங்களில் இந்திய இராணுவ அதிகாரிகள் புனைபெயரில் தான் இடம் பெறலாம் என்ற விதி உள்ளது.**

சமூக வலைத்தளங்களில் இந்திய இராணுவ அதிகாரிகள் புனைபெயரில்தான் இடம் பெறலாம் என்ற விதி உள்ளது. தாங்கள் யார் என்பது குறித்தோ, தங்களது பதவி குறித்தோ, இருக்கும் இடம் குறித்தோ சமூக வலைத்தளங்களில் தகவல்களைப் பரிமாறத் தடை உள்ளது.

இதையும் மீறி தன்னைப் பற்றிய முழு விவரங்களையும் சொல்லி அந்தப் பெண்ணின் வலையில் வீழ்ந்துள்ளார் இந்த லெப்டினட் கேர்னல். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் உலகப்போரின் போது கடலில் மூழ்கிய விமானம் மீட்பு



இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட கென்கெல் சீ 115 என்ற விமானம் 70 ஆண்டுகளுக்குப் பின்னர் மீட்கப்பட்டுள்ளது.

இரட்டை இயந்திரங்கள் கொண்ட இந்த வகை விமானங்களை ஜேர்மனியிடமிருந்து நோர்வே வாங்கியது. 1942ஆம் ஆண்டு ஒருநாள் கீழே இறங்கியபோது இது கடலுக்கு அடியில் 120 அடி ஆழத்தில் மூழ்கிவிட்டது.

மூழ்கிய இந்த விமானத்தை நோர்வேக் கடலின் இடை கழியில் 2005ஆம் ஆண்டு கண்டு பிடித்தனர். இதில் வெடிக்காத இரண்டு குண்டுகளும் இருந்தன. இவற்றை எடுத்து முதலில் செயலிழக்கச் செய்தனர். எனினும் அது வெளியில் கொண்டுவரப்படவில்லை.

நீரோட்டம் மற்றும் ஒட்சிசன் வாயு குறைவாக இருந்த கடல் பகுதியில் இந்த விமானம் இருந்ததால், துருப் பிடித்து வீணாகவில்லை. உப்புப்படிந்திருந்தாலும் புதிதாகவே காணப்பட்டது. மீட்புப் பணிகளில் ஈடுபட்ட ஒலிவர் ஸ்காட், ''இந்த விமானத்தைப் பார்க்கும்போது நேற்றுத் தொலைந்தது போலத்தோன்றுகிறது. நல்ல நிலையில் இருக்கின்றது. இதன் வால்பகுதியில் ஸ்வஸ்திக் சின்னம் பளிச் என்று தெரிகிறது'' என்றார்.

இந்த விமானத்தை மீட்ட பின்னர் ஸ்டாவெங்கரில் உள்ள விமான அருங்காட்சியகத்துக்குக் கொண்டு வந்தனர். ஐந்தாகப் பிரித்து நல்ல தண்ணீர்த் தொட்டியில் அவற்றை மூழ்க வைத்தனர். இன்னும் இரண்டாண்டுகளுக்கு இந்த விமானத்தின் பகுதிகள் நல்ல தண்ணீரில் மூழ்கியபடி இருக்கும்.

# பாக்.இராணுவத்தைத் தாக்க தலிபான் படைகள் திட்டம்

## உளவுத்துறை எச்சரிக்கை

பாகிஸ்தான் இராணுவத்தினரின் மீது தொடர் தாக்குதல் நடத்துவோம் என்று தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளதாக பாகிஸ்தான் அரசை உளவுத்துறை எச்சரித்துள்ளது.

பாகிஸ்தான், செனாப் ஆற்றுப் படுகையில் உள்ள இராணுவ முகாமின் மீது கடந்த 9ஆம் திகதி ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 8 பாதுகாப்புப் படையினர் உயிரிழந்தனர். அந்த இடத்தில் தீவிரவாதிகள் சில கடிதங்களை விட்டுச் சென்றனர்.

அதில், பாகிஸ்தான் வழியாக ஆப்கானில் உள்ள நேட்டோ படையினருக்குத் தேவையான தளபாடப் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதைத் திரும்பப் பெற வேண்டும். இல்லையெனில் பாகிஸ்தானில் எங்கு வேண்டுமானாலும் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்துவோம் என்று மிரட்டல் விடுக்கப்பட் டிருந்தது.

தலிபான் தொடர்பு தீவிரவாதிகளின் மிரட்டலை உளவுத்துறையும் உறுதி செய்ததாக 'தி எக்ஸ்பிரஸ் டிரிபியூன்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.




ஆப்கானில் உள்ள நேட்டோ படையினருக்குத் தேவையான தளபாடப் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதைத் திரும்பப் பெற வேண்டும் என்று தலிபான்கள் கடிதத்தில் மிரட்டல் விடுத்துள்ளனர்.

மற்றொரு உளவுத்துறை நிறுவனம் அளித்த செய்தியில், பிர் சாம்பல் பகுதியில் நடந்த தாக்குதலுக்குத் தடை செய்யப்பட்ட தெஹ்ரிக் இ தலிபான் தீவிரவாத இயக்கம்தான் காரணம். இந்த இயக்கம் மேலும் பல தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தது.

பொலிஸாரிடமிருந்து மக்களை விலகியே இருக்குமாறு தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். பாகிஸ்தானில் எங்கு வேண்டுமானாலும் குறிப்பாக பஞ்சாப் மாகாணத்தில் தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்தாண்டு அமெரிக்க ஆளில்லா விமானம் பாகிஸ்தானின் பழங்குடியினப் பகுதியில் நடத்திய தாக்குதலில் 24 இராணுவத்தினர் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது.

இதையடுத்து, பாகிஸ்தான் வழியாக நேட்டோ படையினர் ஆப்கானுக்குச் செல்லும் வழியை பாகிஸ்தான் அடைத்தது. அண்மையில் தான் இந்த வழியை பாகிஸ்தான் மீண்டும் திறந்தது. இதற்கு பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத இயக்கங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. (வ)




அமெரிக்காவின் யேவா மாகாணத்தில் தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அங்கு வந்திருந்த பொதுமக்களைச் சந்தித்து கைகுலுக்கினார்.

## கடலில் மூழ்கியது அகதிகள் படகு

### 54 பேர் சாவு

லிபியாவில் இருந்து மத்திய தரைக்கடல் வழியாக, இத்தாலிக்குச் சென்ற, 54 பேர் படகு விபத்தில் உயிரிழந்தனர். எரித்திரியா மற்றும் லிபியாவைச் சேர்ந்த, 55 பேரை ஏற்றிக் கொண்டு, இத்தாலி நோக்கி மத்திய தரைக்கடல் வழியாக ஒரு படகு சென்றது.

லிபியாவின் திரிபோலி நகரிலிருந்து புறப்பட்ட இந்தப் படகு, கடந்த 9 ஆம் திகதி துனிசிய கடற்கரைக்கு அருகே, சூறாவளிக் காற்றால் உடைந்து கடலில் மூழ்கியது. இந்தப் படகில் பயணித்த ஒருவர் உடைந்த படகின் பாகத்தைப் பிடித்து, இத்தாலியைச் சென்றடைந்தார்.

இவர் கொடுத்த வாக்குமூலத்தின்படி, படகில் பயணித்தவர்கள் இத்தாலிக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். பலத்த காற்றில் படகு உடைந்து கடலில் மூழ்கியதில், 54 பேரும் உயிரிழந்தனர். இந்த நபர் மட்டும் கடல் தண்ணீரைக் குடித்து உயிர் பிழைத்துள்ளார். இவர், தற்போது வயிற்றுப்போக்கால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த ஆண்டில் மட்டும், லிபியாவிலிருந்து ஐரோப்பா சென்ற, 170 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். எனவே, மத்திய தரைக் கடல் பகுதியில் கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளும்படி, ஐ.நா. அகதிகள் ஆணையாளர் அலெக்சாண்டர் அலினிகோப் தெரிவித்துள்ளார்.

## முஷாரப் மீது கைது உத்தரவு



பாகிஸ்தானின் பாலுசிஸ்தான் நேஷனலிஸ்ட் தலைவர் நவாப் அக்பர் புக்தி 2006 ஆம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஷ் முஷாரப் மீது கைது உத்தரவு பிறப்பித்து பாலுசிஸ்தான் தீவிரவாதத் தடுப்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் இந்த வழக்கில் முன்னாள் பிரதமர் சவுகத் அஜீஸ், முன்னாள் உள்துறை அமைச்சர் அப்தாப் அகமது கான், முன்னாள் பாலுசிஸ்தான் ஆளுநர் ஓவாசிஸ் கனானி, முன்னாள் முதல்வர் ஜாம் யூசுப், முன்னாள் மாகாண உள்துறை அமைச்சர் சோயப் மற்றும் முன்னாள் துணை ஆணையாளர் அப்துல் சமத் லசி ஆகியோருக்கும் கைது உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த வழக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(வ)

## அணு சக்தியில் இயங்கிய முதல் போர்க் கப்பல் ஏலத்தில்



அணு சக்தியில் இயங்கும் உலகின் முதலாவது போர்க் கப்பலான அமெரிக்காவின் யு.எஸ்.எஸ். லாங் பீச் ஏலத்துக்கு விடப்படவுள்ளது. 720 அடிகள் நீளம் கொண்ட இந்தக் கப்பல், 1991ஆம் ஆண்டு வளைகுடாப் போரின் போது, அமெரிக்கக் கடற்படையிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது.

இந்தக் கப்பல் வோஷிங்டனில் 17 ஆண்டுகாலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்தக் கப்பல் 10 ஆயிரம் தொன் உருக்கு, 300 மைல் நீள மின்சார கேபிள், 450 தொன் அலுமினியம் என்பவற்றால் உருவாக்கப்பட்டுள்ளது.

வியட்நாம் போர், வளை குடாப் போர் ஆகியவற்றின் போது இந்தக் கப்பல் அரும்பணி ஆற்றி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)

## பணக்கார ஆண்களை கவர்வது எப்படி?

### சீனாவில் வகுப்பு நடத்துகிறார் ஆசிரியை

பணக்கார ஆண்களைக் கவர்ந்து திருமணம் செய்து கொள்வது குறித்து சீன ஆசிரியை ஒருவர் வகுப்பு நடத்தி வருகின்றார்.

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தின் செங்டு நகரைச் சேர்ந்தவர் சூ பி (வயது 42). இவர் கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்பு பெரிய செல்வந்தரைத் திருமணம் செய்து கொண்டார்.

பணக்காரர்களைக் கவர்ந்து, அவர்களைத் திருமணம் செய்து கொள்வது தொடர்பான வகுப்பை கடந்த ஏழாண்டுகளாக சூ பி நடத்தி வருகிறார்.

இவருடைய வகுப்பில் படித்த 100இற்கும் அதிகமான பெண்கள் இந்தப் பாடத்தால் பயன் அடைந்துள்ளனர்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:-

பணக்கார இளைஞரைச் சந்திக்கும் முன் அவருடைய பழக்க வழக்கங்களைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அவர் அதிகமாக எங்கு செல்கிறார் என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

அவர் செல்லும் இடத்துக்கு நீங்கள் சென்று தற்செயலாக அவரைச் சந்தித்தது போல பாசாங்கு செய்ய வேண்டும். அவருடைய பழக்கத்தையும் நீங்கள் பின்பற்ற வேண்டும். எடுத்த எடுப்பில் ஆடம்பரமான உணவுக்கெல்லாம் பதிவு செய்யக் கூடாது.

நீங்கள் பழகும் நபர் கொடுக்கும் அன்பளிப்புகளை வாங்கி கொள்ளலாம். முதல் இரண்டு மாதங்களுக்கு அவருடன் மிகவும் நெருங்கிப் பழகக்கூடாது.

ஓராண்டுக்குள் அவரை திருமணம் செய்து கொள்ள அவசரப்படக்கூடாது. இரண்டு ஆண்டுகள் ஆகியும் அவர் உங்களை மணப்பதற்கு ஆர்வம் காட்டவில்லை என்றால் நீங்கள் அவருடைய மனைவியாக முடியாது - எனகிறார்.

(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமனில் 20 பேர் உடல் சிதறிச் சாவு

சனா, ஜூலை 13

அரேபியா வளைகுடா நாடான ஏமனில் நேற்றுக் காலை நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சுமார் 20 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

ஏமன் தலைநகர் சனாவில், பொலிஸ் நிலையத்தில் பயிற்சி முடித்த ராணுவத்தினர் அங்கிருந்து புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த போது, தற்கொலைப் படையாளி குண்டை வெடிக்கச் செய்தார். இஸ்லாமிய கிளர்ச்சிக்குழு இந்தத் தாக்குதலுக்கு பின்னால் செயற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் மீது இராணுவம் நடத்தும் தொடர்ச்சியான தாக்குதல்களுக்குப் பதிலடியாக இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்ளப் போவதாக தீவிரவாதிகள் ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

எனினும் இந்தத்தாக்குதலுக்கு அரேபிய வளைகுடாவில் இயங்கும் அல்-குவைதாவின் கிளையான அன்சார் அல் ஷரியா பொறுப்பேற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் ஏமனின் புதிய ஜனாதிபதியாக அப்ரப்பூ மன்சூர் தெரிவானதிலிருந்து இடம்பெற்றுள்ள மிகமோசமான தாக்குதலாக இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. (வ)

தற்கொலைத் தாக்குதலின் எதிரொலி



## மியான்மார் மீதான தடை நீக்கம்

### ஆங்சாங்சூகி வரவேற்பு

மியான்மார் நாட்டின் மீது விதிக்கப்பட்டிருந்த அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் நீக்கப்படும் என்று அந்த நாடு தெரிவித்துள்ளதற்கு எதிர்கட்சித் தலைவர் ஆங் சாங் சூகி வரவேற்பு அளித்தார்.

அமெரிக்கா தன்னுடைய தொழிலதிபர்களிடம் இனி மியான்மாரில் முதலீடு செய்யலாம் என்ற அறிவிப்பை வெளியிட்டது.இந்த முடிவு ஒருவாரமாக அமெரிக்காவில் தங்கிப் பேச்சு நடத்தி வரும் சூகியின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இவர் தனது நாட்டின் எண்ணெய், வாயு நிறுவனமான MOGE (Myanma Oil and Gas Enterprise) குறித்துப் பேச்சு நடத்தி வந்தார். இவருக்கு அமெ ரிக்காவிலிருந்த செல்வாக்குக் காரணமாக அமெரிக்கா இந்த வர்த்தக உடன்படிக்கைக்கு சம்மதித்தது. (வ)

## வெள்ளை மாளிகையில் ஒபாமா குடிசையில் அவரது சகோதரர்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் சகோதரர் ஜார்ஜ் கென்யா நாட்டின் குடிசைப் பகுதியில் வசித்து வருகிறார். ஒபாமாவின் தந்தைக்கு நான்கு மனைவிகள். வெள்ளையரான ஆன் துன்ஹாமுக்கு பிறந்தவர் தான் பராக் ஒபாமா.

ஜேயல் ஒட்டினோ என்பவருக்கு பிறந்தவர் ஜார்ஜ் ஒபாமா. ஜார்ஜ் தற்போது கென்யா நாட்டின் நைரோபி நகரில், ஒரு குடிசைப் பகுதியில் வசிக்கிறார். அண்ணன் வெள்ளை மாளிகையில் உலகத் தலைவராக வீற்றிருக்க, நைரோபி குடிசைப் பகுதியில் சாதாரணமாக வாழ்ந்து வருகிறார் ஜார்ஜ்.

ஹொலிவூட் நிருபர் தினேஷ் டிசூசா கென்யாவுக்குச் சென்று, ஜார்ஜைப் பற்றிய தகவல்களைப் படம் எடுத்துள்ளார்.அதில் அவர் குறிப்பிடுகையில், "என்னுடைய சகோதரர் உலகத்தையே காத்து வருகிறார். அந்த வகையில் என்னையும் காக்கிறார். எங்கள் நாட்டில் எப்போதும் சண்டை நடந்து கொண்டே இருப்பதால், இரண்டாம் மற்றும் மூன்றாம் நாடுகள் பட்டியலில் உள்ளோம். நான் ஆறு மாதக் குழந்தையாக இருந்த போது, கார் விபத்தில் தந்தை இறந்து விட்டார். அவர் மெத்தப் படித்தவர் என என் தாய் கூறியிருக்கிறார்" என்று தெரிவித்துள்ளார்.

## பாக். இந்துக்கள் மீது கொலைவெறித் தாக்குதல்

### நடாளுமன்றில் எம்.பிக்கள் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஜூலை 13

பாகிஸ்தானின் தெற்கு சிந்து மாகாணத்தில் இந்துக்கள் மீது கொலை வெறித் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாக அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தர்ஷன் பன்ஷி, லால்சந்த், மான்வர்லால் ஆகியோர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தனர்.

பாகிஸ்தானின் தெற்கு சிந்து மாகாணத்தில் உள்ள மிர்புர்காஸ், ஷதாத்காட், மிர்புர் மதெலோ ஆகிய இடங்களில் இந்துக்கள் மீது கொலை வெறித்தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்துக்களின் வீடுகளில் கொள்ளையடிக்கப்படுகின்றன. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கொலை செய்யப்படுகின்றனர் என்றனர்.

பிரதான எதிர்க்கட்சியான பி.எம்.எல்.என் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கூறும் போது, அந்தப் பகுதியில் உள்ள இந்துக்களின் வீடுகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. கட்டாயப்படுத்தி அவர்கள் வெளியேற்றப்படுகின்றனர்.

அந்த நபர்கள் மீது இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, அரசு இதுபோன்ற சமூக விரோதிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்து சிறுபான்மை மக்கள் அச்சமின்றி வாழ நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். (வ)

## எகிப்து ஜனாதிபதி உத்தரவை வாபஸ் பெறவேண்டும்

### நீதிமன்றம் உத்தரவு

எகிப்தில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டும் நடவடிக்கையை ஜனாதிபதி முகமது முர்சி வாபஸ் பெற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

எகிப்தின் ஜனாதிபதியாக கடந்த 30 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த முபாரக், பொதுமக்களின் தொடர் போராட்டம் காரணமாக பதவி விலகினார்.

இதனையடுத்து இடைக்கால அரசை இராணுவ உயர்மட்ட குழு கவனித்துக் கொண்டது.

இதனிடையே கடந்த ஜனவரி மாதம் நாடாளு மன்றத் தேர்தல் நடந்தது. இதில் தெரிவுசெய்யப்பட்ட மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் முறைகேடாக வெற்றி பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்ததால், நாடாளு மன்றத்தை கலைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில் புதிய ஜனாதிபதி முகமது முர்சி, தேர்தல் நடக்கும் வரை கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டும் என்று உத்தரவிட்டார். இதற்கு நீதிமன்றம் தடைவிதித்தது.

இந்த உத்தரவை மீறி எகிப்து நாடாளுமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் கூடியது. இதையடுத்து சட்டத்தரணிகளும், எதிர்க் கட்சி உறுப்பினர்களும் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டனர்.

எனவே நாடாளுமன்றத்தை கலைக்க தாம் இட்ட உத்தரவுதான் இறுதியானது, நாடாளுமன்றத்தை மீண்டும் இயங்கச் செய்யும் நடவடிக்கையை ஜனாதிபதி வாபஸ் பெற வேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். (வ)



softlogic
BEST IN THE BUSINESS

மாபெரும் திறப்பு விழா

சுன்னாகம் மண்ணில் Softlogic தனது 133ஆவது கிளையை இன்று 13.07.2012 காலை 7.15 மணிக்கு கோலாகலமாகத் திறந்து வைக்கின்றது.

உலகப் பிரசித்தி பெற்ற Panasonic,Samsung, Nokia, Dell, Media போன்ற இலத்திரனியல் பொருள்களை விசேட கழிவுடனும், இலகு தவணைக் கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

TV,Ref, Washing Machine, AC, Home Theatre, Dell, Mobiles





Panasonic SAMSUNG NOKIA DELL

கொள்வனவு செய்ய நாடவேண்டிய இடம்
இல. 227, A,B, K.K.S. வீதி, மதவடி சுன்னாகம்.
[கிருபா லேணர்ஸ் அருகில்]
தொ.இல. 021 567 4129
(20263)(5-6-7)



வாக்களிப்பதற்கு பதிவு செய்யப்பட்டிருக்கல் கட்டாயத் தேவைப்பாடாகும்.



2012 வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வின் களக் கணக்கெடுப்புப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

தேருநர்களைக் கணக்கெடுக்கும் படிவத்தை இதுவரையில் பூர்த்தி செய்து கையளிக்கவில்லையெனின்

உடனடியாக செயற்படவும்.

தேருநர்களைக் கணக்கெடுக்கும் படிவங்களை சரியாகப் பூர்த்தி செய்து பிரதேசத்தின் கிராம அலுவலரிடம் அல்லது தான் வதியும் மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவிப் பதியும் அலுவலரிடம் உடனடியாகக் கையளிக்கவும். படிவங்கள் கிடைக்கப்பெறவில்லையாயின் உடனடியாக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தை அல்லது கிராம அலுவலரை விசாரிக்கவும்.

2012 ஆண்டிற்காக நீங்கள் வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்.

2012.07.13
தொலைபேசி இல. : 011- 2868441,42,43
மின்னஞ்சல் : info@slelections.gov.lk
இணையத்தளம் : www.slelections.gov.lk

தேர்தல்கள் ஆணையாளர்
தேர்தல் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு மாநகர | 011-2872248 | மாத்தறை | 041-2222305 | குருநாகல் | 037-2222369 |
| கொழும்பு மாவட்ட | 011-2867471 | அம்பாந்தோட்டை | 047-2220248 | புத்தளம் | 032-2265246 |
| கம்பஹா | 033-2222047 | யாழ்ப்பாணம்/கிளிநொச்சி | 021-2222655 | அநுராதபுரம் | 025-2222551 |
| களுத்துறை | 034-2222266 | மன்னார் | 023-2222289 | பொலன்னறுவை | 027-2222012 |
| கண்டி | 081-2233187 | வவுனியா/ முல்லைத்தீவு | 024-2222311 | பதுளை | 055-2222424 |
| மாத்தளை | 066-2222422 | மட்டக்களப்பு | 065-2224312 | மொணராகலை | 055-2276315 |
| நுவரெலியா | 052-2222325 | அம்பாறை | 063-2224342 | இரத்தினபுரி | 045-2222023 |
| [illegible] | 091-2234028 | திருகோணமலை | 026-2222304 | கேகாலை | 035-2221561 |

(சீ/1458)(6-7-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பு வரும் நேரம்

(25)

என் தோழர்கள் கொட்டகையில் உள்ள போது, நான் என் அறையில் இருந்தேன். அவர்கள் தூங்கும் போது நான் படிக்க வேண்டும். அவர்கள் கிராமத்தில் இருக்கும் போது நான் நகரத்தில் இருக்க வேண்டும். ஜஸ்டிஸ் டேவிட் டட்லி ஃபீல்டு கூறினார், ''தனது போட்டியாளர்களை விட முன்கூட்டியே விழித்தெழுபவனும் பொறுமையுடன் அதிக மணி நேரங்கள் வேலை செய்பவனும், பரிசை எடுத்துச் செல்வார்கள்.''

நிகோலா டெஸ்லா கூறுகிறார். ''இந்த உலகில் வெற்றி பெற ஒருவன் கடினமான வேலையைச் செய்ய வேண்டும். நீங்கள் ஒரு நிமிடம் ஓய்வு எடுக்காமல் இரவு பகலாக உழைக்க வேண்டும். ராஜபாட்டை எங்கும் இல்லை. நான் இந்தத் திட்டத்தைப் பின்பற்றி பல வருடங்கள் வேலை செய்தேன்.'' டெஸ்லாவின் வாழ்வு முழுவதும் அவரது பரிசோதனைக் கூடத்தில் தொடர்ந்து உழைப்பதில் கழிந்தது. அங்கு அவர் காலை எட்டு மணி முதல் இரவு எட்டு மணி வரை நாள் முழுவதும் வேலை செய்தார். அப்போது அங்கு எடுத்து வரப்படும் உணவை அருந்திவிட்டு இரவு 2 மணி வரை வேலை செய்வார். அவர் இரண்டு வருடங்களில் இரண்டு தடவை நாடகக் கொட்டகைக்குச் சென்றார். எப்போதாவது அவரைக் காண யாராவது வருவார்கள். அவர் வாழ்வு தனிமையில் கழிந்ததெனச் சொல்ல முடியாது. பல சமயங்களில், இந்த வழியில்தான் வாழ்வின் பிரதான நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள வெற்றி பெற்ற மனிதர்கள் வேலை செய்ய நேரிடுகிறது.

''ஓ! நான் ஒரு கனவை ஒரு கித்தான் துணியில் அப்படி வரைய முடியுமானால்'' என்று ஓர் அழகான ஓவியத்தைக் காண்பித்து ஆர்வமுடைய இளம் ஓவியன் கூச்சலிட்டான். ''கித்தான் துணியில் கனவு'' என முணுமுணுத்தார் அவன் ஆசிரியர். இது 10,000 தடவை தூரிகையால் தொட்டுத் தீட்டப்பட்டது. உன் கனவை நனவாக்கிக் கொள்ள, நீ அதை கித்தான் துணியின் மீது வரையக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

உலகம் ஒரு பரிசாக

இந்த உலகம் ஆர்வமுள்ளவருக்குப் பரிசாக அளிக்கப்பட்டுள்ளது எனக் கூறுகிறார் ராபர்ட்சன். வெற்றிக்கு முதல் தேவை நீங்கள் உங்கள் தொழிலை நேசிக்க வேண்டியது ஆகும். சிறந்த வேலையை நேசிப்பதாலும் சிறப்பாகச் செய்வதில் மனநிறைவு அடைவதாலும் சிறப்பாகச் செய்யப்படுகிறது. தனிச்சிறப்பு மிக்க வேலையைச் செய்து முடித்து பெரிய வெற்றி பெற்றவர்கள் மனதில் புத்துணர்வும் ஊக்கமும் பெறுவதை உணர்வதில்லையா? ஜான் ஜேகப் ஆஸ்டர் தனது பொக்கிஷ அறையின் சுவரில், மற்றவர்களைப் போல அழகான படத்தைத் தொங்கவிடாமல், ஓர் அழகான ஃபர் கோட்டைத் தொங்கவிடவில்லையா? அதை உற்சாகத்துடன் ஆட்டிவிட்டு அதன் அழகை ரசித்துவிட்டு, கேன்டோனில் அது 500 டொலர் மதிப்புள்ளது என்று எண்ணிப் பார்க்கவில்லையா?

மனிதர்கள் ஊக்கம் (கிளர்ச்சி) பெறும் வரையில் ஒன்றுமில்லாதவர்கள் என்று கூச்சலிட்டுச் சொன்னார் மான்டெய்கன். உலகினரை வியப்படையச் செய்யும் ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பிலும், ஒவ்வொரு சிறந்த ஓவியம் அல்லது சிற்பத்திலும், ஒவ்வொரு கவிதையிலும், ஒவ்வொரு கட்டுரையிலும் அல்லது ஒவ்வொரு நாவலிலும் ஒரு சிறப்புத் திறமையுள்ள ஊக்கம் காணப்பட வேண்டும்.

இளவயதினரின் தடுக்க முடியாத கவர்ச்சியை உருவாக்கியது அதன் பொங்கி வரும் ஆர்வத்தை விட வேறு எது? இளமை என்றும் இருளைக் காண்பதில்லை. அது தோல்வியென்று ஒன்று உள்ளதை மறந்து விடுகிறது. மனித இனம் தங்களது தனிப்பட்ட வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது எனவும், எல்லாம் அவர்களது வழி நடத்து தலைப்பின் பற்றும் எனவும் அது நம்புகிறது.

எமர்சன் கூறுகிறார், ''ஒரு மனிதன் மனதைப் பணியில் முழுமையாகச் செலுத்தி, அதைச் சிறப்பாகச் செய்து முடிக்கும் போது, மனச்சுமை குறைந்து மகிழ்ச்சி அடைகிறான், ஆனால், அதற்கு மாறாகச் செயற்பட்டாலோ, பேசினாலோ அவனுக்கு நிம்மதி கிடைப்பதில்லை. உங்களுடைய வேலை எதுவாக இருந்தாலும், அது உங்களுடையதாகவே இருக்கட்டும்; நீங்கள் ஓர் ஓட்டை உடைசல் அடைப்பவராக இருக்கலாம்; அல்லது உயர்ந்த போதகராக இருக்கலாம். கருமானாக இருக்கலாம் அல்லது தலைவராக இருக்கலாம்; நீங்கள் செய்வது உங்கள் உழைப்பாகவே இருக்கட்டும்; அப்போது, விண்ணுலகம் மற்றும் மண்ணுலகத்தின் செல்வம் எல்லாம் உங்களை நோக்கி ஆறாகப் பெருக்கெடுத்து ஓடி வரக்கூடிய ஒரு கதவை திறந்தவர் ஆவீர்கள்

கடைசியில் அவன் அதைத் தவற விட்டான்

அவன் தனது நிலத்தில் உழுது கொண்டிருந்தான். அப்போது அவனது ஏர்முனை நிலத்தில் புதைந்திருந்த தங்கம் உள்ள பானையின் மீது இடிப்பது ஓர் அங்குல இடைவெளியில் தவறிவிட்டது. ஒரு மனிதன் தனது வாழ்வில் பெற்ற முக்கியமான பலன் கடைசியில் அவன் அதைத் தவறவிட்டான் எனச் சொல்லலாம். வாழ்வின் சிறந்த செயலில் சுயநலமின்றி ஈடுபடுவதில் ஏற்படும் ஊக்கத்தைவிட அதன் உச்சக் கட்டம் வேறு எது?

நாம் வாய்ப்பைப் பற்றிப் பேசுகிறோமோ? மனிதனாக இருப்பது வாழ்வின் பிரதான வரம் என்பது வாய்ப்பு அல்லவா? வாழ்வு என்பது கடவுள் அளித்துள்ள உள்ளடங்கிய திறமைகளை விரிவுபடுத்திக் கொள்ளவும், ஆழப்படுத்திக் கொள்ளவும், உயர்த்திக் கொள்ளவும் பெறும் வாய்ப்பைத் தவிர வேறு எது? அது சுற்றியுள்ள உலகில் தன்னை முழுமையாகப் பொருத்திக் கொள்ளவும், இணைத்துக் கொள்ளவும், இனிமையாக்கிக் கொள்ளவும் பெறும் வாய்ப்பை விட வேறுஎது? சேவை செய்யும் வாய்ப்பு வாழ்வின் உயர்ந்த வாய்ப்பு அல்லவா?

-ஓரிசன் ஸ்வெட் மார்டன்-

(தொடரும்)

# சிறுவர் இல்லங்களில் நல்லொழுக்கம் முதன்மையாக விளங்க வேண்டும்

## கிளி. மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

மனம் இருந்தால் மட்டும் தான் இப்படிப்பட்ட புனிதமான சேவையினை செய்ய முன்வருவார்கள் . எனவே இந்தப் பணியினை மேற்கொள்பவர்களுக்கு உதவிக்கரம் கொடுத்து சிறார்களின் எதிர்காலத்தை பிரகாசம் கொள்ளச் செய்வோம்.

யாழ்ப்பாணம் ,ஜூலை 13

சிறுவர் இல்லத்தை நடத்துவது என்பது சுலபமான காரியமல்ல. சிறுவர்களின் நல்லொழுக்கத்தை பேணுவது என்பதுதான் இங்கே முதன்மையாக விளங்குகிறது என்று கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.சிறினிவாசன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மகாதேவா சைவ சிறார் இல்லத்தின் சிறுவர் சங்கமமும், பிறந்தநாள் நிகழ்வும் அண்மையில் தலைவர் தி. இராசநாயகம் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சிறினிவாசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மகாதேவா சைவசிறார் இல்லத்தில் தங்கியிருந்து கல்வி கற்கும் குழந்தைகள் எதிர்காலத்தில் பிரகாசமாக விளங்க அவர்கள் கல்வியில் மேம்பட்டு ஒழுக்கமுள்ள பிரஜைகளாகத் திகழ வேண்டும். எனவே இல்லத்தின் சிறப்பான சேவைக்கு அனைவரும் உதவ முன் வர வேண்டும்.

கோயில்களுக்கு நன்கொடை வழங்குவதிலும் பார்க்க இந்த இல்லத்தில் வாழும் குழந்தைகளுக்கு உதவ முன்வர வேண்டும். இப்படிப்பட்ட பணியினை எல்லோராலும் செய்ய முடியாது.

மனம் இருந்தால் மட்டும் தான் இப்படிப்பட்ட புனிதமான சேவையினை செய்ய முன்வருவார்கள். எனவே இந்தப் பணியினை மேற்கொள்பவர்களுக்கு உதவிக்கரம் கொடுத்து சிறார்களின் எதிர்காலத்தை பிரகாசம் கொள்ளச் செய்வோம்.

இந்த இல்லத்தில் வாழும் குழந்தைகள் அனைவரும் நெருக்கடியான மகிழ்ச்சி அற்ற சூழலில் இருந்து வந்த போதும் இங்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

இதனைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். மகாதேவா இல்லக் குழந்தைகள் ஒன்றாக பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள் என்று பலர் சொல்லக் கேட்டுள்ளேன். ஆனால் நேரில் வந்து பார்க்கும்போதுதான் அறிந்து உண்மையை கொண்டேன்.

சிறார்களின் போஷாக்கு தரத்தினை அதிகரிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள கறவைப் பசுத்திட்டம், பழமரச் செய்கைத்திட்டம், தென்னைமரச் செய்கைத்திட்டம், பயிற்சித்திட்டங்களை வழங்கிவருவது இந்த சிறார்களுக்கு எதிர்காலத்தில் நல்ல பயனைத் தரும் என்பது உண்மை- என்றார்.

மேற்படி நிகழ்வில் 314 பிள்ளைகள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-50)




கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் கடந்த 8 ஆம் திகதி தரம்- 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான வேகம், விவேகம், வெற்றி எனும் தலைப்பிலான கருத்தரங்கு நிகழ்வு இடம்பெற்றது.

இதில் நல்லூர் பிரதேச சபை அபிவிருத்தி உதவியாளர் அ.மைலேஸ்வரசர்மா, குட்டிச்சுட்டி ஆசிரியர் யு.லதன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

(எ-14)

# பேச்சுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு கல்வித்திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் வலய ரீதியாக நடத்தப்பட்ட 03 பிரிவுகளைக் கொண்ட பேச்சுப் போட்டியின் இறுதிச் சுற்று முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வடமராட்சி வலயம்

கீழ்ப்பிரிவு

அ.டெனிசன் (மருதங்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), சி.வைஸ்ணவி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஜெ.யதுர்ஷனா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

மத்திய பிரிவு

அ.லொ.லெஸ்லி (மருதங்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), நி.நிதர்சனா (விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி), கு.டினேக்கா (மருதங்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை).

(தொடரும்)

# சமூகக் கடமைகளை உரிய நேரங்களில் செய்து முடிப்பவனே அரச சேவையாளன்

## வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் கருத்து

யாழ்ப்பாணம், ஜூலை 13

சமூக நோக்கோடு தரப்பட்ட கடமைகளை செவ்வனே உரிய நேரங்களில் செய்து முடிப்பவன் உண்மையான அரச சேவையாளன். இன்றைய அரச சேவையாளனுக்குரிய வேதனம் அரசினால் வழங்கப்படவில்லை, அது மக்களின் வரிப்பணத்தில் இருந்தே கிடைக்கிறது. பொருள்களின் விலையுயர்வு போன்ற நெருக்கீடுகளால் பல பிரச்சினைகளை அரச அலுவலர்கள் எதிர்நோக்குகின்றனர்- இவ்வாறு வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினர் த.நடனேந்திரன் தெரிவித்தார். யாழ். [illegible] டத்துக்கு காணி வழங்கும் விடயமாக அரச அலுவலர்கள் துரிதமாக செயற்பட வேண்டும் எனும் தொனிப்பொருளில் சுழிபுரத்தில் இடம்பெற்ற கருத்தமர்விலேயே நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அரச திணைக்களங்களில் கைவிரல் அடையாள இயந்திரம் பொருத்துவதற்கு முன்னர் அரச அலுவலர்கள் முறையான சேவையைச் செய்தார்கள்.

ஆனால் அரச திணைக்களங்களில் கைவிரல் அடையாள இயந்திரம் பொருத்தப்பட்ட பின்னர் உண்மையான அரச சேவையாளர்களின் வினைத்திறன் மழுங்கடிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் ஒவ்வொருவரும் குறித்த நேரத்திற்கு வருகை தர வேண்டும் என்ற கட்டளையே பிறப்பிக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் மக்கள் பணியை நிறைவு செய்து முடிக்க வேண்டும் என நினைப்பதில்லை.

யாழ்.குடாவைப் பொறுத்தவரை அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையேற்றம், எரிபொருள் விலையேற்றம் போன்ற பொருளாதார சுமைக்கு மத்தியில் அரச அலுவலர்கள் மக்கள் பணி செய்ய வேண்டியுள்ளது.

இது மனிதனின், உண்மையான சேவையாளனின் வாழ்வை பாதிக்கும்- என்றார்.

(எ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலுசந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## கிழக்கு மாகாண தேர்தலின் அவசியம்

வடக்கு மாகாண சபைக்கு அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதமளவிலேயே தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதிப்படுத்தியுள்ளார். இந்திய வெளிவிவகாரச் செயலர் சிவ்சங்கர் மேனன் இந்த மாத ஆரம்பத்தில் கொழும்பு வந்திருந்தபோது, அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அவரிடம் இதனைத் தெரிவித்திருந்தார். அதையே இப்போது மஹிந்தவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தியாவும் மேற்குலக நாடுகளும் எவ்வளவுதான் அழுத்தங்களைக் கொடுத்தாலும் அதற்குப் பணிந்து உடனடியாக வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தும் எண்ணம் எதுவும் ஒரு வருட காலத்துக்குத் தமக்கு இல்லை என்பதையே ஜனாதிபதியின் இந்தக் கூற்று வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது.

அதவேளை, ஒரு வருட காலம் இருந்தபோதும் கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு அதற்குத் தேர்தல் நடத்தப்படவுள்ளது. தேர்தலை நிறுத்தக் கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணை பாதகமாக அமைந்தால் தவிர, கிழக்கில் தேர்தல் நின்று போவதற்கான வாய்ப்புக்கள் ஏதுமில்லை.

வடக்கில் தேர்தலை நடத்த சர்வதேச அழுத்தங்கள் இருந்த போதும் அதனைப் புறக்கணித்துக் கொண்டு கிழக்கில் முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுப்பதன் அவசியம் தமிழர்கள் தரப்பின் சிந்தனைக்கு உரியது.

திட்டமிட்ட குடியேற்றங்கள் மற்றும் தமிழர்களின் வெளியேற்றங்களுக்குப் பின்னர் தற்போது கிழக்கில் மூவின மக்களும் கிட்டத்தட்ட சரிசமமான சனத் தொகையையே கொண்டுள்ளனர். அதாவது தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்கிற மூன்று தரப்புகளும் கிட்டத்தட்ட மூன்றிலொரு பங்கு வாக்காளர் பலத்தை அங்கு கொண்டிருக்கின்றன.

இதனடிப்படையில் ஏதாவது இரண்டு தரப்புக்கள் ஒன்று சேரும்போது அந்தத் தரப்புகளுக்கு வெற்றி வாய்ப்புகள் அங்கு அதிகமாகின்றன. முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கம் சாய்வதற்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவாகவே காணப்படும் நிலையில் அவர்களின் வாக்குப் பலத்தையும் கொண்டு கிழக்கில் தேர்தலை வெற்றி கொண்டுவிட முடியும் என்று அரசு கணிப்பிடுகிறது.

அப்படி நடந்து, கிழக்கு மாகாண சபையை அரசு கைப்பற்றினால் அதன் பின்னர் வடக்கில் தேர்தலை நடத்துவதற்கு அரசு பின்னிற்காது.

வடக்கில் தேர்தல் நடந்தால் இன்றல்ல அடுத்த வருடமும் அரசு வெற்றி பெறுவது முடியாத காரியம் என்பதை ஆட்சியாளர்களே தெளிவாக உணர்ந்து வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலையில் வடக்கில் தோல்வியடைந்து, தமிழர்களின் ஆதரவு அரசுக்கு அல்ல அது கூட்டமைப்புக்கே என்ற செய்தி வெளிப்படும் நிலையில் அரசியல் தீர்வு தொடர்பிலான சர்வதேச அழுத்தம் அரசு மீது அதிகரிக்கும் சாத்தியம் அதிகமுள்ளது.

அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் தமிழர்கள் வாழும் கிழக்கில் அவர்கள் அரசைத்தான் ஆதரித்தார்கள் என்று அதே சர்வதேச சமூகத்திடம் வாதிடுவதற்கும் அரசுக்கு கிழக்கு மாகாண சபையை மீண்டும் ஜனநாயகத்தின் பேரால் கைப்பற்றுவது தேவையாக உள்ளது. அதற்காகவே அது அங்கு முன்கூட்டிய தேர்தலை நடத்துகிறது.

# பேரழிவை நோக்கிச்

■ *வீ.என்.ரி*

பெரும்பான்மை என்ற பதம் யாவரும் நன்கு அறிந்த ஒன்று. ஜனநாயக நாட்டில் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பெரும்பான்மைதான் அளவு கோல் என்றும் சொல்லலாம். எந்தவொரு பிரச்சினையின் தீர்வையும் பெரும்பான்மைப் பலத்தின் அடிப்படையில் கணிப்பது ஜனநாயக ஒழுங்கு எனக் கருதப்படுகிறது.

பெரும்பான்மைப் பலம் மூலம் ஒரு தீர்வு காணப்படும் போது அங்கு சிறுபான்மையின் நிலைப்பாடு என்ன என்ற கேள்வி தவிர்க்க முடியாது எழுகின்றது. சிறுபான்மையின் பலம் ஒதுக்கப்படுவது போல் தோன்றுவதும் தவிர்க்க முடியாதது. ஆனால் அது அப்படியல்ல.

ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் அதற்குச் சில முன் நடவடிக்கைகள் தேவை. தீர்வு காணப்பட வேண்டிய விடயம் சபையில் விவாதிக்கப்படும். விவாதம் மூலம் அனைவருக்கும் விளங்க வைக்கப்பட்ட பின் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்படும். வாக்கெடுப்பில் பெரும்பான்மை பலம் காணும் கருத்து தீர்வு ஆகும். எடுக்கப்பட்ட தீர்வை மறு பரீசிலனை செய்து திரும்பவும் ஆய்வுக்குட்படுத்தி தீர்வை மாற்றியமைக்கும் உரிமை சிறுபான்மைக்குண்டு.

பெரும்பான்மைப் பலம், சிறுபான்மைப் பலம் என்பன ஒரு விடயம் விவாதிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட பின் தேர்வு மூலம் காணும் ஒரு முடிவாகும். ஜனநாயக ஆட்சியில் பெரும்பான்மைப் பலம் கொண்டவர்கள் ஆட்சியாளர்களாகவும் சிறுபான்மைப் பலம் கொண்டவர்கள் எதிர்கட்சியாளர்களாகவும் கருதப்படுவர்.

ஆட்சியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் எதிர்க்கட்சியினராகவும் எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் ஆட்சியாளர்களாகவும் மாற ஜனநாயக ஆட்சியில் வாய்ப்பு இருக்கிறது. எதற்கும் அளவு கோலாக அமைவது பெரும்பான்மைப் பலமே.

### ஜனநாயகம்

ஜனநாயகம் என்பது மக்களின் மக்களுக்கு மக்களால் ஆளும் ஓர் அமைப்பாகும். இந்த ஜனநாயக அமைப்பு தோன்றுவதற்கு மக்கள் தொடர்ந்து வந்த வரலாறு பதில் கூறும்.

மன்னர் ஆட்சியின்போது மன்னன் எவ்வழியோ அவ்வழியே மக்கள் வழியாக இருக்க வேண்டும் என்ற நிலை இருந்தது. இந்த ஒற்றை ஆட்சிமுறை நீங்கி மக்கள் ஆட்சி உருவாக ஜனநாயக ஒழுங்கு வழிவகுத்தது. இந்த ஒழுங்கு நெறிப்படுத்தப்பட பெரும்பான்மையினரின் விருப்பு ஓர் அளவு கோலாயிற்று.

ஜனநாயகம் என்பது ஒரு மக்கள் அமைப்பு. மக்களின் அடிப்படை உரிமைகளை மதித்து, காத்து சகல மக்களையும் சமத்துவமாகவும், நீதியோடும், சமாதானத்தோடும் வழிநடத்தும் ஒரு அமைப்பு. இதனை நெறிப்படுத்துவதற்கான யாப்பு விதிகள், சட்டங்களும் உண்டு. இந்த யாப்பு விதிகளும் சட்டங்களும் பெரும்பான்மைப் பலத்தால் தீர்மானிக்கப்படும்.

பெரும்பான்மைப் பலத்தை அளவு கோலாகக் கொண்டு தீர்வு காணும் முறை அரசியலில் மாத்திரமல்ல எந்தவொரு நிறுவன அமைப்பிலும், ஏன் மத அமைப்புகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. எனவே பெரும்பான்மைப் பலம் தேவை என்பது யாவராலும் உணரப்படுகிறது.

இருந்தாலும் இந்தப் பெரும்பான்மைப் பலத்திற்கு ஒரு மறு பக்கம் இருக்கிறது என்பதும் மக்களால் உணரப்பட வேண்டும். இந்த மறுபக்கத்தின் விளைவுகளைச் சிறுபான்மையினரான தமிழர்களும் முஸ்லிம்களும் கடந்து வந்த வரலாற்றில் சந்தித்திருக்கிறார்கள். இதனை "பேரழிவை நோக்கிச் செல்லும் பெரும்பான்மை வாதம்" என்ற தலைப்பில் குறிப்பிட விரும்புகிறேன்.

### ஆட்சியின் தேவையும் அதன் ஆரம்பமும்

அரசு அல்லது ஆட்சி என்பது ஒரு குடும்பத்தில் ஆரம்பமாகும் அமைப்பு. இந்த ஆட்சி அமைப்பு வரலாற்றில் எவ்வாறு பல மாற்றங்களை சந்தித்தது என்பது மனித வரலாற்றின் ஒரு பாடமாகும். மனிதன் ஒரு சமுதாய விலங்கு. இது மானிடவியல் படித்தவர்கள் ஏற்றுக் கொண்ட கூற்று.


ஆதிமானிடர் உணவுக்காக மிருகங்களை வேட்டையாடினர். கனி, கிழங்கு வகைகளை உண்டனர். பின்னர் காலம் செல்ல மந்தை மேய்க்கும் தொழிலை செய்தனர். அவர்கள் வேட்டையாடுபவர்களாகவும், மந்தை மேய்ப்பவர்களாகவும் வாழ்ந்தபோது காடுகளில் அலைந்து திரிந்தனர்.

காலப் போக்கில் அவர்கள் விவசாயம் செய்யத் தொடங்கினர். அவர்கள் விவசாயம் செய்யத் தொடங்கிய போது நீர் தேவைப்பட்டது. இதனால் அவர்கள் ஆற்றங்கரையில் தங்கள் வசிப்பிடங்ளை அமைத்து நிரந்தரமாக வாழக் கற்றுக் கொண்டனர். அவர்கள் குழுக்களாக வாழ்ந்து மனித உறவை வளர்த்துக் கொண்டார்கள். இந்தக் குழுக்கள் இணைந்து ஒரு சமுதாயமானது.

மானிடர் சமுதாயமாக வாழ்வதில் மகிழ்ச்சியடைந்தனர். பின்னர் சமுதாய வாழ்வில் நிலைத்து நின்றனர். இதனையே மனித நாகரிகத்தின் தொடக்கம் என்பர். மனித நாகரிகம் நதிக் கரையில் ஆரம்பமானது என வரலாறு கூறுகின்றது. இதனால் மனிதன் ஒரு சமுதாய விலங்கு என்ற கூற்று உறுதிப்படுத்தப்படுகிறது.

மானிடர் சமுதாயமாக மனித உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும்போது இந்த உறவைக் கட்டிக்காப்பதற்கென நெறிமுறைகளைக் கற்றுக் கொண்டனர். தந்தை, தாய், பிள்ளை, பேர்த்தி, பேரன் என்ற உறவுமுறைகள் அவர்களிடையே ஏற்பட்டது. இந்த உறவு மிருகங்களிடையே இயல்பாகக் காணப்பட்டது.

மானிடர் விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கியபோது அடுத்தவர்களின் உறவு, அடுத்தவர்களின் தேவை, பாதுகாப்பாக வாழ்வதற்கு அத்தியாவசியம் என்பதை உணர்ந்து கொண்டனர். மேலும் காலம் செல்லச் செல்ல சமுதாயத் தேவைகள் வளர்ந்து



கொண்டே போயின. அத்துடன் வாழ்க்கைக்கான சட்டமும், ஒழுங்கும் கடைபிடிக்கப்பட வேண்டும் என அவர்களால் உணரப்பட்டது.

காலப் போக்கில் சமுதாயவாசிகளான மானிடர் கிராம வாசிகளானார்கள். காலத்தின் தேவைகள் சிந்திக்கப்பட்டு மக்களிடையே சட்டமும், ஒழுங்கும் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் பின்னர் கிராமம் பட்டினமாகவும், பட்டினம் நகரமாகவும் மாறின. சமுதாயம் கிராமம், பட்டினம், நகரம் எனும் படிமுறை கடந்து வந்த வரலாற்றில் நாம் காணும் பாடம் இப்படியான சமுதாய அமைப்புக்குள் மக்கள் வாழத் தொடங்கியபோது சட்டமும் ஒழுங்கும் நெறிப்படுத்தப்பட ஒரு தலைமை வேண்டும் என்பதே.

இந்தத் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு உரியவர்கள் மக்கள் செல்வாக்கு உடையவர்களாகவும், பலசாலிகளாகவும், திறமைசாலிகளாகவும், இருக்க வேண்டும் எனக் கருதப்பட்டது.

சட்டமும், ஒழுங்கும் மானிடரிடத்தில் காணப்பட்ட போதிலும் அவர்களிடையே கருத்து முரண்பாடுகளும் காணப்பட்டன. இந்த முரண்பாடுகளைத் தவிர்த்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டிய தலைவர்கள் காலப் போக்கில் மன்னர்களாக மதிக்கப்பட்டனர். இந்த மன்னர்கள் அமைச்சரவையை உருவாக்கி அவர்களின் உதவியுடன் ஆட்சியை நடத்தினர். இவ்வாறே மன்னர் ஆட்சி மலரத் தொடங்கியது.

மன்னர் ஆட்சியில் மக்கள் மகிழ்ந்த காலமும் வரலாற்றில் உண்டு. காலப்போக்கில் மன்னர் ஆட்சியில் மக்கள் வதைக்கப்பட்ட போது அது கொடுங்கோல் ஆட்சியாகவும் மன்னர் ஆட்சியில் மக்கள் நல்லாசி பெற்ற போது அது செங்கோல் ஆட்சியாகவும் வரலாற்றில் பதிவானது.

மன்னர் ஆட்சி தொடர மன்னர்களின் வாரிசுகளாக வந்தவர்களே முடி சூட்டப்பட்டனர். மன்னர்கள், ஆட்சி வெறி கொண்டு அண்டை நாடுகளுடன் போர் தொடுத்தனர். போர்க் களம் மன்னர்களின் பலப் பரீட்சைக் களமாக மாறியது. இதனால் குடிமக்கள் சிதறுண்ட வரலாறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ச் செல்லும் பெரும்பான்மை வாதம்



உண்டு.

காலப் போக்கில் மன்னர் ஆட்சி மறைந்தது. மக்கள் மத்தியில் சுதந்திர உணர்வு மலர்ந்தது. இதனால் மன்னர் ஆட்சி மறைந்து மக்கள் ஆட்சியாக மலர்ந்தது. இது வரலாறு கண்ட உண்மை. மக்கள் ஆட்சி மலர்ந்தபோது மக்கள் புதிய உலகத்தை கண்டவர்கள் போல் மகிழ்ந்தனர். இதனால் ஆட்சியில் மாற்றம் காணும் உரிமை மக்களுடைய பெரும்பான்மைப் பலம் என்ற எண்ணம் உதயமாயிற்று.

மக்கள் ஆட்சி என்பது, மக்களின் மக்களை மக்களால் ஆளப்படுவதாகும். மாறிவரும் உலக வரலாற்றில் மாற்றங்களை சந்திப்பது, நாம் சந்திக்கும் அனுபவம். இந்த மாற்றம் மக்கள் ஆட்சியிலும் ஏற்பட்டது. மக்களின் மக்களை மக்களால் எனும் ஜனநாயக ஒழுங்கு மாறி பெரும்பான்மை மக்களின் பெரும்பான்மை மக்களைபெரும்பான்மை மக்களால் ஆளப்படுவது என்ற நிலை இப்போது ஏற்பட்டு விட்டது. இது ஜனநாயகம் அல்ல பேரினவாதம்.

### பேரினவாதம்

இன்று ஜனநாயகம் என்ற போர்வையில் பேரினவாதமே பல நாடுகளில் தலை தூக்கி நிற்கிறது. இதனால் பெரும்பான்மை இனம் பெரும்பான்மை பலம் கண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்க முற்படும்போது சிறுபான்மை இனங்கள் ஒதுக்கப்படுகின்றன. இதனால் பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனம் என்ற பேதம் பாராட்டப்படுகிறது.

இதனால் சிறுபான்மை இனம் தம் அடிப்படை உரிமை பற்றியோ சமத்துவம் பற்றியோ நிதி பற்றியோ எடுத்துக்கூற வாய்ப்புக்கள் இல்லாது போகின்றன.

இப்படியாக பெரும்பான்மைப் பலத்தால் சிறுபான்மையினர் ஒதுக்கப்படும் நிகழ்வு உலகளாவிய பிரச்சினையாயிற்று. இந்த விதமாக ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இனம் தம் உரிமையைக் காத்து சுதந்திரமாக வாழ பெரும்பான்மை இனத்தின் தயவை எதிர்பார்க்க வேண்டியதாக இருந்தது. இதனால் சிறுபான்மை மக்களின் சிறுபான்மை மக்களை சிறுபான்மை மக்களால் ஆளப்பட வேண்டும் எனும் வேட்கை ஆங்காங்கே உருவாகியது.

இதனைத் தவறு என்று யாரும் கூற முடியாது. பெரும்பான்மை இனத்தினால் சிறுபான்மை இனத்தின் அடிப்படை உரிமையும், சுதந்திரமும் மறுக்கப்பட்டபோது அது ஒரு போராட்ட சூழ்நிலையை உருவாக்கியது. இது ஆரம்பத்தில் அறவழிப் போராட்டமாகத் தொடங்கியது. சாலைமறியல், சத்தியாக்கிரகம் போன்ற அகிம்சைப் போராட்டங்களாக இருந்தது. இவற்றைப் பெரும்பான்மை இனம் காவல் துறை, இராணுவம் போன்ற ஆயுதப் படைகளின் துணை கொண்டு முறியடித்தது.

அகிம்சை வழியில் போராடியவர்களை பெரும்பான்மை இனம் தமது இராணுவத்தால் ஆயுதமுனையில் முடக்கியது. இது ஓர் அடக்கு முறையான செயல். இது ஜனநாயக வழிக்கு முரணானது. இந்த வகையான அடக்குமுறைகள் உலகத்தில் பல பகுதிகளில் நடைபெற்றன.

சிறுபான்மை இனத்தின் உரிமை மறுக்கப்படுவது பற்றி பல தொண்டர் அமைப்புக்கள், நாடுகள் கண்டனங்களைத் தெரிவித்தபோதிலும் பெரும்பான்மைப் பலத்தால் அவையெல்லாம் முறியடிக்கப்பட்டன. இதனால் சுதந்திர வேட்கை கொண்டவர்கள் முக்கியமாக இளைஞர்கள், வாலிப பராயம் எய்தியவர்கள் சீறி எழுந்தனர். தம் உரிமைக் குரலை ஊடகங்கள் மூலமாகவும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் பேச்சு மூலமாகவும் வெளிப்படுத்தினர். அதுவும் பெரும்பான்மை பலத்தால் முறியடிக்கப்பட்டது.

அறவழிப் போராட்டங்கள் செயலற்றுப் போனதால் சிறுபான்மை இனம் தம் உரிமைப் போரைத் தீவிரப்படுத்தியது. அறவெளிப் போராட்டங்கள் இராணுவ ரீதியாக முறியடிக்கும் நிலை தொடர்ந்ததனால் சிறுபான்மை இனத்தாரின் முக்கியமாக வாலிபர்கள் தம் உரிமை காக்க ஆயுத மேந்தி விடுதலைவீரர்கள் ஆனார்கள். முதலில் இராணுவ பலத்தை முறியடிக்க மறைந்து நின்று தாக்கும் உத்தியைக் கையாண்டனர். இதனைக் கொரிலா போர் என்றனர்.

இந்தக் கொரிலா போரை நடத்தியவர்கள் பெரும்பான்மை இனத்தால் பயங்கரவாதிகள் என்று பெயர் சூட்டப்பட்டார்கள். எனவே எங்கே பயங்கரவாதம் இருக்கிறதோ அங்கே மேற்கூறிய ஜனநாயக மறுப்பு உண்டு என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். உலகத்தில் பிறந்த எந்தவொருவனும் பயங்கரவாதியாகப் பிறப்பதில்லை. பயங்கரவாத சூழ்நிலைக்கான காரணம் பேரினவாதம் என்று ஒரே சொல்லில் கூறலாம்.

பேரினவாதம் என்பது பெரும்பான்மை இனப்பலம் காணும் மக்களின் அபிலாசைகளின் வெளிப்பாடு. அதே வேளை சிறுபான்மை மக்களின் அபிலாசைகள் பெரும்பான்மை பலத்தால் மறுக்கப்படும் வெளிப்பாடு.

ஜனநாயகம் என்ற போர்வையில், ஆட்சியை நடத்துகிறோம் என்று கூறிக்கொள்ளும் பல நாடுகளில் இந்தக் குறைபாடு காணப்படுகின்றது. காலப் போக்கில் அந்த நாடுகளைப் பேரழிவை நோக்கி இந்தப் பெரும்பான்மை வாதம் வழிநடத்துகிறது என்ற உண்மை அறிந்து கொள்ளப்படும்.

### நமது நாட்டில் பெரும்பான்மைப் பலம்

ஜனநாயக நீர் ஓட்டத்தில் செல்வதாகக் கூறிக்கொள்ளும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இந்த நாட்டின் கடந்த கால வரலாற்றைக் காணும்போது மேற்கூறப்பட்ட விடயங்கள் ஒத்துப்போவதை நாம் காணலாம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் 1956ஆம் ஆண்டு வரை ஜனநாயகப் பாதையில் சென்றது என்பதை யாவரும் அறிவர். அதன் பின் ஆட்சிப் பொறுப்பை எடுத்தவர்கள் ஜனநாயக வழியை விட்டு விலகிப் பெரும்பான்மை இனத்துக்காக ஆட்சி செய்பவர்களாக மாற முற்பட்டனர்.

இலங்கையில் சிங்களம் ஆட்சி மொழி என்றும் அத்துடன் இது பௌத்த நாடு என்றும் கோரிக்கைகள் ஆட்சி பீடத்தில் முன்மொழியப்பட்டன. இது அந்த ஆட்சியில் பேரினவாதமாகத் தூவப்பட்ட விதைகளாகும்.

இதனால் புறக்கணிக்கப்பட்ட சிறுபான்மை இனம் தம் அடிப்படை உரிமைகளையும் அபிலாசைகளையும் வெளிப்படுத்த சமஷ்டி எனும் ஆட்சி அமைப்பைக் கோரி அதற்காகக் கட்சிக் கோட்பாடுகளை ஏற்படுத்தினர். நடைபெற்ற தேர்தல்களில் சிறுபான்மையினரிடம் இருந்து இந்தக் கட்சிகள் அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெற்றன.

இருந்தபோதிலும் நாடாளுமன்றத்தில் பேரினவாதிகளால் சிறுபான்மையினரின் கோரிக்கைகள் மறுக்கப்பட்டன. சிங்களம் ஆட்சி மொழி என்றும் பௌத்தம் அரச மதம் என்றும் பிரகடனமாகியபோது கொதித்தெழுந்த சிறுபான்மை இனம், தங்கள் கோரிக்கைகள் ஆட்சி மன்றத்தினால் மறுக்கப்பட்டதால் தம் கோரிக்கைகளை வெளிப்படுத்த சத்தியாக்கிரகம் என்ற அகிம்சைப் போராட்டத்தை மேற்கொண்டது.

இந்தப் போராட்டம் பொலிஸாராலும் இராணுவத்தினராலும் முறியடிக்கப்பட்டது. அகிம்சைப் போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட சிறுபான்மையினரின் கோரிக்கைகள் தீர்க்கப்பட விவாதங்கள் நடத்தப்பட்டன; ஒப்பந்தங்களும் ஏற்படுத்தப்பட்டன. ஆனாலும் அவை பயனற்றுப் போயின. இவை பயனற்றுப் போவதற்கு பெரும்பான்மை இனத்தின் எதிர்ப்பே காரணமாயிற்று.

பெரும்பான்மையினம் சிறுபான்மையினம் என்ற பேதம் மேலும் வளர்ந்து கொண்டே போனது. இதனால் சிறுபான்மை இனம் தம் அடிப்படை உரிமை காக்க, சுய ஆட்சி உணர்வுகளை நிலைப்படுத்த தாம் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களை அரசு அங்கீகரிக்க வேண்டும் என ஜனநாயக ரீதியில் தேர்தல் மூலமாக வெளிப்படுத்தினர். 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நாடாளுமன்ற எதிர்க்கட்சியாகப் பலம் பெறும் அளவிற்கு செல்வாக்குப் பெற்றனர்.

எதிர்க்கட்சி பலம் பெற்ற சிறுபான்மை இனம் நாடாளுமன்ற அமர்வுக்குள் வராது தடுக்க பெரும்பான்மை இனம் நடவடிக்கை எடுத்தது. இது ஜனநாயக வழிக்கு முரணானது. அங்கீகரிக்கப்பட்ட கட்சி தம் தேர்தல் வாக்குறுதிகளை தேர்தல் மூலம் பெரும்பான்மை மக்களிடம் பெற்றிருந்த போதிலும் அவர்கள் நாடாளுமன்ற அமர்வுகளில் வராது தடுத்தது. இது ஜனநாயக வழிக்கு முரணானது.

அங்கீகரிக்கப்பட்ட கட்சி ஒன்று சிறுபான்மை மக்களுக்குத் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளுக்கான பெரும்பான்மை ஆதரவை அவர்களிடம் இருந்து பெற்றபோதிலும் அவர்களால் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள முடியவில்லை.

சிறுபான்மையினம் தம் சுய ஆட்சி உணர்வுகளை நிலைப்படுத்த, தாம் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களைத் தமது தாயகமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற அந்தக் கட்சியின் கொள்கையை கைவிட்டால் மாத்திரமே நாடாளுமன்றத்தில் அதற்கு இடமுண்டு என்று பெரும்பான்மையினக் கட்சிகள் நிர்ப்பந்தித்தன. இல்லையென்றால் அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் இடம் கிடையாது என பெரும்பான்மைப் பலம் கொண்ட பெரும்பான்மைத் தலைமை கட்டளை இட்டது.

இதனால் சிறுபான்மை இனத்தின் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் நாடாளுமன்றத்துக்குச் சமூகம் கொடுக்காது விட்டனர். அந்த நிலையிலும் ஆட்சியின் செயற்பாடுகள் பெரும்பான்மை இனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. சிறுபான்மை இனத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் செல்ல முடியாதவர்களாக இருந்தபோது அவர்களது பிரதேசத்தைக் கவனிக்க அரச பிரதிநிதிகளாக ஆளுநர்கள் அனுப்பப்பட்டனர். அப்போதே இலங்கையில் ஜனநாயகம் இறந்து விட்டது.

இந்தக் காலகட்டத்தில்தான் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த வாலிபர்கள் தங்கள் விடுதலை உணர்வுகளை வெளிப்படுத்தினர். காலப்போக்கில் அது விடுதலைப் போராட்டமாக மாறியது. ஆயுதங்களை அது தன் கைகளில் எடுத்துக்கொண்டது. இந்த விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பயங்கரவாதிகள் என பெயர் சூட்டப்பட்டனர். இந்த நிலைக்கு காரணம் பெரும்பான்மை ஆட்சியாளர்கள்தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

ஜனநாயக வழியை விட்டு பேரினவாதம் பெரும்பான்மை பெற்றதன் விளைவே இதற்கு காரணம்.

### பயங்கரவாதம்

பயங்கரவாதம் என்றால் என்ன?

1. ஒருவரின் அடிப்படை உரிமை பெரும்பான்மை பலத்தினாலோ அல்லது ஆயுததாரிகளினாலோ அடக்கப்படல்.

2. தொடர்பு சாதனங்களில் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு உண்மை நிலைமை மறைக்கப்படல்.

3. அரசனாலும் சரி, குடிகளானாலும் சரி ஒருவனின் உயிருக்கு பாதுகாப்பு கொடுக்கத் தவறல்.

4. ஜனநாயக அடிப்படை கோட்பாடுகள் பேரினவாத செல்வாக்கால் மாற்றப்படல்.

5. பேச்சுக்களால் தீர்க்கப்பட வேண்டிய அரசியல் பிரச்சினையை இராணுவ பலத்தால் தீர்க்க முயல்தல்.

6. சுதந்திரமாக சுய உழைப்பில் வாழ்ந்தவர்கள் அகதிகளாக்கப்படல்.

7. வான் தாக்குதல், எறிகணைத் தாக்குதல் மூலம் அப்பாவி மக்கள் அங்கவீனர்களாக்கப்படல், கொல்லப்படல்.

8. வைத்தியசாலைகள் மீதும், பாடசாலைகள் மீதும் வான் தாக்குதல்களை நடத்தி நோயாளிகளும், மாணவர்களும் கொல்லப்படல்.

9. வசதியாக தம் உறவுகளுடன் மகிழ்ந்து வாழ்ந்த மக்களை அகதிகளாக்கி நலன்புரி நிலையங்கள் என்ற போர்வையில் தனிமைப்படுத்தல்.

10. மனித உரிமை மீறல்களில் ஈடுபடல், ஆள்களைக் கடத்துதல், ஊடகவியலாளர்களைத் தாக்கிக் கொல்லுதல் என்பனவே பயங்கரவாதம் எனப்படுகிறது.

இப்படியான பயங்கரச் செயல்களை தற்போதைய ஆட்சிக் காலத்தில் இலங்கையில் பரவலாகக் காணலாம். நடைபெற்ற பயங்கரவாதச் செயல்கள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றை நியாயப்படுத்த ஜனநாயக வழிகள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இப்படியாக ஜனநாயகத்தின் அடிப்படை நோக்கம் முற்றுமாக மாற்றமடைந்து இலங்கை நாட்டில் பேரினவாதத்துக்கு வழிவகுக்கிறது. எனவே இந்த நிலைமாற வேண்டுமானால் சிறுபான்மையினம் பெரும்பான்மை பலம் பெற்று முன்வைத்த சமஷ்டியை இலங்கை நாடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சிறுபான்மை இனத்தின் அடிப்படை உரிமை காக்கப்பட இது ஏற்ற தீர்வாக அமையும். நடைபெற்ற போர் அழிவுகளால் சோர்ந்து போய் செயலிழந்து தடைமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு தம் எதிர்காலம் எப்படி அமையும் என்று ஏங்கியிருக்கும் மக்களுக்கு இதுவே ஏற்ற தீர்வாகும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய படங்களா? பழைய பிணங்களா?

பட்டினத்தார் ஒரு வீதி வழியாக ஆனந்தமாக நடந்து போனார். ஒரு வீட்டு வாசலில் கூட்டமாக உட்கார்ந்து அழுது கொண்டிருந்தனர். அந்த வீட்டில் யாரோ மரணமடைந்திருந்தார். அழுகிறவர்களை உற்று உற்று பார்த்த பட்டினத்தடிகள் 'ஓ' வென்று தானும் அழுதார். அவர்களைவிட பெரிய சத்தமாக அழுதார்.

அவரைப் பார்த்த ஊர்மக்கள் 'யாரோ இறந்தவரின் நெருங்கிய நண்பர் போலும்' என்று கருதி அவரைச் சமாதானப்படுத்தினார்கள். அவரோ நிறுத்துவதாக இல்லை. பேச்சு கொடுத்தார்கள். ''இறந்தவர்கள் உங்கள் உறவினரா?'' என்றனர். 'இல்லை' என்றார். 'நண்பரா?''என்றனர். ''இல்லை. இவரை எனக்குத் தெரியவே தெரியாது'' என்றார். ''பின் ஏன் இவருக்காக இவ்வளவு அழுகிறீர்கள்?'' என்று கேட்டனர்.''போய் விட்ட அவனுக்காக அழவில்லை.. அவனுக்காக அழுகிற உங்களுக்காக அழுகிறேன்'' என்றார். யாருக்கும் புரியவில்லை. பட்டினத்தார் தொடர்ந்தார்.

'இறந்தவனுக்காக அழுகிற நீங்கள் யாருமே சாகப் போவதில்லையா? அது போகும் பிணம். நீங்களோ சாகும் பிணம். இவ்வளவுதான் வித்தியாசம். இந்த உண்மை தெரியாது அழுகிற உங்கள் மூடத்தனத்தை நினைத்து நான் அழுகிறேன்'' என்றார். போம்பிணம் என்று செத்தாரையும் சாம்பிணம் என்று மற்றாரையும் காட்டிய பட்டினத்தார் பாஷை படிக்க வேண்டிய ஒன்று.

''நாளும் நாம் சாகின் றோமால்
நமக்கு நாம் அழாக தென்னே?''

என்று பழைய பாட்டு ஒன்று உண்டு. அருமையான பாட்டு.

தினம்தோறும் கொஞ்சம் கொஞ்சமாக நாம் சாகிறோம். தோல் சாகிறது. எலும்பு தேய்கிறது. கண் கெடுகிறது. காது மந்தமாகிறது. இப்படி எல்லாமே சிறிது சிறிதாகச் செத்துக் கொண்டே போகிற போது ஒருநாள் உடம்பு முற்றிலும் பயனற்றதாகும் போது அழுது ஆர்ப் பாட்டம் செய்வது அறிவுடைமையா?

பகவத் கீதையில் மரணம் பற்றிய விளக்கம் மிக மிக நுட்பமானது. தாய் வயிற்றில் கருவாக உருவாகிறோம். சிசுவாக ஜனிக்கிறோம். பால பருவத்தில் ஆடுகிறோம். இளமையில் துள்ளுகிறோம். நடு வயதில் தேங்குகிறோம். முதுமையில் துவளுகிறோம். மாறிக்கொண்டே போன நாம் மரணத்தைச் சிறிது சிறிதாக நுகருகிறோம். இளமை வந்தது. அப்போது குழந்தை உடல் செத்தது. இளமை செத்த போது முதுமை வந்தது. அப்படியானால் ஒவ்வொரு மாறுதலிலும் பழைமை மரணம் அல்லவா அடைந்தது. இந்த மாறுதல் விளங்க முடியாதபடி அணு அணுவாக ஓயாமல் நிகழ்ந்து கொண்டே இருப்பதால் நாம் பதற்றம் அடைவதில்லை. ஒரே நாள் இரவில் நிகழாமல், ஒவ்வொரு விநாடியும் இந்தக் கொடிய மரணம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

எமது பழைய புகைப்படங்களை உற்றுப் பார்த்தால் நமது மரணத்தின் வீரியம் புலனாகும். நாம் எவ்வளவு செத்திருக்கிறோம் என்பது புரிய வரும்.

கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் மிக அழகாக இதைப் படம் பிடிக்கிறார்கள்.

''எமது புகைப்பட அல்பத்தைப் புரட்டினால்
இருப்பவை-
பழைய படங்கள் அல்ல
பழைய பிணங்கள்''

எமது ஒவ்வொரு பழைய படமும் நமது பழைய பிணம் என்பது புரிந்தால் ஒரு பிணத்திற்காக ஒப்பாரி வைப்போமா?

பஞ்சபூதங்களின் கூட்டுக் கலவையாய் உடம்பு கூடிக் கூடி பெரிதாகிறது. வளருகிற மாதிரி தோற்றம் காட்டி மறைந்து கரைகிறது. உண்மையில் இந்த அவ்வளவு மாற்றங்களுக்க இடையிலும் ''நான் மாறுகிறேன்'' என்பதை உள்ளிருந்தபடியே உணருகிறதே.. அது என்ன? அதுதான் ஆத்மா. அழிவில்லாத விழிப்பு.. அறிவுபூர்வமான இருப்பு.சாட்சி... அது நாம் என்கிற தெளிவே ஆத்ம ஞானம். இந்த உடலை நாம் என்பதே அறிவீனம். இதற்கு உதாரணமாக ஒரு கதை உண்டு?

மழையில் ஒரு பண்ணையார் நடந்து போனார். கால் செருப்பு அறுந்து விட்டது. நடக்க மிகக் கஷ்டமாக இருந்தது. செருப்பைக் கையில் தூக்கி நடக்க அவர் கௌரவம் இடம்தரவில்லை. பக்கத்தில் இருந்த ஒரு விட்டின் கதவைத் தட்டினார். அறுந்த செருப்பை அவர் வீட்டில் விட்டுவிட்டுப் போவதாகவும் நாளை வந்து எடுத்துக் கொள்வதாகவும் சொன்னார். அறுந்து போன பழைய செருப்பைத் தமது வீட்டில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள நண்பர் சம்மதித்தார்.

வீதியில் இறங்கி சிறிது தூரம் சென்ற பண்ணையய் அறுந்த கிடந்த மின கம்பியை வெறுங்காலால் மிதிக்க இறந்தே போனார். ''ஐயா , இந்தப் பிணம் இன்று ஒரநாள் உங்கள் வீட்டில் இருக்கட்டும். நாளை வந்து எடுத்துக் கொண்டு போய் சுடுகாட்டில் வைக்கிறோம்'' என்று கேட்டார். வீட்டுக்காரர் ''எவன் பிணத்தையோ கொண்டு வந்து எம் வீட்டில் ஏன் வைக் கிறீங்க?'' என்று சீறினார்.

இறந்து போன நாய்த் தோலால் செய்யப்பட்ட பழைய செருப்புக்குக் கிடைத்த மரியாதை பாதுகாப்பு அதன் எஜமானனுக்கு இல்லையோ? ஏன்? யோசித்தீர்களா?



சுகி.சிவம்

# வறிய மாணவர் கல்விக்கு வளம் சேர்க்கும் கோப்பாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை



ஞானி

**யாழ்.** மாவட்டத்தின் கல்விப் பாரம்பரியத்தில் சமூக ரீதியில் வேறுபாடு நிலவிய காலப்பகுதியில் பின் தங்கிய சமூகங்களின் கல்விக்கு வளம் சேர்த்த நிறுவனங்கள் என்ற வகையில் அமெரிக்கன் மிஷனறிக்கும் றோமன் கத்தோலிக்க சமய பீடத்துக்கும் தனித்துவமான இடம் உண்டு. இந்த வகையில் 1936 ஆம் ஆண்டு கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை தனது கல்விப் பணியை ஆரம்பித்தது.

சூழலில் உள்ள ஒரு சில மாணவர்களை ஒன்று சேர்த்து, சிறிய கொட்டகையில் கத்தோலிக்க சமயத்தை போதித்ததோடு இணைந்த நிலையில் கல்வியும்-கத்தோலிக்க சமய போதனையும் மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டன. குறித்த காலப்பகுதியில் கல்வியில் நிலவிய சமத்துவமின்மையும், சாதீய கட்டுப்பாடுகளும் தளர்ந்துபோக கத்தோலிக்க மதகுருமாரின் இந்த முயற்சி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை கோப்பாய் சந்தியில் இருந்து 'வடக்கே மருதனார் மடம் நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் சூசையப்பர் ஒழுங்கை வீதியில் இருந்து 100 மீற்றர் தூரத்துக்கு உள்ளே அமைந்துள்ளது.

60 அடி நீளம் கொண்ட ஒரு மாடிக்கட்டடத்தில் தரம் 1-5 வகுப்புகளைக் கொண்ட ஆரம்பப்பாடசாலையில் தற்பொழுது 104 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். பாடசாலை வளவு முழுவதும் உள்ள கட்டடங்கள் மாணவர்கள் இயல்புநிலையில் நடமாடுவதற்குக் கூட பொருத்தமான இடைவெளி இல்லாத இடநெருக்கடியோடு இருக்கின்றன. பாடசாலைக்கு உரிய இடப்பரப்பாக அமைந்தது இரண்டரைப் பரப்பு நிலம் மட்டுமே.

பாடசாலைக்கு முன்பாக வெட்ட வெளியாகக் காணப்படும் தனியாருக்குச் சொந்தமான பனந்தோப்பும், அண்மையில் உள்ள சூசையப்பர் ஆலய வீதியுமே மாணவர்கள் பயன்படுத்தும் வெளியிடங்களாகும். மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சியை சூசையப்பர் ஆலய வீதியில் பெற்றுக் கொள்கின்றனர்.

> 1965 ஆம் ஆண்டு அந்தோனியார் தேவாலயம் புனரமைக்கப்பட்டு தற்போது காணப்படும் கட்டுமான அமைப்பில் திருத்தி அமைக்கப்பட்டது. அதை அடுத்து ஆண்டு தோறும் நடைபெறும் திருவிழாவை முன்னிட்டு ஆலயத்தை வர்ணம் பூசி புதுப்பொலிவடையச் செய்வதோடு காலத்தின் தேவைக்கு ஏற்ப கட்டுமானப் பணிகளும் திருத்த

பாடசாலையின் அமைவிடம் குறித்த சூழலில் வாழும் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வளம் சேர்ப்பதாக இருந்தபோதிலும் பொருத்தமான இடவசதி இல்லாத சூழ்நிலை மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் கல்விக்குரிய முழுமையான வளவசதி இல்லை என்ற மன நெருக்கடியையும் இந்த வகையில் கல்வி நிர்வாகமும் பாடசாலை சமூகமும் தங்களை புறம் தள்ளியுள்ளது என்ற ஆதங்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

[illegible] ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை றோமன் கத்தோலிக்க மத பீடத்தினால் நிர்வகிக்கப்பட்டு பின்னர் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகவும் 1962 ஆம் ஆண்டு அரசால் சுவீகரிக்கப்பட்டு அரச பாடசாலையாகவும் செயற்பட்டு வருகின்றது.

மதநிறுவனம் சார் நிலையில் மற்றும் உதவி நன்கொடை பெறும் காலப்பகுதியில் பாடசாலையின் வளர்ச்சிப் போக்கில் இருந்து வந்த முன்னேற்றம் அரச பாடசாலையான பின்னர் காணப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வகுப்பறைகளைக் கொண்ட 60x20அடி கொண்ட மாடிக் கட்டடத்தின் கீழ்தளம் 'யூ.என்.எச்.சி.ஆர்' நிறுவனத்தினாலும் மேல்தளம் 'ஜீ.ரி. இசற்' நிறுவனத்தினாலும் கட்டப்பட்டவையாகும்.

தரம் 1-5 மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் குறித்த தர நிலைக்கு ஏற்ற கல்விநிலையோடு முன்னெடுக்கப்படுவது குறித்து, குறித்த மாணவர் சமகால சூழ்நிலைக்குரிய கற்றல் தேர்ச்சிகளை உரிய முறையில் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பாக இருந்த போதிலும், ஏனைய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு உரிய வசதி வாய்ப்புக்கள் போன்று தமது பிள்ளைகளுக்கு இல்லையே என்றும் தமது வறுமை நிலைதான் இதற்குக் காரணம் என்றும் பெற்றோர் கவலை கொண்டுள்ளனர்.

இது தொடர்பாகப் பெற்றோர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் ''கல்வி பிறப்புரிமை என்றும், கல்வியில் எல்லோருக்கும் சமத்துவம், வேறுபாட்டுக்கு இடமில்லை என்றும் கூறப்படும் நவீன கல்விச் சிந்தனையில், எமது பிள்ளைகளுக்கு சம சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே'' என்று கவலை தெரிவித்தார்.

பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி வளவசதிக்கும் 'சப்பாத்து' மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கலிலும் புலம் பெயர் உறவுகளும் உள்ளூர் நலன்புரி அமைப்புக்களும் காலத்துக்குக் காலம் உதவி வருவதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

பாடசாலையின் அதிபராக இலங்கை அதிபர் சேவை தரம் இரண்டு-இரண்டைச் சேர்ந்த திருமதி பிறேமலதா ஜெயரத்தினராசா கடமையாற்றி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிப்போ உயரதிகாரிகள் நால்வருக்கு இடமாற்றம்

ஹற்றன், ஜூலை 13

இலங்கை போக்குவரத்து சபையின் ஹற்றன் டிப்போ அதிகாரிகள் நால்வர் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் சசி வெல்கம தெரிவித்தார்.

ஹற்றன் டிப்போவின் நிர்வாக அதிகாரி, பொறியியலாளர், கணக்காளர், களஞ்சியசாலை நிர்வாகி ஆகியோரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கம்பளை வலய அலுவலகத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

ஹற்றன் டிப்போவில் இடம்பெற்றுவரும் நிதிச் சிக்கல் மற்றும் சம்பளம் குறித்து எழுந்துள்ள மோசடி, ஊழல் தொடர்பில் விவாதிக்கப்பட்டதன் பின்னரே இவர்கள் இடமாற்றப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார். (ச)

## வறிய மக்களுக்கு பாவனைப் பொருள்கள்

எருவில், ஜூலை 13

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையினால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வறிய மக்களுக்கு ஒருதொகுதி பாவனைப் பொருள்களும் சுயதொழில்களுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைத் தலைவர் த.வசந்தராஜா, கிளை நிறைவேற்று உத்தியோகத்தர் வி.பிரேமகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ச-31)

# கணினி மயப்படுத்தப்பட்ட பதிவுச் சான்றிதழ்; கிழக்கு பதிவாளர் திணைக்களம் புறக்கணிப்பு

### பொதுமக்கள் விசனம்

**கணினிப் பதிவுகள் வழங்குவதற்கென 2008 ஆம் ஆண்டு அனுப்பி வைக்கப்பட்ட இலத்திரனியல் உபகரணங்கள் தூசு படிந்து உறங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

அம்பாறை, ஜூலை 13

கணினி மயப்படுத்தப்பட்ட பிறப்பு, இறப்பு திருமணப் பதிவு வழங்கல் திட்டத்தில், கிழக்கு மாகாண பதிவாளர் நாயகம் திணைக்களம் புறக்கணிக்கப்பட்டுள்ளதுடன் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை முக்கியத்துவப்படுத்தி கணினி மயப்படுத்தப்பட்ட பதிவுச் சான்றிதழ்கள் வழங்கும் திட்டம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினூடாக 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் கொழும்பு, யாழ்ப்பாணம் உட்பட ஏனைய சில மாவட்டங்களில் கணினி மயப்படுத்தப்பட்ட பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் வழங்கல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதிலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கில் இந்தத் திட்டம் இதுவரை நடைமுறைப் படுத்தப்படாமை பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அசமந்தமா? அல்லது திட்டமிட்ட புறக்கணிப்புடன்கூடிய பாரபட்சமா? எனப் பொதுமக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலகங்களில் இயங்கி வரும் பல மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்கு குறித்த கணினிப் பதிவுகளை வழங்குவதற்கென 2008 ஆம் ஆண்டு அனுப்பி வைக்கப்பட்ட இலத்திரனியல் உபகரணங்கள் தூசு படிந்து உறங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இடம்பெற்று வந்த பிறப்புகளுக்கான பதிவுச் சான்றிதழ்களை வழங்கும் மண்முனை வடக்கு பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம் போன்ற முக்கிய அலுவலகங்களில் இந்த கணினிப் பதிவு வழங்கல் ஆரம்பிக்கப்படுவது பொது மக்களுக்குப் பெரும் இலகுவாக அமையுமென சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே பதிவாளர் நாயகம் திணைக்களம் இந்த விடயத்தில் தாமதம் காட்டாது உடன் நடவடிக்கை மேற்கொண்டு கிழக்கு மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பை நிறைவேற்ற முன்வரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-30)

## குழுக்கள் மோதல்; இருவர் படுகாயம்

கண்டி, ஜூலை 13

கண்டியிலுள்ள சந்தையொன்றில் நேற்று வியாழக் கிழமை காலை இரண்டு விற்பனையாளர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்த மோதலில் ஈடுபட்டுள்ளவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணை முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறினார்.

காயமடைந்தவர்கள் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக வைத்திய சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

(ச)

## முஸ்லிம் பாடசாலைக்கு மூன்று மாடிக் கட்டடம்

**முதலாம் மாடிக் கட்டடம் அமைப்பதற்கு 58 லட்சம் ரூபாவை சப்ரகமுவ மாகாண சபை ஒதுக்கியுள்ளது.**

கேகாலை, ஜூலை 13

கேகாலை நகரில் அமைந்துள்ள ஒரே ஒரு முஸ்லிம் பாடசாலையான கேகாலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தை அபிவிருத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலையில் 225 மாணவ, மாணவிகள் கல்வி கற்கின்றனர். அவர்களுக்குப் போதிய இடவசதிகள் இல்லாத காரணத்தால் அப்பாடசாலைக்கு மூன்று மாடிக் கட்டடத் தொகுதி அமைத்துக் கொடுப்பதற்கு சப்ரகமுவ மாகாண முன்னாள் முதலமைச்சர் மஹிபால ஹேரத் நடவடிக்கை எடுத்துள்ளார்.

குறித்த பாடசாலைக்குப் புதிய கட்டடத் தொகுதி அமைப்பதற்கான முதலாம் கட்டப் பணிகள் கடந்த செவ்வாய்க்கிழமை தேசிய மரபுரிமைகள் அமைச்சர் ஜகத் பாலசூரிய, சப்ரமுவ மாகாண முன்னாள் முதலமைச்சர் மஹிபால ஹேரத் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பாடசாலைக்கு முதலாம் மாடிக் கட்டடம் அமைப்பதற்கு 58 லட்சம் ரூபாவை சப்ரகமுவ மாகாண சபை ஒதுக்கியுள்ளது.

(ச)



திருகோணமலை, கடற்படைத்தள வீதியில் சாரணர் சிலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. திருகோணமலை சாரணர் சங்கத்தினால் நிர்மாணம் செய்யப்படவுள்ள இந்தச் சிலைக்கான அடிக்கல்லை திருகோணமலை நகர சபையின் தலைவர் க.செல்வராசா நட்டுவைக்கின்றார். (40)

## மண்ணரிப்பைத் தடுப்பதற்கு வெள்ளத் தடுப்பு அணை



மட்டக்களப்பு, ஜூலை 13

மட்டக்களப்பு நகருக்குள் நுழையும் கோட்டை, முனைப்பால நுழைவாயிலுக்கான வெள்ளத்தடுப்பு அணைக்கட்டுக்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் கே.தர்மரத்தினம் தெரிவித்தார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சின் அனுசரணையுடன் 40 லட்சம் ரூபா செலவில் கோட்டை, முனைப்பால நுழைவாயிலுக்கான வெள்ளத்தடுப்பு அணைக்கட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார். பருவகால மழை ஆரம்பித்ததும் இந்தப் பாலத்தின் கரையோரப் பகுதிகளில் மண்ணரிப்பு ஏற்படுவதாகவும் இதன் காரணமாக வெள்ளம் பெருக்கெடுத்து நகருக்குள் உட்செல்வதால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கிவந்தனர் என்றும் அவர் கூறினார். இதனைக் கருத்தில் கொண்டு மாவட்ட அரச அதிபரின் உத்தரவுக்கமைய கோட்டை முனைப் பால நுழை வாயிலுக்கான வெள்ளத் தடுப்பு அணைக் கட்டு நிர்மாணிக்கப்பட்டுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-31)

### கிழக்கு மாகாணசபைத் தேர்தலில்

## புதிய இடதுசாரி முன்னணி தனித்துப் போட்டி

மட்டக்களப்பு, ஜூலை 13

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையிலான புதிய இடதுசாரி முன்னணி தனித்துப் போட்டியிடவுள்ளதாக கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கணபதிப்பிள்ளை பரணீதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா ஆகிய தொகுதிகளில் வேட்பாளர்கள் நிறுத்தப்படவுள்ளதாக அவர் கூறினார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்தே தேர்தல் களத்தில் இறங்கத் திட்டமிட்டிருந்த போதிலும் ஆசன ஒதுக்கீடின்மையால் தனித்துப் போட்டியிட முன்வந்ததாக அவர் தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார மற்றும் சந்திரசிறி கஜதீர ஆகியோரும் வருகை தரவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கணினி திருட்டு

எருவில், ஜூலை 13

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு பகுதியில் உள்ள பாடசாலையொன்றின் கணினிக் கூடம் உடைக்கப்பட்டு அங்கிருந்த நான்கு கணினிகள் திருடப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

பெரியகல்லாறு மத்திய கல்லூரியின் கணினி அறைகளே இவ்வாறு உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் [illegible] களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி. [illegible] ஆகியோர் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்முனை வடக்கில் அதிக வாக்காளர்கள்

### மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் கூறுகிறார்

**இந்தப் பிரிவில் 56,726 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.**

மட்டக்களப்பு, ஜூலை 13

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள வாக்காளர்களில் அதிகமானோர் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலேயே உள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இந்தப் பிரிவில் 56,726 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று அவர் கூறினார். இது தவிர செங்கலடி செயலகப் பிரிவில் 43,437 வாக்காளர்களும், களுவாஞ்சிக்குடியில் 40133 வாக்காளர்களும், வெல்லாவெளியில் 28,092 வாக்காளர்களும், காத்தான்குடியில் 26,775 வாக்காளர்களும், ஏறாவூர் நகரில் 22,124 வாக்காளர்களும், ஓட்டமாவடியில் 15,301 வாக்காளர்களும், வாழைச்சேனை மத்தியில் 16,190 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வாழைச்சேனையில் 14,900 வாக்காளர்களும், கொக்கட்டிச்சோலையில் 15,827 வாக்காளர்களும், கிரானில் 16,245 வாக்காளர்களும், வாகரையில் 13,344 வாக்காளர்களும், வவுணதீவில் 17,393 வாக்காளர்களும், ஆரையம்பதியில் 20,632 வாக்காளர்களும் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** ஒருசில விவகாரங்களில் சாதுரியமாக தப்பித்துக்கொண்டபோதும் மனதில் பயம் கலந்திருக்கும். சில நபர்களின் மறைமுக சூழ்ச்சிகளைச் சமாளிப்பீர்கள். பெண்களால் நன்மைகள் பெறுவீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் அதிகம் யோசிக்க வைக்கும்.

**இடபம்:** நீங்கள் நல்லபடியாக நடக்கும் என்று நினைத்த காரியங்கள் அதற்கு நேர்மாறாக நடந்து, உங்களை சஞ்சலத்துக்கு ஆளாக்கலாம். செலவுகள் கட்டுக்கடங்காமல் இருக்கும். பண நெருக்கடி ஏற்படும்.

**மிதுனம்:** தொழிலில் சற்று மந்தமான நிலைமை காணப்படும். சில விவகாரங்களில் சம்பந்தமில்லாத தலையீடுகளால் மற்றவர்களின் வெறுப்புக்கு ஆளாகுவீர்கள். அலுவலகப் பணிகளில் பளு அதிகரிக்கும்.

**கடகம்:** நண்பர்களால் நலம் பல பெறுவீர்கள். கூடவே சில நபர்களை தக்க வைத்துக்கொள்ள முடியுமா என்ற சந்தேகம் நிலவும். பொருள் சேர்வதற்கும் வாய்ப்புகள் உண்டு. தொழிலில் அபிவிருத்தி காணப்படும். உடல் ஆரோக்கியம் சற்று யோசிக்க வைக்கும்.

**சிங்கம்:** எந்தக் காரியத்திலும் விழிப்புணர்வுடன் செயற்படுவது அவசியம். எதிர்பார்த்த பணவரவு வரும். இல்லறத் துணையின் பொறுப்பற்ற வார்த்தைகள் அதிகம் யோசிக்க வைக்கும். பெரிதுபடுத்திக்கொள்ளாதீர்கள்.

**கன்னி:** எந்த ஒரு காரியத்திலும் திறம்படச் செயற்பட்டு பாராட்டுகளைப் பெறுவீர்கள். புதிய அறிமுகங்கள் ஏற்படும். பெற்றோரின் கருத்துக்கள் மனதில் அதிக சஞ்சலத்தை ஏற்படுத்தும். தொழில் ரீதியான தொடர்புகளை விரிவுபடுத்திக்கொள்வீர்கள்.

### நாளை

ஆனி 30 சனிக்கிழமை 14.07.2012
திதி: ஏகாதசி பி.இ. 04.59 வரை
நட்சத்திரம்: கார்த்திகை பி.இ. 03.51 வரை
சுபநேரம்: 3.00- 4.30 வரை
ராகு காலம்: 9.00- 10.30 வரை

**துலாம்:** மிகுந்த யோசனைக்குப்பின் ஒவ்வொரு காரியங்களிலும் ஈடுபடுவீர்கள். நண்பர் ஒருவரின் அவர் சார்ந்த பணிக்காக அலைச்சல் ஏற்படலாம். விருந்துகளில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** எதிலும் மந்தமான போக்கு காணப்படும். தொழில் அபிவிருத்தி முயற்சிகள் இழுபறிக்குப் பின்னால் வரும். உறவுகளால் நன்மை உண்டாகும். எதிர்பார்த்த கடனுதவிகள் கிடைக்கும்.

**தனுசு:** சற்று பதற்றத்துடன் காணப்பட்டபோதும், மாலைக்கு மேல் மனநிறைவான சூழ்நிலை காணப்படும். நண்பர் ஒருவரின் ஆலோசனை மிகுந்த பயன் தரும். புதிய முயற்சிகள் பயன்தரும்.

**மகரம்:** முக்கியஸ்தர்கள் சிலரைச் சந்திப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். இருப்பினும் கடன் கவலை ஏற்படும். சில காரியங்களில் ஏன் தான் ஈடுபட்டோமோ என்ற சிந்தனை அடிக்கடி நிலவும்.

**கும்பம்:** மன மகிழ்ச்சியுடன் ஆரம்பிக்கும். மாற்று யோசனைகளால் ஆதாயம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக முதலீடுகளை அதிகமாக்க முயற்சிகளை மேற்கொள்வீர்கள். குழந்தைகளின் வளர்ச்சிக்காக தீவிர கவனம் செலுத்துவீர்கள்.

**மீனம்:** உங்களின் வாழ்க்கை உயர்வதற்கு காரணமாக இருந்த ஒருவரைச் சந்திக்கக்கூடும். செலவுகளை கட்டுப்படுத்த சில நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். குடும்பத்தில் தேவையற்ற கோபத்தை வெளிப்படுத்துவீர்கள். இயலுமானவரை அதனைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 3 | | | | 4 | | |
| | 9 | | 4 | | | 1 | 8 | |
| | 4 | 8 | 2 | | | | | 3 |
| | | | 6 | 8 | | | 3 | 2 |
| | | 6 | 7 | | 2 | 5 | | |
| 9 | 2 | | | 1 | 4 | | | |
| 8 | | | | | 7 | 2 | 5 | |
| | 5 | 9 | | | | | 4 | |
| | | 7 | | | | 8 | 6 | 1 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 1 | 2 | 4 | 9 | 8 | 7 | 3 |
| 9 | 2 | 3 | 8 | 5 | 7 | 4 | 6 | 1 |
| 7 | 4 | 8 | 1 | 3 | 6 | 9 | 2 | 5 |
| 8 | 5 | 7 | 6 | 9 | 3 | 1 | 4 | 2 |
| 6 | 1 | 2 | 7 | 8 | 4 | 3 | 5 | 9 |
| 3 | 9 | 4 | 5 | 1 | 2 | 6 | 8 | 7 |
| 2 | 7 | 9 | 4 | 6 | 1 | 5 | 3 | 8 |
| 4 | 3 | 5 | 9 | 2 | 8 | 7 | 1 | 6 |
| 1 | 8 | 6 | 3 | 7 | 5 | 2 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1−9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1−9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1−9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
## சிதம்பரப்பிள்ளை சந்திரலிங்கம்
(முன்னாள் மாவட்ட நீதிமன்றப் பதிவாளர்,
அகில இலங்கை சமாதான நீதிவான், பிரபல சமூக சேவையாளர்)

தோற்றம் 10★07★1944 — மறைவு 13★06★2012


அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி, தந்தி, கடிதம் மூலமும் தொடர்புகொண்டு ஆறுதல் கூறியோருக்கும், மரணச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும், வேறு பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அமரரின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (13.07.2012) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்த மண்டபத்தில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியக் கிரியையும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், எமது இல்லத்தில் நாளை (14.07.2012) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறவிருப்பதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

**ச.செல்வராணி**
**(மனைவி)**

(20246) (45.6.7)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கொழும்பு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் நிலவுவதாகக் கூறப்படும் ஊழல்களுக்கு எதிராக கூட்டுத்தாபனத்தின் முன்பாக அரச ஆதரவு தொழிற்சங்கங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

# சுகாதாரப் பரிசோதகருக்கு இராணுவப் பாதுகாப்பு

### சுகாதார அமைச்சர் தகவல்

தேசிய நுளம்பு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றும் பரிசோதகர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு விசேட பாதுகாப்பு செயற்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நுளம்பு ஒழிப்புத் தொடர்பான களப்பணி மற்றும் சோதனைகளில் ஈடுபடும் குழுவில் ஆயுத மேந்திய பொலிஸ் அல்லது படையினர் ஒருவர் இடம்பெறுவார் என்று அவர் கூறினார்.

ஆரம்பத்தில் இந்தத் திட்டத்தில் படையினர் கலந்து கொண்ட போதிலும் அவர்கள் ஆயுதம் ஏந்தியிருக்கவில்லை. எனினும், அண்மையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவத்தை கருத்தில்கொண்டு ஆயுதமேந்திய படையினரை இந்தக் குழுக்களில் இணைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# அங்கொட வைத்தியசாலையின் வைத்தியர்கள் விடுமுறையில்

கொழும்பு, ஜூலை 13

அங்கொட வைத்தியசாலையின் வைத்தியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வைத்தியர்கள் சுகயீன விடுமுறை அறிவித்து நேற்று வியாழக்கிழமை தமது கடமைகளில் இருந்து விலகியிருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அங்கொட வைத்தியசாலை நிர்வாக அதிகாரி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின்படி அவருக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தை செயற்படுத்தாது உள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (ச)

# என்னை எதிர்த்த உறுப்பினருக்கு வேட்புமனு வழங்கப்படமாட்டாது

### மேர்வின் அதிரடி

கொழும்பு, ஜூலை 13

தனக்கு எதிராக செயற்பட்ட களனி பிரதேச சபை உறுப்பினர்களுக்கு இனி தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்று பொது மக்கள் தொடர்பு மற்றும் பொது சன விவகார அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

களனியில் நேற்று வியாழக்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொகுதி அமைப்பாளருக்கு எதிராகச் செயற்படும் உறுப்பினர்களுக்கு வேட்புமனு வழங்கப்பட மாட்டாது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து அரசுக்கு எதிராகச் செயற்படும் நபர்களுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் வெளியேறவும் எந்த நேரத்திலும் அரசுடன் இணைந்து கொள்ளவும் கதவு திறந்துள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஆனால் எனது கொள்கையின்படி எனக்கு எதிராக செயற்படும் உறுப்பினர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் அரசியல் தலைவர்களுடனும் இணைந்து செயற்பட முடியும்.

என்னால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு களனி பிரதேச சபையால் தடங்கல் ஏற்படுமானால் சொந்த நிதியைக் கொண்டாவது அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்-என்றார். (ச)



# மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி

### ஆசிரியர் சங்கங்கள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 13

பாடசாலை மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படுவதற்கு ஆசிரியர் சங்கங்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. ஆயிரம் மாதிரிப் பாடசாலைகளின் உயர்தர மாணவர்களுக்கே இவ்வாறு இராணுவப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு இராணுவத்தினரைக் கொண்டு பயிற்சி அளிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதன் முதல் கட்டமாக ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி உயர் தர மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ரன்டம்பே இராணுவ முகாமில் இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பில் போதியளவு சட்ட விதிகள் காணப்படும் நிலையில், இராணுவப் பயிற்சி அவசியமற்றது. பாடசாலை மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கும் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.3000 மில்லியன்

கொழும்பு, ஜூலை 13

நாட்டின் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு 3000 மில்லியன் ரூபாவை அரசு வழங்கத் தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், குளங்களைப் புனரமைக்கவும் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, வரட்சியால் பொது மக்கள் மாத்திரமன்றி வன விலங்குகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக வன விலங்கு அமைச்சர் எம். எம். சந்திரசேன தெரிவித்தார்.(ச)

# அபராதத்தை விதிப்பதனால் டெங்கை ஒழிக்க முடியாது

### மேலதிக நீதிவான் கருத்து

கொழும்பு,ஜூலை13

நுளம்பு வளர்வதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்தமைக்காக சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்குப் பதிலாக, உரிய பயனைப் பெறுவதற்கு அப்பகுதிகளில் புகை அடிக்க வேண்டும் என்று கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன டி அல்விஸ் தெரிவித்தார்.

தமது குடியிருப்புப் பகுதிகளை டெங்கு நுளம்பு பரவும் விதமாக வைத்திருந்ததாக குற்றஞ் சுமத்தப்பட்ட 5 நபர்களை முல்லேரியா பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

''சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி அபராதம் விதிப்பதால் நீதிமன்றத்துக்குப் பணம் கிடைக்கும். ஆனால் டெங்கை ஒழிப்பதற்கு இது மாத்திரம் போதாது'' என்று அவர் குறிப்பிட்டார்.

குற்றஞ் சுமத்தப்பட்ட ஐவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அவர்களுக்கு தலா 500 ரூபா வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ச)

## வாகன விபத்தில் இருவர் சாவு

திவுலபிட்டியவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் இறந்ததுடன், மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு குருநாகல்-கொழும்பு பிரதான வீதியில் லொறியொன்றுடன் கன்ரர் வாகனம் மோதியே இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த நபர் திவுலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார். (ச)

# எமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வுகாண வேண்டும்

### வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை13

எமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு காண வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்

சீனா - இலங்கை நாடுகள் இடையேயான இரு தரப்பு ஒத்துழைப்புக்கு 55 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரு நாடுகளுக்கும் இடையில் புனிதமான ஓர் உறவு காணப்படுகின்றது. எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டம் எங்கேயும் இல்லை. மனித உரிமை விவகாரங்களில் ஆசிரியர்களோ, மாணவர்களோ இல்லை. மலையின் உச்சத்தை அடைவதற்கு பல்வேறு வழிகள் காணப்படுகின்றன.

எமது பிரச்சினைகளுக்கு நடைமுறைச் சாத்தியப்பாடுடைய தீர்வுத் திட்டங்களை முன்வைப்போம். நாம் எவரையும் குற்றம் சுமத்தப் போவதில்லை -என்றார். (ச)

## டெங்கை ஒழிக்க...



பாடசாலை மாணவர்கள் ஊடாக டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடன் கல்வி அமைச்சு ஏற்பாடு செய்த பேரணி நேற்றுமுன்தினம் புதன்கிழமை மொரட்டுவையில் நடைபெற்றது.

# ஆட்சியை மாற்றும் சூழல் உருவாகியுள்ளது

### ஐக்கிய சமத்துவ கட்சியின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

அரசை மாற்றி அமைக்க வேண்டிய காலம் உருவாகி இருப்பதாக ஐக்கிய சமத்துவக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய தெரிவித்தார்.

இதற்காக ஜனநாயகத்தைப் பின்பற்றும் சகலரும் ஒன்றிணைய வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

''நாட்டில் ஜனநாயக நிலைமை மோசமாக உள்ளது. தொடர்ச்சியான ஊழல், மோசடிகள் மற்றும் மக்க [illegible] விடயங்கள் காணப் படுகின்றன. எனவே நாட்டின் ஆட்சியை மாற்றி, புதிய அரசை தோற்றுவிக்க வேண்டிய காலம் தற்போது உருவாகி இருக்கிறது'' -என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுத்தமான சுவையான சுகாதாரமான புறியாணி வகைகள்
யாழ்நகரில்
Virounthu @ Yarl Pardy
49,51 Amman Road, Nallur, Jaffna
Tel : 021 222 6868, 0759 232 967, 0759 360 370
(சி/1408)(6-7-8)



**சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் நடத்தும் A/L 2012 உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு**

- 13.07.2012, 14.07.2012 } தமிழ் 9.30 - 2.30
  திரு. ஜீவானந்தன் (பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி)
- 14.07.2012 தமிழ் 9.30 - 2.30
  திரு. ஜெயம் (யாழ். அம்பன் அ.த.ம.பாடசாலை, குடத்தனை)
- 15.07.2012 கிறிஸ்தவநாகரிகம் 9.30 - 2.30
  திரு. வசந்தன் (புனித தோமஸ் றோ.த.க.பாடசாலை, பருத்தித்துறை)
- 16.07.2012 அளவையியல் 9.30 - 2.30
  திரு.ஜெயசுரேஷ் (இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்)
- 17.07.2012 இந்துநாகரிகம் 9.30 - 2.30
  திரு. நித்தியதசீதரன் (இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்)
- 16.07.2012, 17.07.2012, 18.07.2012 } பொருளியல் 9.30 - 2.30
  திரு. வரதராஜன் (காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம்)
- 19.07.2012 நாடகமும் அரங்கியலும் 9.30 - 2.30
  திரு. கணேஸ் (காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம்)
- 22.07.2012 9.30 - 2.30 அரசியல் விஞ்ஞானம்
  திரு. கோகுலன் (அகவொளி மண்டபம், யாழ்ப்பாணம்)

பங்கு பெறும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச கையேடுகளும் வழங்கப்படும். C.P.R

(20353)(6-7-8)


## வீதி புனரமைப்பு

நீண்ட காலமாகக் கவனிப்பாரற்று மோசமான நிலையில் காணப்பட்ட அளவெட்டிப் பிரதேசத்தின் வெள்ளியம்பதி வீதி, காளி கோயிலடி வீதி என்பன புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதால் பொது மக்கள் எதிர் கொண்ட அசௌகரியங்களுக்கு தீர்வு கிடைத்துள்ளது.

அளவெட்டிப் பிரதேசத்தில் நீண்ட காலமாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட குறித்த இரு வீதிகளால் பயணம் செய்த பொது மக்கள் விபத்துக்குள்ளானதுடன் வாகனங்களில் செல்ல முடியாமல் மாற்றுவழிகளை பயன்படுத்தி வந்தனர்.

இதனால் வீதியின் அருகில் உள்ள ஒழுங்கைப் பாதைக்குச் செல்வதானாலும் சுற்றுப் பாதைகளையே பயன்படுத்தினர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள், தொழிலுக்குச் செல்வோர் பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்து வந்தனர்.

எனினும் தற்போது இந்த வீதிக்கு விடிவு காலம் கிடைத்ததால் வீதிகள் திருத்தப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

(ம-14,36)


**T V மலிவு விற்பனை**

Sony (Japan) Flat WagaT Vகள் 14"-10000/=, 21"-13000/=, 25"-14000/=, 29"-15000/=, 12"Box 12000/=, கசெற் றேடியோ - 2000/=, DVD- 3000/=,
தொடர்புகளுக்கு: 077 044 0570 (அப்பளம்)
சோனி றேட்றசென்ரர் (கொமர்சல் வங்கி முன்பாக)
56, K.K.S. வீதி, சுன்னாகம்.
(20319)(45-6-7)

**தவறிவிட்டது**

சுந்தரலிங்கம் பிரதீபன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (832901881 v) சாரதி அனுமதிப்பத்திரம். என்பனவற்றுடன் பேஸ் உடும்பிராய்க்கும் மல்லாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 222 0611
(20354) (45.6.7)

**காணி, வீடு தேவை**

பலாலி பிரதான வீதி, பிறவுண் வீதி, கோயில் வீதி, கே.கே.எஸ். வீதி, கச்சேரியடி ஆகிய இடங்களில் வீடு மற்றும் 2,3 பரப்பு வெற்றுக்காணி உடன் தேவை
தொடர்பு: 077 6537 129
(203551) (45.6.7)


## பிரிட்டன் தூதுவர் நெடுந்தீவு சென்றார்

நெடுந்தீவு, ஜூலை 12

இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஜோன் ராங்கின் செவ்வாய்க்கிழமை நெடுந்தீவுக்கு வருகை தந்தார். நெடுந்தீவு கடற்படை கட்டளை அதிகாரி ஈ.என். எக்கநாயக்க நெடுந்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் தூதுவரை நெடுந்தீவு துறைமுகத்தில் வரவேற்றனர்.

தூதுவர் ஜோன் ராங்கின் நெடுந்தீவு மக்களைச் சந்தித்து அங்குள்ள குறைபாடுகளைக் கேட்டறிந்ததுடன் கடற்றொழில் விவசாயம் சுற்றுலாத் துறைகள் குறித்தும் தெரிந்து கொண்டார். (ம-7)

## கைவிடப்பட்ட வாகனங்கள் மீளப் பெறுதல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

வட மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் கிளிநொச்சி மாவட்டச்செயலாளரினால் பராமரித்து வரப்படுகின்ற போரின் போது கைவிடப்பட்டு எடுத்து வரப்பட்ட ஒரு தொகுதி வாகனங்கள் கிளி நகரத்தின் திருநகர் பகுதியில் அமைந்துள்ள வாகனப்பேணலகத்தில் தொடர்ந்தும் உரிமை கோரப்படாது இருந்து வருகின்றது. இது தொடர்பில் மாவட்டச் செயலாளராகிய என்னால் ஏற்கனவே பத்திரிகைகள், வானொலிகள் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகள், ஏனைய மாவட்டச் செயலகங்களின் ஊடாக உரிய முறைப்படி விளம்பரம் செய்யப்பட்டதுடன் ஒரு தொகுதி வாகனங்கள் உரிமையாளர்களிடம் கையளிக் கப்பட்டமையும் யாவரும் அறிந்ததே.

இந் நிலையில் இப் பேணலகத்தினை தொடர்ந்தும் பராமரிப்பதில் பல்வேறு இடர்பாடுகளையும் டெங்கு நோய் அபாயத்தினையும் எதிர் கொள்வதினால் இறுதிச் சந்தர்ப்பமாக எதிர்வரும் 30.07.2012 ஆம் திகதிக்கு முன்பதாக உரித்துடையவர்கள் அவற்றினைப் பார்வையிட்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றேன்.

இச் சந்தர்ப்பத்தினையும் வழங்கி 31.07.2012 ஆம் திகதிக்குள் உரிமை கோரப்படாத அனைத்து வாகனங்களையும் உரிய சட்ட விதிகளின் கீழ் அரசாங்க நடைமுறைக்கமைவாக ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் சகலருக்கும் இத்தால் அறிவித்துக்கொள் கின்றேன்.

திருமதி றா. கேதீஸ்வரன்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்
(சி/1444)(6-7-8)


**வீடு வாடகைக்கு உண்டு**

சிறிய குடும்பத்திற்கு பரமேஸ்வரா சந்திக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 1965 666
(203521) (45.6.7)

**தேவை**

ஆய்வு கூடப் பரிசோதனைக்காக "இரத்தம்" எடுப்பதில் அனுபவமுடைய ஒருவர் தேவை.
தொடர்பு: 077 3715 670, 021 5680 033
(19816) (45.6.9)

**கணினி தட்டெழுத்தாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் அலுவலகம் உடைய சட்டத்தரணி ஒருவருக்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் தேர்ச்சியும் முன் அனுபவமும் உடைய பெண் கணினி தட்டெழுத்தாளர் (ADOBE PAGE MAKER -பக்கவடிவமைப்பு தெரிந்தவர் விரும்பத்தக்கது) ஒருவர் தேவை.
தகுதியும் ஆர்வமும் உள்ளோர்
தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல.
077 3604 750
(203324) (45.6.7)

**தவறிவிட்டது**

சாயுடை, மாவிட்டபுரம், தெல்லிப்பழை என்னும் முகவரியுடைய எல்லுப்போலை இரத்தினசிங்கம் என்பவரின் தேசிய அடையாள அட்டை (602350819 V) மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் சம்பந்தமான சகல ஆவணங்களும் அடங்கிய சிறிய பை மருதனார்மடத்துக்கும் தாவடிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 8076 063
(20320) (45.6.7)


**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா , குடும்பப் பிரச்சினையா ? வெளிநாடு செல்லத்தடையா ?, மன உளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20063) (6,7,8)


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை செல்வரத்தினம்

(ஓய்வு பெற்ற அதிபர்)



தோப்புக்காடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வட்டுகிழக்கு, சித்தங்கேணியை நிரந்தர முகவரியாகவும் சிவன் கோயில் வீதி, தோணிக்கல், வவுனியாவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செல்வரத்தினம் (ஓய்வு பெற்ற அதிபர்) 11.07.2012 அன்று காலமமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், தெட்சணாமூர்த்தி - றோசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரகாந்தாவின் அன்புக் கணவரும், சறோஜா (ஜேர்மனி),மனோகரன்(கனடா), பத்மலோஜினி(கனடா), பிறேமலதா (ஜேர் மனி), காலஞ்சென்ற தேன்மொழி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிதா சன், கலா நாயகி,மோகனராஜ், கயிலைநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனா ரும், சகானா, துளசி, நிருசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (14.07.2012) மு.ப. 11 மணியளவில் தற்காலிக வசிப்பிடத்தில் (தோணிக்கல்) நடைபெற்று தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
தோணிக்கல், வவுனியா (16193)(5-6-7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 1945★05★07
உதிர்வு 2012★06★12

அமரர்
## நீலமேகம் காந்தீபன்
[சீலன்]

கடந்த 2012.06.12 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் நீலமேகம் - காந்தீபன் (சீலன்) அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு பலவழிகளிலும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்றதோடு தோள்கொடுத்த போது வைத்தியசாலையிலும், இல்லத்திலும், நேரில் பார்வையிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு இன்று (2012.07.13) வெள்ளிக் கிழமை 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிராட் டிதனம்,
நட்டாங்கண்டல், மல்லாவி (20323)(6-7-8) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள்.....?

கடந்த சனிக்கிழமை காலை 7 மணி இருக்கும் யாழ். நகர பஸ் நிலையம் களைகட்டத் தொடங்கியது. ஆளாளுக்கு தமது வேலை நிமித்தம் அரக்கப்பறக்க தமது இடங்களுக்குச் செல்வதற்கான பஸ்களில் ஏறிக் கொண்டு இருக்கின்றனர். இவர்களுக்குள் நானும் ஒருவனாக வவுனியா செல்லும் ஒரு பஸ்ஸில் ஏறி அமர்கிறேன். பஸ்ஸில் ஒலித்துக் கொண்டிருக்கும் சினிமாப் பாடல் காதை அடைத்தது. இதற்குள் பஸ்ஸில் ஏறி அமரும் எல்லோரும் ஒவ்வொருவருடன் கதைத்துக் கொண்டு இருக்கிறார்கள். பஸ்ஸின் யன்னல் பக்கமாக அமர்ந்த நான் சுற்றும் முற்றும் பார்க்கிறேன்......

சிறிது நேரம் கழித்து பஸ் புறப்படுவதற்கு ஒரு சில நிமிடங்களே இருக்கும் தறுவாயில் "அம்மா ....... அம்மா .........." என்ற குரல் எனது காதினை கிழித்து, எனது இதயத்தை வருடிச் சென்றது. யாரென, பஸ் ஏறும் படிகளைப் பார்க்கிறேன் , ஒரு வயது போன அம்மா, அந்த பஸ்ஸில் ஏற முடியாமல் தவண்டு ஒருவாறு பஸ்ஸினுள் வந்துவிட்டா. அழுக்குச் சேலையுடன், கலைந்த முடியுடன், கையில் ஒரு சின்னப் பையுடன் அந்த அம்மாவின் நிலமை கவலைக்கிடமாக இருந்தது

''எனக்குப் பசிக்கிறது சாப்பாட்டுக்கு காசு தாங்கோ'' என்று ஒவ்வொரு சீற்றில் இருக்கும் பயணிகளிடம் கையை நீட்டிக் காசு கேட்கிறா. எவரும் அந்த அம்மாவை கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. கத்திக் கத்தியே களைப்படைந்து உடல் சோர்ந்து போயிருக்கும் அந்தத் தாயின் முகத்தில் வேதனையின் வடுக்கள் இழையோடி இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது . அந்த அம்மாவுக்கு உறவுகள் என்று சொல்லிக் கொள்ள ஒருவருமே இல்லாத நிலையில் நாளாந்தம் வயிற்றுப் பசிக்கு பிச்சை எடுத்து வருகிறாள்.

தள்ளாடித் தள்ளாடி எனதருகே வந்த அம்மா, தனது வயிற்றினை தடவியவாறு "தம்பி பசி வயிற்றைக் கிள்ளுது; நீயாவது சாப்பிடுறதுக்கு காசு தருவியா'' என்று கண் கலங்கி நிற்க முடியாமல் எனது உடம்பிலே சாய்கிறாள். ......

என்னிடம் மாற்றின காசு இல்லை, தாளாக இருப்பதால் பக்கத்து சீற்றில் இருந்த ஒருவரை 20 ரூபாய் தரும் படி கேட்கிறேன். அவரும் என்னைப் பார்த்து விட்டு தன்னிடமும் மாற்றின காசு இல்லை என்று தெரிவித்து விட்டார். முன் சீற்றில் இருந்தவரை கேட்கிறேன் அவரும் இல்லை என்று சொல்லி விட்டார். எப்படியாவது இந்த அம்மாவுக்கு காசு கொடுக்க வேண்டும் என்று நினைத்து பின் சீற்றில் இருப்பவரைக் கேட்கிறேன். அவர் ஒன்றுமே பேசாமல் தனது சேட் பொக்கற்றில் இருந்த 20 ரூபாவினை எடுத்துத் தந்தார். உடனே அந்த அம்மாவிடம் 20 ரூபாவினை கொடுத்து விட்டேன். அந்த அம்மாவோ பஸ்ஸினை விட்டு இறங்கிச் சென்று விட்டார்.

பஸ் நகர ஆரம்பித்தது, யன்னல் வழியே அந்த அம்மா போகும் வழியினைப் பார்க்கிறேன். வழியினைத் தொடர்ந்து நடக்க முடியாமல் ஒரு மரத்திற்கு கீழ் இருந்து விட்டாள். நான் கொடுத்த 20 ரூபாய்க்கு என்ன வாங்க முடியும், அந்த பஸ்ஸில் இருந்தவர்கள் அனைவரும் கொடுத்திருந்தால் அந்த அம்மா தன் வயிறு பசியைப் போக்கி இருப்பாள். என்ற ஆதங்கம் எனது மனத்தின் உள்ளே துருவிக் கொண்டு இருந்தது. அந்த அம்மா சாப்பாட்டுக்குத் தானே காசு கேட்டவா, வேறொன்றுக்கும் இல் லையே, பஸ்ஸில் இருந்தவர்கள் ஆளாளுக்கு 20 ரூபாய் கொடுத்திருந்தாலே அந்த ஜீவன் ஒரு நாள் தன் பசியை ஆற்றியிருக்கும்.

பஸ்ஸில் சினிமா பாடல்களில் மூழ்கிப் போயிருக்கும் பயணிகள் இதனை நினைப்பார்களா? என்று எனக்குள்ளே நினைத்துப் கவலைப்பட்டுக்கொண்டேன். பஸ் பயணிக்கிறது..... வீதி அகலிப்பு பணிகளுக்கிடையே சிறிது நேரம் பஸ் நிறுத்தப்பட்டு மீண்டும் தொடர்ந்து பயணிக்கிறது........

கிளிநொச்சி தாண்டி ஓர் உணவுக் கடையின் ஓரமாக பஸ் நிறுத்தப்படுகிறது. பஸ்ஸில் இருந்து எல்லோரும் இறங்கி உணவுக்கடையினுள் செல்கிறார்கள். ஆளாளுக்குத் தேவையான உணவுப் பண்டங்களை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கின்றனர்.... நானும் அந்த உணவகத்தினுள் சென்று எனக்குத் தேவையான உணவுப் பண்டங்களை வாங்கி சாப்பிட்டுக் கொண்டு பஸ்ஸினுள் 20 ரூபாய் தந்த அந்த இளைஞரை தேடிப் பார்க்கிறேன். அங்கே அந்த இளைஞரும் உணவுப் பண்டங்களை வாங்கி சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்.....

அந்த இளைஞன் பக்கம் செல்கிறேன், 20 ரூபாவை அவனிடம் நீட்டுகின்றேன். 20 ரூபாவை வாங்க மறுத்த இளைஞன், ஒரு புன்னகையுடன் என்னை முறித்தான். நான் விட்ட பாடில்லை, மீண்டும் 20 ரூபாவை அவனிடம் நீட்டுகிறேன், வாங்க மறுத்து விட்டு சிங்களத்தில் ஏதோ சொன்னான். அப்பொழுது தான் எனக்குப் புரிந்தது அவன் ஒரு சிங்களவன் என்று.

அவன் சொன்னது என்னவென்று ஒன்றுமே புரியாமல், பக்கத்தில் நின்ற ஒரு முதியவரைக் கேட்டேன் அந்த முதியவரோ, "பஸ்ஸில் எதற்காக 20 ரூபாய் வாங்குகிறீர்கள் என்று தெரியாமல் பணத்தினைக் கொடுத்தேன். பின்பு தான் அறிந்து கொண்டேன். பணத்தினை பிச்சைக்காரிக்கு கொடுப்பதற்காக வாங்கினீர்கள் என்பதை ஆகவே அந்தப் பணம் எனக்குத் தேவையில்லை, நன்றி '' என்று அந்த இளைஞன் சொன்னான் என்று சொன்னார்.

அப்பொழுதுதான் அறிந்து கொண்டேன், மொழி தெரியாததால் அந்த சிங்கள இளைஞன் பேசாமல் பஸ்ஸில் இருந்துள்ளான், மொழி தெரிந்திருந்தால் அவனே அந்தப் பிச்சைக்காரிக்கு பணம் கொடுத்திருப்பான். அந்த பஸ்ஸில் தமிழர்கள்தான் கூடுதலாக பயணித்திருந்தனர். ஆனால், கொடுக்க வேண்டும் என்ற மனம் அந்த சிங்கள இளைஞருக்கு வந்தது பாராட்டத்தக்கது. இதே போல் நாளாந்தம் பஸ்ஸில் பயணம் செய்யும் போது,

## கோப்பாய் சண்முகம்

### கதையோடு செய்தி

பிச்சைக்காரர்கள் பிச்சை கேட்டு பஸ்ஸினுள் ஏறி இறங்குவார்கள். அப்படி பஸ்ஸினுள் ஏறி இறங்கும் பிச்சைக்காரர்களில் உடலால் முடியாத வயது போனவர்களுக்கு உதவுவதற்கு பின் நிற்காதீர்கள்.

பெரிய தொகையை உங்களிடம் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அன்றைய நாள் உணவுக்கான சிறு தொகையைத் தான் உங்களிடம் எதிர்பார்க்கின்றார்கள். கோடிக்கு ஒரு லட்சம் குறையுதே என்று உழைப்பவர்களும், லட்சத்திற்கு ஒரு சில ஆயிரம் குறைகிறதே என்று உழைப்பவர்களும் ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள். 20ரூபாய் இழப்பது உங்கள் சொத்துக்களில் பெரிய இழப்பாக ஒரு போதுமே இருக்கப் போவதில்லை.

போரின் காரணமாக சொத்துக்களை இழந்து, அன்றாட உணவுக்கே கஷ்டப்படும் தமிழ் மக்களில் உறவுகள் இன்றி கைவிடப்பட்டவர்களே இந்த நிலைக்கு ஆளாகியுள்ளனர். அவர்கள் ஒரு காலம் எங்களை விட வசதி வாய்ப்பு வாய்ந்தவர்களாக இருந்திருப்பார்கள். இப்படிப் பட்டவர்களை சமூகத்தில் ஒதுக்காமல், அவர்களின் உணர்வுகளில் பங்கெடுங்கள் அப்பொழுதுதான் தமிழர் பகுதிகளில் ஒரு பிச்சைக்காரர்கூட இல்லாத சூழலினை கொண்டுவர முடியும்.

# ஓராண்டு நினைவாக அம்மாவுக்குப் பிள்ளைகள்

## திருமதி நாகேந்திரம் சத்தியபாமா

தோற்றம்:- 21.09.1937

மறைவு:- 25.06.2011

திதி:- அபரபக்க தசமி (13.07.2012)



பௌர்ணமி நிலவு தேயும் - அம்மா
நின் நினைவுகள் தேயாது
வருடம் ஒன்று ஆனாலும் - அம்மா
நின் பிரிவின் துயரம் தாளாது
வடிக்க இயலா வார்த்தைகள் - அம்மா
என்றும் ஆற்றமுடியா வலிகளிவை.

ஆயிரம் கனவுகள் சுமந்தோம் அன்று
ஆறாத்துயரம் சுமக்கின்றோம் இன்று
தடைக்கற்களையும் படிக்கற்களாக மாற்றி
எம்மைத் தரணியில் தலைநிமிர வைத்த தாயே
நெஞ்சறையில் உன் நினைவலைகள் மட்டும் தந்து
உன் நேச உறவுகளை நீக்கிச் சென்றதேனோ....

வாழ்வின் ஒவ்வொரு பகுதியும்
மாற்றங்களோடு கடக்கின்றன
சில நேரங்களில் அவை
ஏமாற்றங்களோடு இடையில் முடிகின்றன
வாழ்வினை முடித்த பின்பும்
அணையாத தீபமாய் எரியும் ஜோதியே
மண்ணும் விண்ணும் மாறிடினும்
எம் நெஞ்சினில் மாறாத வரலாறு நீதானம்மா


- கனத்த இதயத்துடன் -

13 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு கிழக்கு,
நெடுந்தீவு.

- குடும்பத்தினர்.

(சி/1458)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வருகிறது அப்பிளின் புதிய 'ஐ பாட்'

அப்பிளின் அனைத்து ஐ பாட்களும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில், தற்போது விலை குறைந்த சிறிய ஐபாட் ஒன்றை வெளியிட அப்பிள் திட்ட மிட்டுள்ளது.

இதற்கு 'ஐ பாட் மினி' எனப் பெயரிடப் படலாம் எனவும், இந்தாண்டின் இறுதியில் இந்த ஐபாட் வெளியிடப்படலாம் என்றும் தகவல்கள் வெளியாகி உள் ளன.



இதன் திரை 7 அல்லது 8 அங்குலமாக இருக்கும் என் றும், 9.7 அங்குல ரெட்டினா திரையைக் கொண்டிருக்காது என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

ரெட்டினாக்குப் பதிலாக சார்ப் நிறுவனத்தின் IGZO (indium gallium zinc oxide) display உபயோகப்படுத்தப் படலாம்.

ஐ பாட் மினியின் மற்றைய தொழில்நுட்ப அம்சங்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

சந்தையில் குறைந்த விலை அண்ட்ராய்ட் ரெப்லட்களின் ஆதிக்கத்தினைக் குறைக்கும் பொருட்டே இதனை அப்பிள் அறிமுகம் செய்ய வுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னரே கூகுள் தனது குறைந்த விலை முதல் டெப்லட்டான Nexus 7 ஐ அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக் கது.

கடந்த சில தினங்களுக்கு முன்னரே கூகுள் தனது குறைந்த விலை முதல் ரெப்லட்டான Nexus 7 ஐ அறிமுகப் படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## பேஸ்புக் 'டிப்ஸ்'



உலகில் பல மில்லியன் கணக் கான பயனர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது பேஸ்புக் நிறுவனம்.

பேஸ்புக்கில் உங்களது நெருங்கிய நண்பருடன் அரட்டை அடித்துக் கொண் டிருக்கும் போது, மற்றவர்கள் தொந் தரவு செய்யாதபடி செய்யலாம்.

இதற்கு முதலில் குறிப்பிட்ட நப ரின் பெயர் மீது கிளிக் செய்யவும். இதற்கு அவர் ஒன்லைனில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

அவர் பெயர்ப் பட்டியலில் இல்லை என்றால் Search-இல் பெயரைக் கொடுத்துத் தேடவும். இப்போது Chat Box ஓபன் ஆகி இருக்கும்.

அதன் பின் Settings icon மீது கிளிக் செய்து வரும் மெனுவில் Go Offine to (Name) என்பதைக் கிளிக் செய்து விடுங்கள். இனிமேல் அவ ருக்கு நீங்கள் எப்போதும் Offline -இல் இருப்பதாகவே தெரியும்.

## திருட்டை தடுக்க முயல்கிறது மைக்ரோ சொப்ட்



புதியதாக கணினி ஒன்று வாங்கு கையில் விண்டோஸ் அதில் பதிந்து கொடுக்கப்படுகிறது. கணினி தயாரிக் கும் நிறுவனங்கள் இதற்கான ஒப்பந் தத்தை மைக்ரோசொப்ட் நிறுவனத்தி டம் மேற்கொண்டு, ஒவ்வொரு கணினிக்கு பதியப்படும் விண் டோஸ் வகைக்கான உரிமத்தைப் பெற்று அதற்கான இலக்கத்தையும், ஆப்பரேட்டிங் சிஸ்டம் டிஸ்க் அல்லது சிஸ்டம் மீட்பதற்கான ரீக வரி டிஸ்க்கினை வழங்குகின்றன.

கணினியை அசெம்பிளிங் செய்து கொடுப்பவர்கள், விண்டோஸ் செயற்படுத்தல் பகுதியின் பைரசி பதிப்பு என்று அழைக்கப்படும் நகல் பதிப்பை பதித்துக் கொடுப்பார்கள்.

இது உரிமம் இல்லை என்பதால், மைக்ரோசொப்ட் இணையத்தளத்தி லிருந்து எந்தச் சேவையையும் பெற முடியாது. இவ்வாறு இயங்குவது ஒரு வகையில் திருட்டு வழி என்றே கூற வேண்டும்.

மைக்ரோசொப்ட் நிறுவனம் இதை னைக் கண்டறிவதற்கெனப் பலரை நியமித்து, அவர்களும் முறையாக உரிமம் இல்லாமல் விண்டோஸ் சிஸ் டம் பயன்படுத்துவோரைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுத்து வருகின் றனர்.

குறிப்பாக நிறுவனங்கள், வர்த் தக மையங்களில் இதுபோல பயன் படுத்துவது கடுமையாகக் கவனத் தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

முறையாக உரிமம் பெற்று, அதற் கான சிடி பெற்றவர்கள் பலர், உரி மம் குறித்த தகவல்களைத் தொலைத்து விடுகின்றனர்.

சி.பி.யு. கேபினில் ஒட்டப்பட்டு வரும் லேபிள் நாளடைவில் கிழிந்து மறைந்து விடுகிறது. இதனை எடுத் துப் பாதுகாத்து வைத்திருக்க வேண் டும் அல்லது கீ எண்ணை எழுதி இருக்க வேண்டும்.

## ஸ்கைப்பில் பதிவு செய்ய

நீங்கள் அனைவரும் skype பயன்படுத்துவீர்கள். அதில் பல நண்பர்களுடன் உரையாடுவீர்கள். வெளி நாடுகளில் உள்ளவர்கள் பெரும்பாலும் தங்கள் உற வினர்களுடன் கதைத்து மகிழவும் போகமுடியாத திருமண நிகழ்வுகள் வேறு பல நிகழ்வுகளைக் காண வும் பயன்படுத்து கின்றனர்.

(காதலர்களின் உரையா டல்கள் உட்பட) இவற்றில் சிலவற்றை பத்திரப்படுத்தி வைக்க விரும்புவர்.

அவர்களுக்கே இந்தப் பதிவு . powergramo pro இந்தமென் பொருளை நிறு வியதும் skype l on செய் யவும். செய்தபின்னர் sky pe இன் மேற்புறத்தே all ow பண்ணுமாறு ஒரு கோரிக்கை வரும் அதனை allow பண்ணுங்கள். இனி உங்களது மென்பொருள் தயார் நிலைக்கு வந்து விட்டது. உங்களுக்கு ve dio தேவையில்லை audio மட்டுமே போதுமானால் அவ் software இன் tools சென்று enable recording இல் தேவையான மாற்றங் களை செய்து கொள்ளுங்கள்.

## அன்ட்ரொய்ட் ஜெலி பீன்




கூகுளில் மொபைல் இயங்குதளமான அன்ட்ரொய்டின் 4.1 ஆவது பதிப்பு ஜெல்லி பீன் என்ற பெயருடன் வெளிவந்துள்ளது.

அன்ட்ரொய்டின் முந்தைய பதிப்புகளை விட இது எவ்வளவு வேகம் கொண்டது என்பதை கூகுள் நிறுவனம் உயர்தர 120 FBS கமரா மூலம் பரிசோதனை செய்துள்ளது.

## கண்பார்வையற்றோருக்கான நவீன கருவி



கண்பார்வையற்றவர்களுக்கு உதவும் வகையில் வர்ணங்களை இனம் கண்டு அதற்கு ஏற்றவாறு மாறுபட்ட இசையை உருவாக்கக் கூடிய Eye Music எனும் நவீன கருவி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருவியானது ஜெருசலேம் நகரிலுள்ள ஹேப்றி பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

ஐந்து வகையான நிறங்களை இனம்கண்டு அவற்றிற்குரிய சமிக்ஞைகளை ஒலி வடிவில் கொடுப்பதற்கென இசைகளை உள்ளடக்கியதாக இந்தக் கருவியில் புரோகிராம் செய்யப்பட்டுள்ளது. EyeMusic கருவியால் இனம்காணக்கூடிய நிறங்களும் அவற்றிற்கான இசைகளும் கறுப்பு நிறத்தை அடையாளம் காட்டும்போது எந்தவிதமான [illegible]. மேலும் நிறங்களை கண்டறிவதற்கென குறித்த [illegible] கமரா ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



கணினி, கைத்தொலைபேசி உற்பத்திகளில் முன்னணியில் திகழும் அப்பிள் நிறுவனத்தின் பிறிதொரு அறிமுகமாக கைகளில் அணிந்து இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய iPhone Spider நவீன கைத்தொலைபேசிகள் அமைந்துள்ளன.

ஏனைய iPhone களைப் போன்றே அனைத்துச் செயற்பாடுகளைக் கொண்டதாகவும் உருவாக்கப் பட்டுள்ள இந்தக் கைத்தொலைபேசியை விசேட பட்டி மூலம் விரல்களுக்கிடையில் மாட்டி மணிக் கட்டில் நிலை நிறுத்த முடியும் என்பது குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி அயான்ஸ் வழங்கும்
Lap Top கணினிகளிற்கான
விசேட சலுகை

எம்மிடம்
Lap Top கணினிகளை
மாதாந்த தவணைக்கட்டண
முறையில்
பெற்றுக்கொள்ளலாம்.



(சி/1475) (15-14)

269, பலாலி வீதி, கந்தர்மடம்
T.P:- 0212220247

# தேர்தல் நெருங்கும் வேளையில் திருமலையில் தமிழர் மீது கெடுபிடி

## குமுறுகிறார் கூட்டமைப்பின் உறுப்பினர் துரைரெட்ணசிங்கம்

திருகோணமலை,ஜூலை13

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நெருங்கும் வேளை திருகோணமலையில் தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகளும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான க. துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார்.

கிழக்கில் மூலை முடுக்கெல்லாம் பௌத்த விஹாரைகளை அமைக்கும் அரசு, தமிழ் மக்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபட அனுமதி மறுத்து வருகின்றது என்றும் அவர் கூறினார்.

இதன் ஓர் அங்கமாக திருகோணமலை மாவட்டம், சம்பூரிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பத்திரகாளியம்மன் கோயிலுக்குச் சென்று மக்கள் வழிபடக் கடற்படையினர் தடை விதித்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

சம்பூர் காளியம்மன் கோயிலுக்கு மக்கள் வழிபடச் செல்ல கடற்படையினர் அனுமதி மறுத்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்பூரிலிருந்து 2006 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இன்றுவரை மீள் குடியேற்றம் செய்யப்படாது அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தொழில் வாய்ப்பின்றி முகாம்களில் அவதிப்படுகின்றனர்.இந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலருணவு நிவாரணங்களும் அரசால் திட்டமிட்டுத் தடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, முகாம்களில் உள்ள இந்த மக்கள் வாரத்தில் ஒரு நாள் அதாவது, செவ்வாய்க்கிழமை மட்டும் சம்பூரிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பத்திரகாளியம்மன் கோயிலுக்குச் சென்று வழிபடக் கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த அனுமதியும் தற்போது மறுக்கப்பட்டுள்ளது.

சம்பூரிலுள்ள காணிகள் தொடர்பில் குறித்த பகுதி மக்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ள காரணத்தினால் நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரை, உள்ளூர் மக்கள் கோயிலுக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் கூறியுள்ளனர் என மக்கள் தெரிவிக்கின்றனர். சம்பூர் காணிகள் தொடர்பில் மக்கள் நீதி மன்றத்தை நாடியுள்ள ஆவேசத்தினாலேயே கடற்படையினர், பொது மக்கள் கோயிலுக்குச் செல்வதைத் தடுத்துள்ளனர் என்பதே உண்மை. தமிழ் மக்கள் தமது சொந்த ஆலயங்களுக்குக்கூட சென்று வழிபட அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது. இது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இது தொடர்பில் நாம் அரச தரப்புடன் பேசுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம்- என்றார்.



இதேவேளை, இந்தக் கோயில் தற்போது உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இல்லை என்று மூதூர் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ச-40)

## மரண அறிவித்தல்



### வைரமுத்து தவமணி

உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து தவமணி (10.07.2012) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவன் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைரமுத்துவின் அன்பு மனைவியும், தனலக்ஷ்மி, காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சரஸ்வதி, இராஜகோபால் ஆகியோரின் அன்புச் சகோதரியும், லோகநாயகி, ஜீவநாயகி (கனடா), விஜயகுமார் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயும், பரமேஸ்வரன் (இலங்கை மின்சார சபை), அருனா (கனடா), மதனராசா (கனடா), ஆகியோரின் அன்பு மாமியும், மகிந்தன் (கனடா), ரீஷாலினி, சயந்தன், தமிழினி, நோயல், றோயல்,மாக்ஸ் (கனடா), அருண் (கனடா), சதீஸ், வினோதினி (கனடா), கிரியாணி, பிரதீஸ், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜோசுவா (கனடா), ஜெய்ஷன் (கனடா), ஜெனுயா (கனடா), ஜனோச் (யா/சென். ஜோன்ஸ் கல்லூரி), கிருஷன், கஜீனா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென் செபஸ்தியர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### பொன்னையா சண்முகநாதன்

(மருதனார்மடம் பசிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் புத்தூர் வீதி மீசாலை வடக்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சண்முகநாதன் நேற்று (12.07.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07. 2012) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3 மணியளவில் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் வீதி,
மீசாலை வடக்கு, மீசாலை (20363) (15)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### Dr.ஆறுமுகம் நடராஜா



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வதிரி ஆடுபாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. ஆறுமுகம் நடராஜா நேற்று (12.07.2012) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-செல்லம்மா தம்பதியரின் மூத்தமகனும் நாகலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராசம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்புச்சகோதரரும் அழகானந்தம் மற்றும் காலஞ்சென்றவர்களான பரமானந்தம், குலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவராஜா (Uk), செல்வராஜா (NZ), வசந்தமலர் (Uk), செல்வறஞ்சினி (Uk), சுகுண றஞ்சினி (Uk), சாந்தறஞ்சினி (Uk), சிறீறஞ்சினி(Uk) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஞானேஸ்வரி, காலாநிதி சிவநடராஜா, சிதம்பரநாதன், சிவகுமாரன், தவராஜா, சபேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கெங்கா, கஜன், துர்க்கா, நிர்ஜா, சிவந்தி, நவீதன், ஜீவன், அபிகரன், நிஷாந்தி, சுகந்தி, பிரதீபன், றஜீவன், அஜந்தி, மயூரன், மேனகா, மீரா, கிருத்திகா, அபீஷ்ணா, அகஸ்தியன், டானியல், ரீனா, றொனி, பராஷா ஆகியோ ரின் அன்பு பேரனும் செபஸ்ரியன், எமிலி, அக்ஷனா, அபீனா, ஆர்யன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவத்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீறுப்பழந்தை,
வதிரி, கரவெட்டி (சி/1472) (15-14)

தகவல்
சிதம்பரநாதன்
(மருமகன்) (C.E.B)



FIRST IN JAFFNA DX7
1440dpi
உயர் தரத்திலான
டிஜிற்றல் பனர் பிறின்ற்
(HIGH QUALITY)
பனர், ஸ்ரிக்கர்
விளம்பர பதாகைகள்
(Name Board, Light Board)
40/=
MOORTHY
DIGITAL PRINT
62/20,STANLY ROAD,JAFFNA
0212221358
(சி/1468)

லிபேட்டி சினிமா அச்சுவேலி
இலங்கை - இந்தியா ஒரேதின வெளியீடு



இலங்கை- இந்திய ஒரே
தின வெளியீடாக
அச்சுவேலி லிபேட்டி
சினிமாவில் பில்லா 2
காட்சிகள்:- 10.30, 2.30,
6.30, 9.30
இன்று 13.07.2012 வெள்ளி
முதல்
(சி/1473) (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WANTED
# ENGLISH TEACHERS
(Full-Time and Part-Time)

Experienced English Teachers are wanted to teach Spoken English and Grammar to school-leavers and workers.

- Experience in English Tuition will be an advantage.
- Salary above Rs. 40 000. per month.
- Working areas Jaffna & Nelliady

(சி/1466)(8-14)

Send your Bio-data to the following address. விளம்பர இலக்கம். 4376
உதயன் பப்பிளிகேசன் No.361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திருமதி மோ.ரவீந்திரன் அவர்களின் அன்பு மாமி திருமதி தங்கமணி ஆறுமுகம் அவர்கள் 11.07.2012 அன்று இறைபதம் எய்தினார். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இராமநாதன் கல்லூரி,
ஆசிரிய நலன்புரி சங்கம்.

(f/1461) (2-6-7)



## 4 ஆம் ஆண்டு நினைவாக...

திருமதி மனோன்மணி இராசரெத்தினம்

திதி: அபரபக்க தசமி



இருவருக்கும் மகளாக
06.05.1920

இறைவனுக்கு மகளாக
28.06.2008

அன்னை நாம் உன்வயிற்றில் அடி உதையிட்டோம் அன்று பின்னைநாள் உன் முலைப்பால் பெற்று நாம் உய்ந்தோம் மண்ணில் கண்ணுளே எமையிருத்தி உன் கைபிசைந் திட்ட அன்னம் எண்ணவே இனிக்குதம்மா.... எனியொரு காலை உன்கை பட்டதோர் உணவு உண்ணப் பாவியர் எமக்குக் காலம் கிட்டுமோ அம்மா.....? மீண்டும் கிடைப்பியோ....? எமது சொத்து எட்டுமோ...? என நாம் எண்ணி ஏங்குநாள் வருடம் நான்காய் எட்டியே போனதம்மா.... உன்னை எண்ணுநாள் அசையாதின்னும் முட்டுதே எமது நெஞ்சை.... முடியவில்லை அம்மா எங்கள் சொத்தெலாம் நீயே தாயே.... சோர்ந்தனம் அமைதிதந்து இத்தினம் எம்கை அன்னம் ஏற்று நீ அமைதி கொள்வாய்.....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவிலே வாழ்ந்து நிற்கும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
மகன்: இ. பரந்ருபசிங்கம்.
021 222 1593,077 6049581

81 ஏ, சீனியர் லேன்,
கலட்டி பிள்ளையார் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(20327)(45,6.7)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
03 ★ 11 ★ 1932



உதிர்வு
13 ★ 07 ★ 2011

திருமதி
இம்மானுவேல் மேரீ லெரீசியா (பபா

எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வமே!
ஓராண்டு சென்றாலும் உமை மறவோம்
அன்பாலே எமை அரவணைத்து
அமுதைப் பொழிந்து எமை வளர்த்தெடுத்து
பண்பாலே எமை வழி நடத்தி
அறுகு போல் வேர் ஊன்றி
ஆலமரம் போல் நிழல் தந்து
நிலையில்லா வாழ்வு தன்னில்
நீங்காத நினைவுகளைத் தந்து எமை
ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
நிலையான வாழ்வு தேடிச் சென்றீரோ?

பஸ்தியாம்பிள்ளை இம்மானுவேல்
(கணவர்)

155, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(20350)(5-6-7)


## யாழ். பட்டதாரிப் பயிலுநர்களுக்கு பொருளாதார அமைச்சின் நியமனம்

### நேர்முகப் பரீட்சை இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 13

பட்டதாரிப் பயிலுநராக யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பட்டதாரிகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பணியாற்ற விருப்பம் தெரிவித்த பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வுகள் இன்று நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இந்த மாதம் 2 ஆம் திகதி 2 ஆயிரத்து 39 பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டு 15 பிரதேச செயலகங்களில் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களுக்கு 6 மாத காலத்துக்கான பயிற்சி நியமனமே வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த வாரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தின் பிரகாரம், பட்டதாரிப் பயிலுநர்களாகப் பிரதேச செலகங்களில் கடமையாற்றும் பட்டதாரிகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பணியாற்ற விரும்புபவர்களுக்கு விசேட படிவம் விநியோகிக்கப்பட்டது.

இதற்கு விண்ணப்பித்த பட்டதாரிப் பயிலுநர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை அவர்கள் பணியாற்றும் பிரதேச செயலகங்களிலேயே நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந்த நேர்முகத் தேர்வு தொடர்பான விவரங்களை நாளை உடனடியாக மாவட்ட செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

## 4 ஆயிரத்து 400 பேருக்கு ஆயுள் வேத சிகிச்சை

### துர்க்காதேவி ஆயுள்வேத ஆஸ்பத்திரியில் காலாண்டில்

யாழ்ப்பாணம், ஜூலை 13

தெல்லிப்பழை துர்க்காதேவி கிராமிய ஆயுள்வேதவைத்தியசாலையில் கடந்த காலாண்டுப் பகுதிக்குள் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் 4 ஆயிரத்து 404 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

ஜனவரி மாதம் 666 பேரும், பெப்ரவரி மாதம் 671 பேரும், மார்ச் மாதம் 792 பேரும், ஏப்ரல் மாதம் 650 பேரும், மே மாதம் 775 பேரும், ஜூன் மாதம் 850 பேரும் என கடந்த 6 மாத காலப் பகுதிக்குள் 4 ஆயிரத்து 404 பேர் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தோல்வியாதிகள், பக்கவாதம், மூட்டு வலி, தொய்வு (ஆஸ்துமா), கை, கால் நடுக்கம், போன்ற தீராத நோய்கள் உட்பட சகல விதமான நோய்களுக்கும் சிகிச்சை வழங்கி வரும் இந்த வைத்தியசாலையில் கடந்த பெப்ரவரி மாதம் முதல் விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை வழங்கும் சிகிச்சை முறையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அக்குபஞ்சர் சிகிச்சை முறையும் கடந்த பெப்ரவரி மாதம் முதல் நடைபெற்று வருவதால், நாளாந்தம் 50 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் பலதரப்பட்ட நோய்களுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ம-14-36)


## கார் விற்பனைக்கு

Toyota, ALLION NZT 240 year 2003,KD தொடர் இலக்க வைத்தியரின் பாவனையில் உள்ள கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 834 9035

(20359)(8-14)



## மணமகள் தேவை

யாழ். கிறிஸ்தவ குடும்பம் 35 வயதுடைய மணமகனுக்கு (கண் வைத்தியர்) ஏற்ற மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். விருப்பமுடையோர் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு -

072 9266477 / 071 0967094

(20355) (8.14.3)



## தவறிவிட்டது

சிற்றம்பலம் புவனேந்திரன் ஆகிய என்னுடைய காப்புறுதி மற்றும் வரி அனுமதிப்பத்திரம் என்பன 02.07.2012 திங்கள் அன்று நாவலர் [illegible] தொடர்பு கொள்ளவும்.

0773089503

(20335) (2-6-7)



## மதுரா அழகுக் கலைப் பயிற்சி நிலையம், கோப்பாய்

கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

### பியூட்டீசியன் டிப்ளோமா கோஸ்

தையல், சாறிவேக்ஸ், ஹான்ட் வேக்ஸ், கேக் ஐசிங், பேசியல், ஸ்ரைட்னிங், பேமிங், பெடிக்கியூர், மெனிக்கியூர், பிம்பிள் ட்றீட்மன்ட், ஸ்கின் அனலைஸிங், வக்சிங், திரெட்டிங் ஸ்கிரப்பிங், பிளக்கெட் ஸ்றிமூவிங், அல்ரா சொனி ட்றீக்மன், கண் கருவளைய சிகிச்சை, சாறி கட்டும்முறை (15), ஸ்பா றீட்மென்ட், நெயில் ஆட், மெகந்தி டிசைனிங், ஹெயா கலறிங், டே மேக்கப், ஈவினிங் மேக்கப், ஓயிலி மேக்கப், பாற்றி மேக்கப், பிறைடல் மேக்கப், வாட்டபுறு மேக்கப், கறர்ரிவ் மேக்கப், டான்ரப் ட்றீக்மன், டான்சிங் மேக்கப் ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன.

பயிற்சியில் இணைய விரும்புவோர்:
(15.07.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 - 12.00 மணி வரை தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும். (பயிற்சிக்காலம் 3 மாதம்)

T.P :077 9362642 ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்

(பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்) பழைய வீதி, கோப்பாய்

(20333)(6-7-8)



## Bachelor of Information Technology (BIT) External Degree OF University Of Moratuwa

Now In Jaffna @ ESOFT Computer Studies (Pvt) Ltd

யாழ். மண்ணில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் ESOFT
புதிய பிரிவுகளுக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

நுழைவுத்தகுதிகள்

உயர்தரத்தில் எந்தத்துறையிலாவது ஒரே தடவையில் 3 பாடச்சித்தி மற்றும் சாதரணதரப்பரீட்சையில் கணித பாடத்தில் "C" தரச்சித்தி.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நாளன்று

- ✓ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (ஆங்கிலம்)
- ✓ கல்விச் சான்றிதழ்கள் (O/L,A/L)
- ✓ NIC பிரதி என்பவற்றை உறுதிப்படுத்தி ஒப்படைக்கவும்.

அத்துடன்,
University of Moratuwa
Bank of Ceylon
A/C No 70993353 எனும் இலக்கத்திற்கு ருபா 750 செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டையும் இணைத்து எமது கிளையில் ஒப்படைக்கவும்.

Application Closing Date
15.07.2012

மேலதிக தொடர்புகளுக்கு : 077 990 5611

(சி/1402)(6-7-8)

ESOFT
The Leader in Professional ICT Education

ESOFT Computer Studies [Pvt] Ltd
17/1,Brown Road, Jaffna.
Hotline:077 3099308 Tel:021 222 4142



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி வ. சிவானந்தம் அவர்களின் தந்தை.

### சங்கரப்பிள்ளை கனகசபை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்,
யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், கொடிகாமம்.

(சி/9338)(6-7-8)



## மரண அறிவித்தல்

### தருமலிங்கம் கிருஷ்ணராசா



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கிராம சேவகரும், முன்னாள் வலி. கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், தற்போதைய வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப்பினருமாகிய தருமலிங்கம் கிருஷ்ணராசா நேற்று (12.07.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தருமலிங்கம்-தருமலஷ்மி தம்பதியரின் மகனும் தவபாக்கியத்தின் கணவரும், காலஞ்சென்ற கனகசபை, சந்திரவதனி ஆகியோரின் சகோதரனும், பார்த்திபன், சோழமாதேவி ஆகியோரின் தகப்பனும், தீபிகா, ஸேனுகயானா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 12.07.2012 வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் ஒப்படைக்கப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்

ஒஸ்கா வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

(20338)(5-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்துக்கொண்டே வஞ்சகம் செய்யும் வடதாரகை

அரசியல்வாதிகள் வரும் போதெல்லாம் மாலை, மரியாதை, மேளதாளம், பொன்னாடை என்றெல்லாம் வரிந்து கட்டிக்கொண்டு செய்துவிட்டு தமது தேவைகளை பௌவியமாக எடுத்துக் கூறுவது நெடுந்தீவு மக்களின் வழமை "உங்கள் துன்பம் எங்களுக்குத் தெரியும் உடனடியாக அவை தீர்த்து வைக்கப் படும்'' என்று உறுதியளிப்பது அரசியல்வாதிகளின் வழமை. அடுத்த நிமிடமே அதை மறந்து விடுவதும் அவர்களின் வழக்கம்.



வந்தியத் தேவர்

மக்கள் சேவையில் ஈடுபட வேண்டிய வட தாரகை, குமுதினிப் படகுகள் கடந்த நான்கு நாள்களாகச் சேவையில் ஈடுபடவில்லை. இதனால் நெடுந்தீவு மக்கள் மாடுகள், சிமெந்து, கருவாடு போன்ற பொருள்களுடன் பொருளாகவே தமது கடல் பயணத்தை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக்கான சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகு பழுதடைந்ததால் இப்போது ஊர்காவற்றுறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. வட தாரகைப் படகை கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை கடற்படையினரிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்பதாக இருந்தது.

இந்த நிலையில் நெடுந்தீவுத்துறைமுகத்துக்கு அது கொண்டுவரப்பட்டதும் மக்களுக்கு வசதியான பயணத்தை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊர்காவற்றுறை பிரதேச சபையில் நடைபெற்ற தீவுப் பகுதி அபிவிருத்திக்கான கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரீன் ஆகியோர் முன்னிலையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பால் அப்போது அங்கே கூடியிருந்த நெடுந்தீவு மக்களின் உச்சி குளிர்ந்ததுதான் மிச்சம். வட தாரகை கையேற்பு இன்னமும் இடம்பெறவில்லை என்பதுடன் இப்போது குமுதினி பழுதடைந்த நிலையில்கூட வட தாரகை சேவையில் ஈடுபடுத்தப்படாது நங்கூரமிடப்பட்டுள்ளது.

எனினும் நேற்று வியாழக்கிழமை நெடுந்தீவுக்கு வரவுள்ள பாப்பரசரின் பிரதிநிதி உள்ளிட்ட ஏனைய நாடுகளின் திருச்சபைப் பிரதிநிதிகளை ஏற்றிக் கொண்டு வருவதாக இருந்தது. அவர்களின் வருகை திடீரென ரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அமைச்சுப் பிரதிநிதிகளை ஏற்றிக் கொண்டு சென்றதாகத் தெரிகிறது.

நெடுந்தீவு மக்கள் கடலைக் கடந்து அடுத்த துறைமுகத்துக்குச் செல்வதற்கு அந்தரித்துக் கொண்டிருக்க, வட தாரகை உல்லாசமாகத் திரிகிறது.

வட தாரகை புதிதாக வந்தபோது அதன் செயற்பாடுகளை ஆரம்பித்து வைப்பது ஆளுநரா, அமைச்சரா என்ற நிலை தெரியாமல் நீண்ட நாள்கள் அது நங்கூரமிடப்பட்டிருந்தது.

அது நங்கூரமிடப்பட்டிருந்த காலத்திலும் மக்கள் தமது பயணத்துக்காகப் பல்வேறு துன்பங்களை எதிர்கொண்டனர்.

இவ்வாறான நிலையில் வடக்கின் வசந்தத்தில் நெடுந்தீவுக்கான கடற்பயணம் முக்களை வருத்திக் கொண்டே இருக்கிறது.

மக்கள் தாங்கள் பயணிக்க வசதியான படகு ஒன்று இன்னமும் தமக்கு கிடைக்கவில்லை என்று அங்கலாய்க்கிறார்கள். பெரும் கடல் கொந்தளிப்பு மற்றும் காற்றுக் காலங்களில் அரச படகுகளின் பழுது என்பது எழுதப்படாத விதியாகிவிட்டது. இதனால் மக்கள் திறந்த படகுகளில் பெரும் சிரமங்களின் மத்தியில் பயணிக்கின்றனர். இப்போது குமுதினி, வட தாரகை இரண்டுமே போக்குவரத்தில் ஈடுபடாதுள்ள நிலையில் தனியார் படகுகளே சேவையை மேற்கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றே.

தனியார் படகுகள் மக்கள் சேவைக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் பார்க்க பொருள்களை ஏற்றி இறக்கி வருமானம் தேடுவதிலேயே குறியாக உள்ளன. பல.நோ.கூ. சங்கப்படகு சமுத்திரதேவாவும் பழுதடைந்துள்ளது.' இந்த நிலையில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை மாடு, சிமெந்து என்பவற்றுடன் பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கியம் நெடுந்தீவு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள் வரும் போதெல்லாம் மாலை, மரியாதை, மேளதாளம், பொன்னாடை என்றெல்லாம் வரிந்து கட்டிக் கொண்டு செய்துவிட்டு தமது தேவைகளை பௌவியமாக எடுத்துக் கூறுவது நெடுந்தீவு மக்களின் வழமை "உங்கள் துன்பம் எங்களுக்குத் தெரியும் உடனடியாக அவை தீர்த்து வைக்கப்படும்'' என்று உறுதியளிப்பது அரசியல்வாதிகளின் வழமை. அடுத்த நிமிடமே அதை மறந்து விடுவதும் அவர்களின் வழக்கம். தங்களது நலனுக்காக நெடுந்தீவுக்கு வரும் இவர்கள் அபிவிருத்தி குறித்த தமது சாதனைகள் எது என எடுத்து விளாசி விட்டு, வந்த காரியம் முடிந்ததும் சென்றுவிடுகின்றனர். மக்களோ ஒழுங்கான பயணம் இன்றி அவலப்படுகின்றனர்.

இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை எந்திரி சுதாகரிடம் கேட்ட போது,

நாங்கள் சனிக்கிழமை தான் வடதாரகைப் படகைப் பொறுப்பேற்கவுள்ளோம். அதுவரை கடற்படையினரே சேவையை மேற்கொள்ளவுள்ளனர். அதனால் ஏன் வடதாரகை மக்கள் சேவையில் ஈடுபடவில்லை என்பது குறித்து தெரியாது'' என்று பதில் கூறினார். ✱

## குடாநாட்டு விவசாயிகளுக்கும் மானிய முத்திரைகள் வழங்குங்கள்

### விவசாய சம்மேளனங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 13

யாழ். குடாநாட்டு விவசாயிகளுக்கும் மண்ணெண்ணெய்க்கான மானிய முத்திரை விநியோகிக்க வேண்டும் என்று விவசாய சம்மேளனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாக விவசாய அமைச்சுக்கும் மகஜர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அனேகமான விவசாயிகள் மண்ணெய் விலை அதிகரிப்பால் மரக்கறி செய்கையில் அதிக நாட்டம் காட்டவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

குடாநாட்டின் மரக்கறி உற்பத்தி மிக மிக அருகி செல்வதால்தான் சந்தைகளில் இந்த உள்ளூரின் மரக்கறி உற்பத்தி வளம் குறைந்தேகாணப்படுகின்றது.

இந்த மாதத்தில் வழமையாகவே குடாநாட்டு மரக்கறி வகைகள் தாராளமாக சந்தைக்கு வந்து சேர்வது வழக்கம். அதனால் விலையும் பெரிதும் வீழ்ச்சியடைந்து காணப்படும். ஆனால் இந்த முறை அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் மிக மிக குறைந்தே சந்தையில் காணப்படுகின்றன. அதன் விலையும் அதிகரித்து காணப்படுகின்றது.

இதற்கு காரணம் குடாநாட்டு உள்ளூர் மரக்கறி உற்பத்தியில் விவசாயிகள் அதிக நாட்டம் காட்டவில்லை. ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 106 ரூபா 60 சதமாக விற்கப்படும் நிலையில் மரக்கறி செய்கைக்கான தண்ணீர் இறைப்புக்கு குறைந்தது நாள் ஒன்றிற்கு பத்து லீற்றருக்கும் மேல் மண்ணெண்ணெய் தேவைப்படுகின்றன.

இந்த மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் மரக்கறி செய்கையில் விவசாயிகள் அதிக நாட்டம் காட்டாது பின்னடிப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மானிய முத்திரை போன்று விவசாயிகளுக்கும் மானிய முத்திரை வழங்க வேண்டும் எனவும் விவசாய சம்மேளனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

குடாநாட்டின் விவசாய நடவடிக்கையை மேலும் ஊக்குவிப்பதற்கு விவசாயிகளுக்கு இந்த மானிய முத்திரைகளை பெற்றுக் கொடுப்பதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

### மனம் தூய்மையானால் இறைவன் ஒளி தருவான்

ஒளி சிந்தவேண்டிய மின் விளக்கில் அழுக்கேறி, ஒளி மங்கலாகத் தோன்றினால் அது மின்சாரத்தின் தவறல்ல. வானொலிப்பெட்டி சரியாகப் படாவிட்டால் மின்சாரம் இசையை விரும்பவில்லை என்று கொள்ளக்கூடாது. நம்முள் இருக்கும் இறைவனின் அருள், நமக்குக் கிடைக்கவில்லை என்றால் அது இறைவனின் குறையல்ல. நம்முடைய மனதில் உள்ள மாசுகளை நீக்கி, தூய்மைப்படுத்திக் கொண்டால், அங்கே இறைவன் ஒளிதருவான். பிரசன்னமாகிப் பாதுகாப்பான்.

நன்றி:- ஞானச்சுடர்

ஞானக்கதிர்




யாழ்ப்பாணம், ஜூலை 13

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. அன்று அதிகாலை 4.30 மணிக்கு உதயக் காலப் பூசையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஸ்நபனாபிஷேகம், காலை சாந்திபூசை, வசந்த மண்டப பூசை, தேர்பவனி, பச்சை சாத்தி தேர் மண்டப பூசை, உச்சிக் கால பூசை, தேரடித்திருவிழா, அர்த்தஜாமப் பூசை, என்பன இரவு 8.30 மணி வரை நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து மறுநாள் 18 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (ம-14)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஜூலை 13

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் சங்கிராந்தி தீர்த்தத்திருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ம-36)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஜூலை 13

கொற்றாவத்தை செட்டித்தறை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 5.45 மணி முதல் இடம்பெறவுள்ளது. சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக் குருக்கள் பாலஸ்தாபன பிரதம குருவாக பூசைகளை நிகழ்த்துவார். (ம-14)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஜூலை 13

நாவற்குழி கலையாபரணக் கோட்டை ஸ்ரீவள்ளி தேவஸேனா சமேத ஸ்ரீவள்ளி வேலவர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்பக் கிரியை வழிபாடுகளில் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் [illegible]பாபிஷேகத்தை தொடர்ந்து [illegible]ஷேகம் இடம்பெறவுள்ளது. (ம-14)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலயத்தின் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இடம்பெறும் திருவிழாக்காலத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை, தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ம-14)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஜூலை 13

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கள்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் திருவிழாக்கள் இடம் பெறவுள்ளன. இடம்பெறும் திருவிழாக்காலத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ம-9)

✱ ✱ ✱

அளவெட்டி கேணிக்கரை நாகதம்பிரான் ஆலயத்தின் ஆனிப்பொங்கல் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு விசேட பூசைகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ம-36)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஜூலை 13

நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன. (ம-41)

✱ ✱ ✱

சிறுப்பிட்டி ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது. எதிர்வரும் 17 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் திருவிழா நிறைவடையும். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனல் பறக்கும் எச்.பி.எல். ஆட்டங்களில் ஜப்னா கிங்ஸ், றோயல் லீடர்ஸ் வெற்றி

பண்டத்தரிப்பு, ஜூலை 13

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஏனைய விளையாட்டுக் கழகங்களுடன் இணைந்து 'உதயனி'ன் ஊடக அனுசரணையுடன் ஏற்பாடு செய்துள்ள யாழ் மாவட்டத்தின் முதலாவது எச்.பி.எல். கரப்பந்தாட்டப் போட்டிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. எச்.பி.எல் தொடருக்காக ஆறு அணிகள் புதிதாக அமைக்கப்பட்டு ,அதில் யாழ். மாவட்டத்தின் முன்னணி கரப்பந்தாட்ட வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். எச்.பி.எல். தொடரின் 6 ஆவது நாள் போட்டிகள் நேற்று முன்தினம் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

**ஜப்னா கிங்ஸ் இலகு வெற்றி**

முதல் போட்டியில் ஜப்னா கிங்ஸ் அணியும் யுத் ஸ்ரார் அணியும் மோதிக்கொண்டன. இந்த போட்டியில் ஆரம்பம் முதல் இறுதிவரை ஜப்னா கிங்ஸ் அணியினரின் கையே ஓங்கியிருந்தது. ஜப்னா கிங்ஸ் அணியினரின் ஆட்டத்திற்கு ஈடு கொடுக்க முடியாத யுத் ஸ்ரார்ஸ் அணியினர் ஆரம்பம் முதலே தடுமாறி வந்தனர். இதனால் 25:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் முதல் சுற்று ஜப்னா கிங்ஸ் அணி வசமானது. தொடர்ந்து இரண்டாம் சுற்றை 25:17 என்ற புள்ளிகள் வித்தியாசத்திலும், மூன்றாம் சுற்றை 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்திலும் ஜப்னா கிங்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது. இதனடிப்படையில் தொடர்ச்சியாக மூன்று சுற்றுக்களையும் கைப்பற்றிய ஜப்னா கிங்ஸ் அணி 3:0 என்ற செற்கணக்கில் இலகுவான வெற்றியைப் பதிவு செய்தது.

**போராடித் தோற்றது ஜப்னா பிரண்ட்ஸ்**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற எச்.பி.எல் இன் இரண்டாவது போட்டி மிகவும் விறுப்பானதாக அமைந்திருந்தது. இதில் றோயல் லீடர்ஸ் அணியும், ஜப்னா பிரண்ட்ஸ் அணியும் மோதிக்கொண்டன. இரு அணிகளும் மாறி மாறி சுற்றுக்களில் வென்று வந்ததால் இறுதிச் சுற்றுவரை போட்டி நீடித்திருந்தது.

முதலாவது சுற்றை கடும் போராட்டத்துக்கு மத்தியில் ஜப்னா பிரண்ட்ஸ் அணி 25:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வென்றது. இரண்டாவது சுற்றிலும் இரு அணிகளும் சமபல ஆட்டத்தையே வெளிப்படுத்தின. எனினும் இறுதி நேரத்தில் அடுத்தடுத்து பெற்ற புள்ளிகள் காரணமாக றோயல் லீடர்ஸ் அணி 28:26 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் இரண்டாம் சுற்றை தனதாக்கியது. தொடர்ந்து மூன்றாம் சுற்று 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஜப்னா பிரண்ட்ஸ் அணியினர் வசமானது. நான்காம் சுற்றும் இறுக்கமானதாக அமைந்திருந்தது. எனினும் இறுதி நேரத்தில் றோயல் லீடர்ஸ் அணி 27:25 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் சுற்றைத் தனதாக்கியது.

போட்டியின் முடிவைத் தீர்மானித்த 5 வது சுற்று மிகவும் பரபரப்பாக அமைந்திருந்தது. இதில் இறுதி வரை எந்த அணி வெற்றி பெறும் என்பதை கணிக்க இயலவில்லை. இரு அணிகளும் மாறிமாறி புள்ளிகளைப் பெற்றவண்ணம் இருந்தன. எனினும் இறுதியில் 15:13 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் றோயல் லீடர்ஸ் அணி வெற்றி பெற்று போட்டியில் வெற்றிவாகை சூடிக்கொண்டது. (ங-130)

## 'எச்.பி.எல்' கரப்பந்தாட்டம்

**இன்று மோதும் அணிகள்**

- ஜப்னா பிரண்ட்ஸ் எதிர் சுப்பர் கிங்ஸ்
- ஜப்னா கிங்ஸ் எதிர் றோயல் லீடர்ஸ்



மாகாண மட்ட தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்ற மன்னார் இலகடிப்பிட்டி றோ.க.த.க. பாடசாலை மாணவர்கள், பாடசாலை அதிபர் பெர்னாண்டோ, பிரதி அதிபர் எமிலியானுஸ்பிள்ளை மற்றும் மன்னார் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் யூலியஸ் கிளிற்றஸ் ஆகியோருடன்.

# தென்மராட்சி ப.தெ.வ.கூ. சங்க கொத்தணி வெற்றி வாகை

பண்டத்தரிப்பு, ஜூலை 13

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி அணி வெற்றி பெற்றுக் கொண்டது.

அணிக்கு ஆறு பேர் பங்கு பற்றும் ஆறு பந்துப் பரிமாற்றம் கொண்டதுமான சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அணியும், தென்மராட்சி ப.தெ.வ. அ.கூ.சங்க கொத்தணி அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ப.நோ.கூ. சங்க அணி 5.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. சுன்னாகம் சார்பில் மயூதன் 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் தென்மராட்சி கொத்தணி அணி சார்பில் சுகிந்தன் மற்றும் ஜினோசன் ஆகியோர் தலா இரு இலக்குகளை கைப்பற்றிக் கொண்டனர்.



47 என்ற ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய தென்மராட்சி கொத்தணி அணி முதலாவது பந்துப்பரிமாற்றத் திலேயே தனது முதலாவது இலக்கை இழந்தது. அணித்தலைவர் நோமன் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். எனினும் தொடர்ந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடிய கிரி 17 ஓட்டங்களையும், சுஜிந்தன் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.ச. கொத்தணி அணி இரு இலக்குகளை மாத்திரம் இழந்து 5.2 பந்துப் பரிமாற்றத்தில் வெற்றி இலக்கை அடைந்தது. (ங-130)

# வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் வலைப்பந்தாட்டத்தில் சம்பியன்



வலி.வடக்கு, ஜூலை 13

மக்கள் வங்கியின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் 14 வயதுப் பிரிவினருக்காக நடத்திய வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாவட்டச் சம்பியனாகியது

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயமும் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மோதிக் கொண்டன.

வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி வீராங்கனைகள் அபார ஆட்டத்தை ஆரம்பச் சுற்றில் வெளிப்படுத்தினர். இதனால் அந்த அணி முதல் பாதி ஆட்டத்தில் 7:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை யில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் அணி விட்டுக்கொடுக்காமல், பதிலடி கொடுத்து விளையாடியது.

இதனால் முதல் பாதி ஆட்டத்தில் மைதானத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி இரண்டாம் பாதி ஆட்டத்தில் பெரும் திக்குமுக்காட வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் தாமும் திருப்பித் தாக்கும் உத்தியில் மெதடிஸ்த அணியினர் இறங்கினர்.இதனால் இரு அணிகளும் தலா 5 புள்ளிகளைப் பெற்றிருந்த வேளை இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

எனவே ஆட்ட நிறைவில் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 12: 6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மாவட்டச் சம்பியனாகியது.

மாவட்ட ரீதியில் முதல் இரு இடங்களையும் பெற்ற இந்த அணிகள் நாளையும் நாளை மறுதினமும் கொழும்பு ரோறிங்டன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் வலைப்பந்தாட்ட போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளன. (ங-86)

# குறையொன்றும் இல்லை; தடை என்றும் இல்லை



முச்சக்கர சைக்கிள் ஓட்டத்தின் போது...

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி கடந்த சனிக்கிழமை நிறுவனப் பணியாளர்களுக்கிடையே முச்சக்கர சைக்கிள் ஓட்டம் மற்றும் ஆண், பெண் இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன. சாதாரண வீரர்களைப் போல இவர்களும் தமது முழுத் திறமையையும் வெளிப்படுத்தினர். இவர்களின் திறன்கள் பார்வையாளர்களை பரவசப்பட வைத்தன. (ங-23-135)



ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டத்தின் போது...



பெண்களுக்கான சைக்கிள் ஓட்டத்தின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி சமநிலை; தொடர் இலங்கையிடம்



இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி, இலங்கை அணியின் மந்தமான துடுப்பாட்டத்தால் சம நிலையில் முடிவடைந்தது.

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி பல்லேகல மைதானத்தில் கடந்த 8ஆம் திகதி ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத் தடுப்பைத் தேர்ந்தெடுத்தது. இலங்கைப் பந்து வீச்சாளர்களின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்கள் பணிந்தனர். அணித் தலைவர் மிஸ்பா உல்ஹக் 40 ஓட்டங்களையும் அசாட் சபீக் 75 ஓட்டங்களையும் அந்த அணி சார்பாக அதிகபட்சமாக எடுத்தனர். இதனால் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 226 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பந்து வீச்சில் இலங்கையின் திஸர பெரேரா 4 இலக்குகளையும் ஹேரத் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு பரணவிதான (75), சமரவீர (73), திஸர பெரேரா (75) ஆகியோர் கைகொடுக்க அந்த அணி முதல் இன்னிங்ஸில் 337 ஓட்டங்களை எடுக்க முடிந்தது. பாகிஸ்தான் அணியின் ஜூனைட்கான் 5 இலக்குகளையும், அஜ்மல் 3 இலக்குகளையும் சரித்திருந்தனர்.

2ஆவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் நிதானமாகத் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியில் அசார் அலி (136) சதம் அடித்து அசத்தினார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹபீஸ் (52) அரைச் சதம் கடந்தார். எனினும் ஏனையோர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். நேற்றுமுன்தினம் 4ஆம் நாள் ஆட்ட நிறைவில் பாகிஸ்தான் அணி 8 இலக்குகளை இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அந்த அணியின் சபீக் 55 ஓட்டங்களுடனும், அக்மல் ஓட்டம் எதனையும் பெறாமலும் களத்தில் இருந்தனர்.

இந்நிலையில் 5ஆவது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. சபீக் - அக்மல் இணை இலக்கைப் பறி கொடுக்காமல் அபாரமாக ஆடியது. சபீக் சதம் அடித்தார். இதனால் பாகிஸ்தான் அணி 8 இலக்குகளை இழந்து 380 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. களத்தில் சபீக் (100), அக்மல் (35) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இலங்கை அணியின் ஹேரத் 4 இலக்குகளையும், டில்காரா பெர்னாண்டோ 3 இலக்குகளையும் வீழ்த்தியிருந்தனர்.



270 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் மந்தமாக ஆடினர். பரணவிதான 22 ஓட்டங்களுடன் வெளியேறினார். சந்திமால் 65 ஓட்டங்களை எடுத்து அஜ்மலின் பந்தில் வெளியேறினார். அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். சமர வீரவும் (10) நிலைக்கவில்லை. எனினும் ஒருபுறம் இலக்குகள் வீழ்ந்தாலும் மறு முனையில் மலை போல சங்ககார அரைச் சதம் கடந்தார். நேற்றைய போட்டி நிறைவில் இலங்கை அணி 4 இலக்குகளை இழந்து, 195 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் 3ஆவது டெஸ்ட் போட்டி சம நிலையில் முடிந்தது. இதன் மூலம் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1-0 என்ற ரீதியில் இலங்கை வெற்றி கொண்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக சபீக்கும், ஆட்டத் தொடர் நாயகனாக சங்ககாரவும் தெரிவாகினர். (ங)

# அழுவதில் என்ன தவறு?

வளர்ந்த ஆண்கள் அழுவது தவறானதல்ல என்று உலகின் முதற்தர ரென்னிஸ் வீரர் ரொஜர் பெடரர் தெரிவித்துள்ளார். சாதாரண மனிதர்களே நீங்கள் என்று வெளிப்படுத்துவதற்கு அழுவது ஒரு சான்றாகும், என்று ரொஜர் பெடரர் தெரிவித்துள்ளார்.


ரென்னிஸ் போட்டிகளின் போதும், தோல்விகளின் போதும் தனது அழுகையை வெளிப்படுத்தும் பழக்கத்தைக் கொண்ட ரொஜர் பெடரர், அண்மையில் தனது 7 ஆவது விம்பிள்டன் பட்டத்தை வென்ற போதும் அழுகையை வெளிப்படுத்தியிருந்தார். அவரது வழமையான அளவில் அது காணப்படாத போதிலும் அவர் தனது கருத்துக்களை அழுகைக்குச் சார்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

விம்பிள்டனின் இறுதிப் போட்டியின் பிரமாண்டத்தைக் கருத்திற் கொள்ளும் போது இறுதிப் போட்டியில் பங்குபற்றிய அன்டி முர்ரேயிற்கு அல்லது தனக்கு அந்தப் போட்டி யின் முடிவு மிகுந்த கவலையானதாக, அதிகளவு அழுகைகளை வரவழைப்பதாக அமையும் என்பதை உணர்ந்திருந்ததாகத் தெரிவித்த ரொஜர் பெடரர், அழுகையை வெளிப்படுத்துவது ரசிகர்களுடன் அதிகம் இணைப்பதாக உணர்வதாகவும் தெரிவித்தார்.

வீரர்கள் அழும்போது ரசிகர்களிடம் தொடர்புகளைப் பேணுவதாகத் தெரிவித்த ரொஜர் பெடரர், வீரர்கள் வெற்றிபெறுவது பற்றியும் தோல்வியடைவது பற்றியும் கவனத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ரசிகர்கள் உணர்ந்து கொள்வார்கள் எனவும் தெரிவித்தார். ஆகவே ரசிகர்கள் எவ்வாறு யோசிக்கிறார்கள் என்பது பற்றி வீரர்க ளாகிய தாங்களும் கரிசனை கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டரை வருடங்களாக வெல்ல வேண்டிய போட்டிகளையும், ஆதிக்கம் செலுத்திய போட்டிகளையும் தோல்வியடைந்த அனுபவத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டிக்கான பாடங்களைப் படித்துக் கொண்டதாகத் தெரிவித்த அவர், கடந்த கால சம்பவங் களிலிருந்து பாடங்களைப் படித்துக்கொள்வது முக்கியமானது எனத் தெரிவித்தார். (5)

# கெய்ல் சோபிக்கவில்லை மே.தீவுகள் தோல்வி



மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான 3ஆவது ஒரு நாள் ஆட்டத்தில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது. நியூசிலாந்து அணி 88 ஓட்டங்களால் இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 பந்து பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி தொடர்ச்சியாக இலக்குகளை இழந்த போதிலும் பின்னர் மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் இந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற உதவினர்.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக ரொப் நிக்கல் 59 ஓட்டங்களையும், நதன் மக்கலம் 50 ஓட்டங்களையும், பி.ஜே.வற்லிங் 40 ஓட்டங்களையும், டானியல் பிளைன் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ருசல் 4 இலக்குகளையும், சுனில் நரைன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

250 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 34.3 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்று 88 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

அந்த அணி சார்பாக ருசல் 42 ஓட்டங்களை 24 பந்துகளில் ஆட்டமிழக்காமல் பெற்றதைத் தவிர எந்தவொரு வீரரும் 20 ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை. கெய்ல் 11 ஓட்டங்களுடன் ஆரம்பத்திலேயே ஆட்டமிழந்திருந்தார்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக ட்ரென்ட் போல்ட், ஜேக்கப் ஓரம், நதன் மக்கலம் ஆகியோர் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக ரொப் நிக்கல் தெரிவான அதே வேளை, 5 ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரில் 3 ஆட்டங்களின் பின்னர் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. (5)

# 41 வருடங்களின் பின்னர் படுதோல்வியைச் சந்தித்தது ஆஸ்திரேலியா



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்து 5 ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடியது. முதல் 3 ஆட்டங்களிலும் இங்கிலாந்து வென்ற நிலையில் 4 ஆவது ஆட்டம் மழையால் ரத்தானது. இந்த நிலையில் கடைசி ஆட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

மழை காரணமாக 32 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டமாக நடத்தப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 7 இலக்குகள் இழப்புக்கு 145 ஓட்டங்கள் எடுத்தது.

ஜோர்ஜ் பெய்லி 41 பந்துகளில் 2 சிக்சர்கள், 3 பவுண்டரிகளுடன் 46 ஓட்டங்களும், வோர்னர் 32, ஸ்மித் 21 ஓட்டங்களும் எடுத்தனர். இங்கிலாந்து தரப்பில் போப்ரா, ரெட்வெல் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

மழை குறுக்கீட்டால் 'டக்வோர்த் லூயிஸ்' விதிப்படி இங்கிலாந்து அணிக்கு 29 பந்து பரிமாற்றங்களில் 138 ஓட்டங்கள் எடுக்க வேண்டுமென்று இலக்கு மாற்றி அமைக்கப்பட்டது.

தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து 27.1 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 138 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. குக் 58 ஓட்டங்களும், ரவி போப்ரா 56 பந்தில் 5 பவுண்டரிகளுடன் 52 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்த வெற்றியால் இங்கிலாந்து அணி ஒரு நாள் தொடரை 4-0 என்று வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

ஒரு நாள் போட்டித் தொடரில் ஆஸ்திரேலிய அணி 41 வருடங்களுக்கு பிறகு படுதோல்வியைச் சந்தித்துள்ளது. அண்மைக் காலமாக வெளிநாட்டு சுற்றுப்பயணங்களில் இப்படியொரு மோசமான தோல்வியை ஆஸ்திரேலியா பெற்றதில்லை. இதனால் அணித்தலைவர் கிளார்க் மீது கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. (5)

# நான் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை



இங்கிலாந்து அணிக்கெதிராக ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரை 4:0 என்ற கணக்கில் தோல்வியடைய வேண்டி ஏற்படும் என்று ஒரு போதும் எதிர்பார்த்திருக்கவில்லை. இவ்வாறு ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்தார். அத்தோடு ஆஸ்திரேலிய அணி - இதைவிடச் சிறப்பாக விளையாடியிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அணியாக அனைவரும் இணைந்து ஒன்று சேர்ந்து இந்தத் தோல்வி குறித்து ஆராய வேண்டியிருப்பதாகத் தெரிவித்த மைக்கல் கிளார்க், கடந்த 12 மாதங்களாக அணியின் திறமை வெளிப்பாடுகளை ஆராய்ந்து முன்னேற வேண்டிய இடங்கள் குறித்து ஆராய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தயார்படுத்தல்களில் தவறுகள் எவையும் நிச்சயமாக இல்லை எனத் தெரிவித்த அவர், தங்களது பயிற்சிகள் சிறப்பானவையாகக் காணப்பட்டதாகவும், அத்தோடு பயிற்சிப் போட்டியில் மிகச்சிறந்த கிரிக்கெட் விளையாட்டை வெளிப்படுத்தியதாகவும் தெரிவித்த அவர், அவற்றை உண்மையான போட்டியில் வெளிப்படுத்த முடியாது போனதாகத் தெரிவித்தார்.

எனினும் காரணங்களை வெளிப்படுத்தி தோல்விகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

அத்தோடு இங்கிலாந்து அணிக்கு அதிக பாராட்டுக்களையும் வழங்க வேண்டும் எனத் தெரிவித்த மைக்கல் கிளார்க், 4 போட்டியிலும் இங்கிலாந்து அணி தங்களை முழுமையாகத் தோற்கடித்ததாகத் தெரிவித்தார். அவர்கள் தொடர்ச்சியாகச் சிறப்பான விளையாட்டை வெளிப்படுத்தியதாகத் தெரிவித்த அவர், இங்கிலாந்தின் பந்துவீச்சாளர்கள் பொறுமையுடன் பந்துவீசியதாகவும், அவர்களின் துடுப்பாட்ட வீரர்கள் [illegible] கொடுத்ததாகவும் தெரிவித்தார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகக் கிண்ணத் தொடரில்

# மிஸ்பா 'அவுட்'



எதிர்வரும் செப்ரெம்பரில் இலங்கையில் இடம் பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடருக்கான பாகிஸ்தானின் தற்காலிக அணி அறிவிக் கப்பட்டுள்ளது. 30 பேர் கொண்ட அணியாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த அணி, இதன் பின்னர் 15 பேர் கொண்ட அணியாகக் குறைக்கப்படவுள்ளது. இந்த 30 பேர் கொண்ட அணியில் பாகிஸ்தான் அணியின் தற்போதை ஒரு நாள் மற்றும் டெஸ்ட் அணித்தலைவர் மிஷ்பாவின் பெயர் இடம்பெறவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில் பாகிஸ் தான் அணி சார்பாக அண்மைக்காலமாக போட்டியில் பங்குபற்றத் தேர்வுசெய்யப்பட் டிருக்காத இலக்குக் காப்பாளர் கம்ரன் அக்மல், சகலதுறை வீரர் அப்துல் ரஷாக், ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் இம்ரான் நஷீர் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதில் கம்ரன் அக்மல் சூதாட்டம், போட்டி நிர்ணயம் சம்பந்தமான சந்தேகங்கள் காரண மாக அணியில் இணைத்துக் கொள்ளப் படாது தவிர்க்கப்பட்டு வந்தார். சகலதுறை வீரர் அப்துல் ரஷாகிற்கு அணியில் திறமை அடிப்படையில் இடம் வழங்கப்பட முடியாது எனத் தெரிவிக்கப்பட்டு வந்தது.

அறிவிக்கப்பட்டுள்ள 30 பேர் கொண்ட அணி :

மொஹமட் ஹபீஸ், அஹமட் சஷாத், காலித் லத்தீப், நசீர் ஜம்ஷத், இம்ரான் நஷீர், ஷஷைப் ஹசன், அவைஸ் ஸியா, சர்ஜீல் கான், உமர் அக்மல், அசத் சபீக், ஹரிஸ் சொஹைல், சொய்ப் மலிக், ரமீஷ் ராஜா, சயிட் அப்ரிடி, ஹம்மாட் அஷாம், அப்துல் ரஷாக், உமர் குல், மொஹமட் சமி, சொஹைல் தன்வீர், யசீர் அரபாத், வகாப் றியாஸ், ஜூனைட் கான், அய்ஸஸ் சீமா, அன்வர் அலி, சயீட் அஜ்மல், அப்துர் ரெக்மான், ராஷா ஹசன், சப்ராஷ் அஹமட், ஷகீல் அன்சர். (5)

**கம்ரன் அக்மல் சூதாட்டம், போட்டி நிர்ணயம் சம்பந்தமான சந்தேகங்கள் காரணமாக அணியில் இணைத்துக் கொள்ளப்படாது தவிர்க்கப்பட்டு வந்தார். சகலதுறை வீரர் அப்துல் ரஷாக்கிற்கு அணியில் திறமை அடிப்படையில் இடம் வழங்கப்பட முடியாது எனத் தெரிவிக்கப்பட்டு வந்தது**



# கை, கால் கட்டி சோதனை!

## பொலிஸார் மீது பிங்கி சித்திரவதைப் புகார்

பொலிஸார் எனது கை, கால்களை கட்டி வலுக்கட்டாயமாக சோதனை செய்தனர். நான் கதறி அழுத போதும், யாரும் கண்டுகொள்ளவில்லை, என்று பாலின சர்ச்சையில் சிக்கியுள்ள இந்திய தடகள வீராங்கனை பிங்கி பிரமானிக் சோகத்துடன் தெரிவித்தார்.

மேற்கு வங்கத்தை சேர்ந்தவர் பிங்கி பிரமானிக். ஆசிய தடகளம் உட்பட பல் வேறு போட்டிகளில் தங்கம் வென்றவர். இவர் ஒரு ஆண் என்றும், தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், பெண் ஒருவர் முறைப்பாடு செய்தார். இதன் அடிப்படையில் கைது செய் யப்பட்டு, நீதிமன்ற காவலில் வைக் கப்பட்டார்.

இவரை பொலிஸார் மிக மோசமாக நடத்துவதாக கூறி மனித உரிமை அமைப்புகள் சார்பில் பொதுநல வழக்கு தொடுக்கப்பட்டது. உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று அரசியல் கட்சிகளும் வலியுறுத்தின. இதனிடையே, நீதிமன்றம் பிங்கிக்கு பிணை வழங்கியது. 26 நாள்கள் சிறை வாசத்துக்கு பின்னர் நேற்று முன்தினம் விடுதலையான இவர், பொலிஸார் தன்னை பல்வேறு விதத்திலும் கொடு மைப்படுத்தியதாக குற்றம்சாட்டினார்.

" பாலின சோதனைக்காக பொலிஸார் எனது கை, கால்களை கட்டி, தனியார் வைத் தியசாலையில் வலுக்கட்டாயமாக பரி சோதனை செய்தனர். நான் தொடர்ந்து அழுது, எதிர்ப்பைத் தெரிவித்தேன். ஆனால், நான் சொல்வதை கேட்கவில்லை. என் மீது முறைப்பாடு கொடுத்தவர் எனக்காக சிறிய வேலைகள் செய்தவர். நீண்ட நாள்களாக என்னிடம் இருந்து பணம் பெற முயன் றார். ஆனால் நான் கொடுக்கவில்லை. எனவே வேறுவழியில் பழிதீர்த்துக் கொண்டுள்ளார்.

அந்தப் பெண்ணையும் பரிசோதனைக்கு உட்படுத்துங்கள் என்று பொலிஸாரிடம் கேட்டுக் கொண்டேன். அதை ஏற்கவில்லை. என்னை மட்டும் ஏன் இவ்வளவு அலைக்கழிக்கிறார்கள் என்று தெரிய வில்லை. விடுதலையான நிலையில், என் வீட்டின் சாவியை கூட 4 மணி நேரத்துக்கு பின்னர் தான் பொலிஸார் தந்தனர்.

மேற்குவங்க விளையாட்டுத்துறை அமைச்சரை, என் தந்தை ஏற்கனவே சந்தித்தார். நானும் விரைவில் சந்திக் கவுள்ளேன். இந்தப் பிரச்சினையில் விசா ரணை நடத்தப்பட வேண்டும். எனக்காக ஆதரவு அளித்த அனைவருக்கும் நன்றி. இந்த அக் னிப் பரீட்சையில் இருந்து விரைவில் மீள்வேன், இவ்வாறு பிங்கி கூறினார். (5)

**கணினி ரைப்செற்றிங் செய்வதில் அனுபவம் உடையவர்கள் தேவை**

**தொடர்பு - 0772174751**

(20361) (14.5)

**கணக்கீடு**

A/L 2013
பங்காளன் சேரல்
ஆரம் - நாளை 5pm

A/L 2014
கணக்கீட்டுச் சமன்பாடு
ஆரம் - நாளை 2pm

S.தவா

யூனிவேர்சல்
சுந்தர்மடம்

(20328) (6.3.7)

**வெளிவந்துவிட்டது**

க.பொ.த (சா/த) பரீட்சை - 2012 யாழ் முன்னணி ஆசிரியர்களின் தயாரிப்பில் முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன் மாதிரி வினாப்பத்திரத் தொடர்- 01

இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்

பூபாலசிங்கம்- யாழ்நகர்
அறிவுநதி- கிளிநொச்சி
திருமகள்- வவுனியா

(சி/1471) (15-14)

**விற்பனையாகிறது**

**Royal College**

மாதிரிவினாக்கள்
* விஞ்ஞானப்பிரிவு
* கணிதப்பிரிவு
* வர்த்தகப்பிரிவு

பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.

(சி/1470) (14)

**பணியாளர்கள் தேவை**

கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் A9 ஸ்பொட் கெஸ்ட் ஹவுஸு க்கு சகல தேவைகளுக்குமான அனுபவம் வாய்ந்த ஆண், பெண் பணியாளர்கள் தேவை.

A9 ஸ்பொட்
இல- 158 A9 வீதி,
தொண்டமான் நகர்,
கிளிநொச்சி.

தொடர்புகளுக்கு -
077 1988083
077 3366446

(19282) (6.7.3)

**போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்**

* முகாமைத்துவ உதவியாளர் திறந்த பரீட்சை ஒவ்வொரு ஞாயிறும் 1மணி
* முகாமைத்துவ உதவியாளர் மட்டுப்படுத்தப்பட்டது ஒவ்வொரு ஞாயிறும் 11மணி
* வினைத்திறன்காண் தடைப்பரீட்சை ஞாயிறு 11மணி - 1மணி யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்.

(சி/1480) (6.7.3)

**கணக்கீடு**

A/L 2014
கணக்கீட்டுச் சமன்பாடு
ஆரம் - இன்று 8pm

A/L 2013
பங்குடமை
ஆரம் - நாளை 8am

S.தவா

NIRU கோண்டாவில்

(20329) (6.3.7)

**CIMA பெறுபேற்றில் MCS சாதனை**

நேற்று வெளியான **CIMA Operational Level, Managerial Level** பாடநெறிகளில் **MCS** நிறுவன மாணவர்கள் சாதனைச் சித்திகளை பெற்றுள்ளனர். மாணவர்கள் சித்தி வீதம் முறையே F.M(67%), F.O(80%), P.O(70%),E.O(66%). இவ் உன்னத பெறுபேற்றுக்காக அர்ப்பணிப்புடன் உழைத்த விரிவுரையாளர்களுக்கும் சித்திபெற்ற மாணவர்களுக்கும் எமது பாராட்டுக்கள். **MCS(**CIMA Listed College) 324, பலாலி வீதி பரமேஸ்வரா சந்தி யாழ்ப்பாணம்.T.P 772 395 895

**ஷாம்சன் இங்கிலிஷ் - 3மாத பயிற்சிநெறி**

எந்தவொரு குழந்தையும் 2 தொடக்கம் 4 வயதுக்குள் தன் தாய் மொழியைப் பேசப் பழகிக்கொள்கிறது. தமிழ்க்குழந்தைகள் தமிழைப் பேசப்பழகுகின்றன. ஆங்கிலக் குழந்தைகள் ஆங்கிலத்தைப் பேசப்பழகுகின்றன. 2 வருடத்தில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை ஏன் இன்று வரை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது.

தவறான வழியில் ஆங்கிலத்தை கற்றுக்கொண்டதனாலேயே அது உங்களுக்கு கடினமாக இருக்கின்றது. எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சி நெறியில் இலக்கணமோ எழுத்துப் பயிற்சியோ நாம் வழங்குவதில்லை மாறாக ஏனையவர்களுடன் உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்ததுவதன் மூலமே ஆங்கிலம் பழக்கப் படுத்தப்படுகின்றது. இது குழந்தைகள் தம் தாய் மொழியைப் பழகுவதை அடிப்படையாகக் கொண்டது.

எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களும் தற்போது ஆங்கிலத்தில் சரளமாகக் பேசுகின்றனர். நீங்களும் இப் பயிற்சி நெறியில் இணைய விரும்பினால் (14.07.2012) இல் ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணையுங்கள்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 09 - 11
பிரிவு II 11 - 01
பிரிவு III 02 - 04

**3 மாத பயிற்சி நெறிக்கட்டணம் ருபா 3000.00**

பயிற்சி நெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு மூன்று மாத பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பித் தருவதற்கான உத்தரவாதம் (முதல் வகுப்பு இலவசம்)

**SAAMSON ENGLISH** 279, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி பின்புறம்) தொ.பே. 0776214567

**வெளிவந்து விற்பனையாகிறது**

**G.C.E. A/L 2012 Model paper with Answers**

மாணவர்களது இறுதி நேரத் தயார்படுத்தலை இலகுவாக்கும் பொருட்டு பல வருடகற்பித்தல், புள்ளியியல் அனுபவம் வாய்ந்த முன்னனி ஆசிரியர் குழுக்களின் உதவியுடன் (வடக்கு, கிழக்கு, கொழும்பு)

மாதிரி வினாத்தாள்கள் விடையுடன்

* கணிதப்பிரிவு
* கலைப்பிரிவு
* விஞ்ஞானப்பிரிவு
* வர்த்தகப்பிரிவு

மிகவும் சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டுளது

சகானியா வெளியீடுகள்
SAKANIYA PUBLICATION COLOMBO -06
T.P- 0773613285

முன்னனி புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(சி/1489) (14.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org